கனடாவின் மூத்த தமிழ் இதழ்

19 வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338
416 .724 .7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்



நதி 19 | பாலம் 13 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JULY 01, 2009


# நகரபிதாவின் ஆவேசம்!



ரொறன்டோ நகரம் கழிவுகளாலும், குப்பைகளாலும் துாநாற்றம் வீச ஆரம்பித்துள்ளது..

ரொறன்டோ நகரசுத்தி தொழிலாளர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதன் காரணமாக பொதுமக்கள் தமது குப்பைகளையும், கழிவுகளையும் வீதிகளில் எறிந்து வருகின்றனர். இவை அகற்றப்படாமல் வீதிகளிலேயே கிடக்கின்றது. இது பொதுமக்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் பெரும் அருவருப்பை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறு வீதிகளில் குப்பைகளையோ, கழிவுகளையோ எறிவது சட்டப்படி குற்றமாகும். ரொறொன்ரோ மேயர் டேவிட் மில்லர் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகளில் ‘தயவு செய்து வீதிகளில் இவற்றை எறிய வேண்டாம்’ என்று கேட்டுள்ளார்.

இந்த வேலை நிறுத்தத்தால் கனடா தின கொண்டாட்டங்களும் இரத்துச் செய்யப் பட்டுள்ளது. இதை விட Garbage, recycling and compost pickup, City-run daycare centres, Water and sewer work, Swimming pools, Summer camps, Community recreation centres, Museums and galleries, Toronto Islands ferries, Some libraries என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர்களின் சங்கத்தின் நடவடிக்கை யால் ரொறொன்ரோ நகரபிதா டேவிட் மில்லர் ஆவேசமடைந்துள்ளார். தனது மிகக்கடுமையான வார்த்தைப் பிரயோகத்தையும் வெளிப்படுத்தி யுள்ளார். ஏறத்தாள ஒரு கிழமைக்கு முன்பாக 24,000 நகர தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். யூன் 22, 2009 இற்கு முன்பாக 18,000 தொழிலாளர்களைக் கொண்ட Local 79 யூனியனின் பதில் மிகவும் காலம் தாழ்த்தி வந்ததால் டேவிட் மில்லரின் ஆவேசமான வசனம் வெளிவந்துள்ளது. இதற்கு பதிலளித்த Local 79 யூனியனின் தலைவர் ஆன் டெம்பின்கி ரொறொன்ரோ நகரத்தின் பிதாவின் கூற்றை நிராகரித்துள்ளார்.

தொழிலாளர்களின் தொழில் ஸ்திரத்தன்மை, தொழிலில் மூத்தவர்களிற்குரிய சலுகை மற்றும் நோயினால் பாதிக்கப்படுகின்ற காலத்தில் எடுக்கப்படாத நாட்களை ஓய்வுபெறும்போது பணமாகப் பெறுதல் போன்றவற்றை முன் வைத்து இந்த வேலைநிறுத்தம் தொடர்கிறது. நாம் எந்த நேரமும் பேச்சு வார்த்தைக்கு ஆயத்தமாக இருப்பதாகவும் ஆனால் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளவர்கள் கேட்பதைக் கொடுக்கும் நிலையில் ரொறொன்ரோ நகரத்தின் பொருளாதார நிலைமை இல்லையென நகரபிதா கூறியுள்ளார்.

அப்படியாயின் ரொறொன்ரோ நகர சபை அண்மையில் தங்களிற்குரிய வருடாந்த சம்பளத்தை அதிகரத்தை எவ்வாறு நியாயபப்படுத்தலாம் என சிலர் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

# அச்சத்தில் வாழும் இலங்கைத் தமிழர்!

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் உதயன் பத்திரிகைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மக்களிடம் அச்சத்தை உருவாக்கி உள்ளது என்று தமிழ் கூட்டமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

குடாநாட்டுப் பத்திரிகைகள் எரிக்கப்பட்ட இரண்டு நாள்களுக்குள் “உதயன்” பத்திரிகைக்கும், பணியாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் யாழ். மாநகர சபைத்தேர்தல் தொடர்பாகவும் குடாநாட்டு நிலைமை தொடர்பாகவும் மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் “நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு” என்ற மர்ம அமைப்பை அல்லது அதன் கீழ் உள்ளவர்களை பொலிஸ் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. இது அரச தரப்பின் மீதும், அவர்களது நடவடிக்கைகள் மீதும் நம்பிக்கையீனங்களைத் தோற்றுவிக்கின் றது. மாநகர சபைத் தேர்தல் நடக்கவிருக்கும் இச்சமயத்தில் இவ்வாறான வன்முறைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிக வன்மையாகக் கண்டிக்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.

“அரச பாதுகாப்பு நிறுவனங்கள் தொடர்ந்தும் “இனந் தெரியாதவர்கள்” இச் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதாக சொல்லித் தப்பிக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. “நாட்டைக்காக்கும் தமிழர் கூட்டமைப்பின்” தொடர்ச்சியான மிரட்டலானது ஜனநாயகம், அமைதி, சமாதானம், அபிவிருத்தி ஆகிய அனைத்துக்குமே தடையாக இருக்கும். இதனைக் கவனத்தில் எடுத்து இந்த மிரட்டல்களுக்கு முடிவுகட்டும்படி பாதுகாப்புத் தரப்பினரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கின்றது என்றுள்ளது”

தற்சமயம் இலங்கை முழுவதிலும் தமிழர்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றார்கள்.

13வது அரசியல் சாசனத் திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த அரசாங்கம்


தொடர்ச்சி 03ஆம் பக்கம்



துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM
Veedu Mortgages Inc.

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

SATHYA SAIRAM DRIVING SCHOOL
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

ONTARIO FLORISTS
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, கோவில் மாலை, Funeral services ஆகியவற்றிக்கு வேண்டிய அனைத்து புத்தேவை களும் பூர்த்தி செய்து தரப்படும்.
கோவில்களுக்கு ஒரு வருடம் மாலை பெற்றால் 3 மாதம் இலவசம்.
647.351.0799/ 647.201.3111
24 HRS. SERVICE
2625 Eglinton Ave. E, #6

REALTY EXECUTIVES
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
9889 Markham Rd. (Hwy 48), Suite 209 Markham ON L6E 0B7

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச் சந்தையும்

கனடாவில் வசிக்கும் நமக்கு, கனடிய டொலரின் மதிப்பு மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது இல்லையா? உறவினர்களுக்குப் பணம் அனுப்புவதனாலும் சரி, நாம் வெளிநாடுகளுக்கும் பயணப்பட்டாலும் சரி, இல்லை நமது சேமிப்பை ஒன்றும் செய்யாமல் உள்ளூர் வங்கியில் போட்டு வைத்திருந்தாலும் சரி கனடியடொலரின் மதிப்பு நம் வாழ்வையும் பாதிக்கின்றது. இதுதான் உண்மை.

கடந்த ஆறுமாதங்களில் அமெரிக்க டொலருக்கு எதிரான அதன் மதிப்பு ஒன்பது செண்டுகள் கூடி பிறகு நான்கு செண்டுகளை இழந்து, இக்கட்டுரை எழுதப்படும் சமயம் ஒரு கனடிய டொலர் 86 அமெரிக்க செண்டுகளாக உள்ளது.



அமெரிக்க டொலரும் கனடிய டொலரும் ஒன்றுக்கு ஒன்று என்ற வீதத்தில் வருமா? அதுதான் இப்போதைய கேள்வி. வரும் என்று நான் நம்புகிறேன். இன்னும் ஒன்றிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் இது நிகழலாம்.

சரித்திரத்தைச் சற்றே திரும்பிப் பார்ப்போம். அமெரிக்க டொலருக்கு எதிராக கனடிய டொலர் அடிமட்டத்தைத் தொட்டது. ஜனவரி 21, 2002. 61.79 அமெரிக்க செண்டுகளுக்கு 1 கனடிய டொலரை அப்போது வாங்க முடிந்தது. அதன்பிறகு செப்ரெம்பர் 2007 வரை சிறு சிறு ஏற்ற இறக்கங்களுடன் பொதுவில் ஏறிக் கொண்டுதான் இருந்தது. அதன் உச்சம் ஒரு அமெரிக்க டொலருக்கு 1.10 கனடிய டொலர்கள் என்பதே. அது நிகழ்ந்தது செப்ரெம்பர் 2007இல். பிறகு கனடிய டொலரின் சரிவு திரும்பவும் நிகழ்ந்தது. சரிவு 0.76 அமெரிக்க டொலருக்கு ஒரு கனடிய டொலர் என்ற அளவுக்கு நிகழ்ந்து. இப்போது மீண்டும் கனடிய டொலரின் மேல் நோக்கிய பயணம் ஆரம்பமாகியிருப்பதாக தோன்றுகின்றது.

தங்கம், செம்பு, எண்ணை என்று பல பொருட்களின் விலை உலகச் சந்தையில் அமெரிக்க டொலரிலேயே நிர்ணயிக்கப்படு கின்றது. அமெரிக்க டொலர் பலவீனப்படும் போதெல்லாம் இப்பொருட்களின் விலை ஏறுவதும், டொலர் உறுதியாகும் போதெல்லாம் பொருட்களின் விலை இறங்குவதும் உலகச் சந்தையில் தினம் நாம் காண்கின்ற ஒன்று.

கனடாவோ கனிம வளம் நிறைந்த நாடு. கனடாவின் கனிம வளங்கள், அமெரிக்காவைக் காட்டிலும் கூடுதலானதாகவே கணக்கிடப்படுகின்றது. மேலும் அமெரிக்க டொலருக்கு உள்ள சர்வதேச நாணய அந்தஸ்து, கனடிய டொலருக்கு இல்லை. அந்த அந்தஸ்துக்கு கனடிய டொலர் எப்போதும் முயற்சி செய்ததாகவும் தெரிவதில்லை. ஆனால் அதேசமயம் சரித்திர ரீதியாக கனடியப் பொருளாதாரம் வெகுவாக அமெரிக்கப் பொருளாதாரத்தைச் சார்ந்தே இருந்துள்ளது. அமெரிக்க டொலருக்குச் சவால் விடும் ஒரு நாணயம் இன்று உள்ளது என்றால் அது 'யூரோ' தான். போகட்டும். நமது நிதியத்துக்கு நமது கனடிய டொலரை எப்படிப் பயன்படுத்தலாம் என்று பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம். நமது சிந்தனையை அதற்கேற்ப இங்கே கட்டுப்படுத்திக் கொண்டு, மேலே தொடர்வோம்.

கனடிய டொலர் உறுதிப்படும், மதிப்பு அதிகரிக்கும் என்று கருதினால் அமெரிக்க டொலர்களில் முதலீடு செய்வது என்பதைத் தவிர்க்க வேண்டுமா? அது அவரவரின் சேமிக்கும் திறனையும், சேமிப்பின் அளவையும் பொறுத்தது. ஆனாலும் ஓரளவுக்கு அமெரிக்கப் பங்குகளிலும் முதலீடு செய்து வருவதில் பயன் விளையலாம். வாழ்வில் எதற்கும் உறுதி கிடையாது. அதனால் இங்கு சொல்லப்படுபவற்றிற்கும் எந்த உறுதியும் தர இயலாது.

கனடிய டொலர் உறுதிப்படும் போது குறைந்த விலையில் பல அமெரிக்கப் பங்குகளை வாங்க முடியும். அப்படி வாங்குகையில் உலக அரங்கில் பல நாடுகளிலும் தொழில், வணிகம் புரியும் அமெரிக்க கம்பனிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் பங்குகளை வாங்கலாம். அத்தகைய கம்பனிப்பங்குகளின் மதிப்பு தொலை நோக்கில் உலக அரங்கில் அவற்றிற்கு அமையும் இலாப நட்டங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். அமெரிக்கப் பொருளாதாரத்தின் ஏற்ற இறக்கங்களை ஓரளவுக்குத் தாங்கக்கூடிய திறன் இத்தகைய அமெரிக்கக் கம்பனிகளுக்கு இருக்கலாம். கனடாவுக்குள் பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் போது, வெளிநாடுகளிலிருந்து பெருமளவில் இறக்குமதி செய்யும் கம்பனிப்பங்குகளில் முதலீடு செய்யலாம். கனடிய டொலர் வலுவடையும் போது இறக்குமதி செய்யும் கம்பனிகளின் இலாபம் அதிகரிக்கவும், ஏற்றுமதி செய்யும் கம்பனிகள் திண்டாடக் கூடியதாகவும் இருப்பதைக் காணலாம்.

சேமிப்பின் ஒரு பகுதியை இந்த அணுகுமுறையில் செயல்படுத்தினாலும், மொத்தத்தில், தகுந்த நோக்கம், குறிக்கோள், ரிஸ்க் எடுக்கும் மனப்பான்மை, காலமே எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்தது. ஒன்றில் மட்டும் பணத்தைப் போடாமல், Diversification என்று சொல்லப்படும் முறையில் கொஞ்சம் வங்கி வைப்புக்கள், கொஞ்சம் பங்குச் சந்தை முதலீடுகள், கொஞ்சம் பிற முதலீடுகள் என்று வைத்திருப்பதே புத்திசாலித்தனம்.

பலபேர் கனடிய டொலர் உச்சத்தில் இருந்த போது அமெரிக்காவில் குறைந்த விலைக்கு வரும் வீடுகளை வாங்கினார்கள். கையில் சேமிப்பு உள்ளது. அதுவும் பத்தாண்டு களுக்குப் பிறகுதான் தேவை என்றால் மீண்டும் கனடிய டொலர் வலுப் பெற்றால், சிலபேர் திரும்ப அமெரிக்காவில் வீடுகளை வாங்குவதை இலாபமாகக் கருதலாம்.

கனடாவில் வீட்டு விலைகள் திரும்ப சற்றே ஏறத் துவங்கியிருப்பதாகத் தோன்றுகின்றது. ஆனால் அமெரிக்காவின் நிலையில் பெரிய மாறுதல் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் குறைந்த விலைக்கு அங்கே வீடுகள் கிடைக்கின்றனவாம்.

சிந்தித்துச் செயல்படுங்கள். செயல்பட்டபின் சிந்திக்காதீர்கள். சற்றே பொறுமையுடன் காத்திருங்கள். தேவைப்பட்டால் பொறுமைக்குப் பின் மாற்றுங்கள். இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற ஸ்கோஷியா வங்கி தொலைபேசி எண் 416.439.3040 Ext 2010



**பெரி. முத்துராமன்**




விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



# அச்சத்தில் வாழும்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு எதிர்ப்பை வெளியிடுவதற்காக 20 லட்சம் மக்களை கொழும்பு கொண்டு சென்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தாம் நடவடிக்கை எடுக்க போவதாக ஜே.வீ.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார். அனுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

4 உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நிராகரித்த இந்த அரசியல் சாசனத் திருத்தத்தை மீண்டும் கொண்டு வர இடமளிக்கப்பட மாட்டாது. இதன் மூலம் நாடு பிளவுபடும். இலங்கையின் அரச வளங்களை கொள்ளையடிக்க இந்தியாவுக்கு இந்த அரசியல் சாசன திருத்தத்தின் மூலம் இடமளிக்கப்படும் எனவும் சோமவன்ஸ அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த முயன்றால், அரசிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் என ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.



தமிழ் மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், சுயகௌரவத்தைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை என செய்தியாளர் மாநாட்டில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். 13 ஆவது திருத்தச் சட்டம் நாட்டிற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. அது முழுமையாக அமல்படுத்தப்படாமல் உள்ளதால் தான் நாடு இதுவரை மோசமான பாதிப்புகளிலிருந்து தப்பியுள்ளது. இந்த திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணங்களுக்கு காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதையும் எதிர்க்கினறோம்.

தமிழ் மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், சமூக கௌரவத்தைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை.

இலங்கை போன்ற சிறிய நாடு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் தேவையற்ற பொருளாதாரச் செலவுகளையே எதிர்கொள்ள வேண்டிவரும் என்று கூறுகின்றார். இதேசமயம் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மென சர்வதேச அனர்த்தக் குழு அறிவித்துள்ளது.

இலங்கையில் நீதித்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. இனமத பேதங்களின்றி சகலரும் நீதியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற யுத்தத்தில் அரசாங்கம் அடைந்த வெற்றிகள் கூட இவ்வாறான செயல்களின் மூலம் வலுவிழக்கக் கூடுமென குறிப்பிடப்பட்டுள்ளது. மனித மற்றும் அரசியல் சாசன உரிமைகள் பூரணமாக நிலைநாட்டப்பட்டால் மட்டுமே நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் பதவியிலிருந்த பிரதம நீதியரசர் சிங்கள கடும்போக்குடைய கட்சிகளுக்கு ஆதரவளித்து வந்ததாக சர்வதேச அனர்த்த குழுவின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் ரொபர்ட் டெம்லர் (Robert Templer) தெரிவித்துள்ளார். நீதிமன்றங்கள் வழங்கிய சில தீர்ப்புக்கள் இனங்களுக்கு இடையிலான பிரிவினை வாதத்தை மேலும் வலுப்படுத்தியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோத கைதுகள் மற்றும் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்கள் குறித்து நீதிமன்றங்கள் இதுவரையில் காத்திரமான தீர்ப்புக்களை வழங்கியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்றங்களின் சுயாதீனத் தன்மையை நிலைநாட்டுவது மிகவும் இன்றியமையாததென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் தலைவர்கள் சட்டம் ஒழுங்களை சரிவர கடைபிடிக்காத வகையில் நீதிமன்ற கட்டமைப்பு வெறும் கட்டடங்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

## கனடிய மத்திய அரசில் பிரதமர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர்கள் சபாநாயகரின் சம்பளம் எவ்வளவு என தெரியுமா?

கனடிய பிரதமரின் அடிப்படை சம்பளம் தற்போது வருடம் $315,462 டொலர் ஆகும். கனடிய மத்திய அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வருடாந்த அடிப்படை சம்பளம் $157,731 டொலர் ஆகும்.

இங்கு பிரதமர் திரு. ஸ்டீபன் கார்பர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஒரு அடிப்படை சம்பளமும், தமது மேலதி பிரதமர் பதவிக்கு என ஒரு சம்பளமும் என சேர்த்தே வருடம் $315,462 பெறுகின்றார்.

இவைகள் தவிர வாகன செலவுக்கான சலுகை (Car Allowance) $2,122 டொலர் உட்பட வேறு சலுகைகளுக்கான செலவுகள் வசதிகள் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சராக அல்லது சபாநாயகராக இருப்பராயின் மேலதிகமாக $75,516 டொலரும், மேலும் வாகன செலவு சலுகை, இருப்பிட சலுகைகள் எனவும் வழங்கப்படுகின்றது. எதிர்கட்சி தலைவருக்கு $75,516 டொலர் மேலதிகமாக வழங்கப்படுகிறது.

**ரொறோன்ரோ மேயரின் சம்பளம் நகர சபை உறுப்பினர்களின் சம்பளம் எவை என தெரியுமா?**

2008ஆம் ஆண்டு அறிக்கையின் படி மேயருக்கு $163,040 டொலரும் நகர சபை உறுப்பினர் ஒருவருக்கு $96,805 டொலரும் அடிப்படை சம்பளமாக வழங்கப்பட்டு மேலதிக சலுகைகள், வசதிகள் எனவும் வழங்கப்படுகின்றன.

**ஒன்ராரியோ மாகாண சபை உறுப்பினர் முதல்வர், மாகாண அமைச்சரின் சம்பளம்?**

மாகாண சபை உறுப்பினரின் அடிப்படை சம்பளம் வருடம் $110,000 உம் இதே உறுப்பினர் அமைச்சராக இருக்கும் போது, $157,633 உம் பெறுகிறனர்.

மாகாண முதல்வர் திரு. டால்ரன் மக்கின்ரி வருடம் $198,620 சம்பளம் பெறுவதுடன் இவர்கள் யாவருக்கும் ஏனைய சலுகைகள், வசதிகளும் வழங்கப்படுகின்றது.

**கனடாவின் தலைநகரான ஒட்டாவா நகரில் உள்ள உயர் நீதிமன்ற தலைமை நீதியரசின் (Chief Justice of the Canadian Supreme Court)**

**சம்பளம் எவ்வளவு என தெரியுமா?**

வருட அடிப்படை சம்பளம் $343,400 + Benefits + Allowance என்பது தலைமை நீதியரசருக்கு வழங்கப்படுவதுடன் இவருடன் சேர்ந்து இயங்கும் ஏனைய ஒவ்வொரு நீதியரசர்களுக்கும் அடிப்படை சம்பளம் $317,900 + Benefits + Allowance என வழங்கப்படுகின்றது.

ஆனால் கனடாவில் உள்ள வங்கிகள் ஒவ்வொன்றினதும் அதிஉயர் தலைமை பதவியில் இருப்போர் (PRESIDENT & CHIEF EXECUTIVE OFFICER) பெறும் சம்பளம் வருடம் ஒன்றுக்கு மில்லியன் டொலர் ஆகும்.

உதாரணமாக றோயல் வங்கியின் அதி உயர் தலைமை அதிகாரி திரு. கோர்டன் நிக்ஸின் (Gordon Nixon) வருடம் ஒன்றுக்கு மொத்தம் $11.73 மில்லியன் டொலர் வரை பெறுகின்றார்.

*தொகுப்பு - சிவ பஞ்சலிங்கம்*
*ஆதாரம் - இணைய தளம்*


**Bestway Driving school**

Get your **G2** Licence in 3 weeks (If qualified)

**பெண்கள் / ஆண்கள் welcome**

***Very respectfull instructor to ladies.***

**உங்களுடைய தாய்மொழியிலேயே கற்றுக்கொள்ள முடியும்**
**நம்பகமான சேவையும் நாணயமான கட்டணமும்**



**சாரதிப்பத்திரம் உத்தரவாதம்**

***Get your G licence through me.***
***If you fail G test, we will pay your test-booking fee.***
(some condition may apply)

**Approved instructor by M.T.O.**

For further details call ***Vicky: 647.284.5373***

**சேவைகள்: *Brampton - Mississauga - Toronto***

***Road test available in out cities***

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing


**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# ஏன் தவற விடுகிறீர்கள்?

## கடவுள் எங்கேயோ இல்லை இப்போ இங்கே இருக்கிறார். நீங்கள் தான் இப்போ இங்கே இல்லை.



## சத்குரு வாசுதேவ்

வாழ்க்கையின் இலக்கை நிர்ணயித்து விட்டீர்கள் என்றால் எதையும் தவற விட மாட்டீர்கள். எல்லோருக்குள்ளும் சில சலனங்கள் உண்டு. கடந்த கால கர்மவினைகள் உங்கள் மேல் பாதிப்பை ஏற்படுத்தி உங்களை அங்குமிங்கும் அலைக்கழிக்கின்றன. உங்கள் உணர்வுகள், உங்கள் ஆசைகளோடு எல்லாம் நீங்கள் போராட முடியாது. அவற்றோடு போராட முற்படாதீர்கள். ஆசைகளோடும், உணர்வுகளோடும், உணர்ச்சிகளோடும், போராடுவதென்பது மகிசாசுரனோடு யுத்தம் செய்வது போல. ஒரு துளி இரத்தம் விழுந்தால் அதில் ஆயிரம் மகிசாசுரர்கள் எழுவது போல்தான் அதுவும். அவற்றை நீங்கள் வெட்ட நினைக்கிற போதெல்லாம் அவை ஆயிரக்கணக்கிலே மீண்டும் எழுந்து வருகின்றன. உங்கள் உணர்ச்சிகளையும் ஆசைகளையும் சரியான திசையில் செல்லப் பயிற்றுவித்தாலே போதும்.

வாழ்வின் மிக உயர்ந்த விஷயங்களையே விரும்புங்கள். உங்கள் எல்லா உணர்ச்சிகளையும் அந்த உயர்ந்த இலட்சியம் நோக்கித் திருப்புங்கள். உங்களுக்கு கோபம் வந்தால் கூட அது உயர்ந்த நன்மையை நோக்கிய கோபமாகவே இருக்கட்டும். உங்கள் உணர்ச்சிகளும் அப்படித்தான். உங்களிடமிருக்கும் ஒவ்வொரு துளி சக்தியையும் ஆசை, அச்சம் , கோபம் என்று பல விஷயங்களாகச் செலவு செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த உணர்ச்சிகள் உங்கள் கையில் இல்லாமலிருக்கலாம். ஆனால் அவற்றை சரியான திசையில் செலுத்துவதென்பது உங்கள் கைகளில் இருக்கிறது. இதில் கோபமாக இருக்கிறபோது உங்களால் அன்பாக மாற முடியாது. எடுத்த எடுப்பில் கோபத்தை அன்பாக மாற்றுவது சிரமம். ஆனால் கோபம் என்ற சக்தியையே நீங்கள் சரியான திசையில் செலுத்தலாம். அதை உரிய வழியில் ஆற்றுப் படுத்தலாம். உங்களிடமிருக்கிற ஒவ்வொரு துளி சக்தியையும் ஒவ்வொரு உணர்ச்சியையும் விருப்பத்தையும் எண்ணத்தையும் ஒரே திசையில் குவிப்பீர்களேயானால் விளைவை மிக விரைவில் எட்டிவிட முடியும். உயர்ந்த தன்மையில் ஒன்று இருக்கிறது. அதை எட்ட வேண்டும் என்ற எண்ணம் வந்த பிறகு வேறு கேள்விகளே வரக்கூடாது.

ஆனால் உங்களுக்குத் திரும்பத் திரும்ப இந்த ஆன்மீகம் ஞானோதயமடைதல் கடவுளை உணர்தல் எல்லாம் எங்கோ வெகுதொலைவில் இருப்பதுபோல் தெரிகிறது. இந்த வினாடி அருகில் இருப்பது போல் தோன்றினாலும், அடுத்த வினாடி அது எங்கோ தொலைவில் இருப்பது போல் தோன்றுவதால் சிக்கல்கள் வரக்கூடும். புதரில் மறைந்திருக்கும் இரண்டு பறவைகள விட கையில் இருக்கும் ஒரு பறவை மேலானது என்ற பழமொழியை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். எங்கேயோ இருக்கிற ஏதோவொன்றைவிட இப்போது இங்கே இருப்பது மேலானது. எதுவும் வேறெங்குமில்லை. எல்லாம் இங்கேயே இப்போதே இருக்கிறது. ஆனால் நீங்கள் இங்கே இல்லை என்ற காரணத்தினாலேயே அது எங்கோ இருப்ப போல் உங்களுக்குத் தோன்றுகிறது. கடவுள் எங்கேயோ இல்லை. இப்போது இங்கே இருக்கிறார். ஆனால் நீங்கள் இப்போது இங்கு இல்லை. அதுதான் சிக்கல். அது சிரமுமில்லை. நிச்சயமாக சுலபமும் இல்லை. அது மிக மிக எளிய விஷயம். நீங்கள் இருக்கிற இடத்திலிருந்து எல்லையின்மையை நோக்கி நகர்வது மிக எளிது. ஏனென்றால் அது இப்போ இருக்கிறது. ஆனால் எளிமையாய் இருப்பவை எல்லாம் சுலபமாய் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அது மிகவும் சூட்சுமமான மிக மென்மையானது. உங்கள் வாழ்வின் முழு சக்தியையும் அதை நோக்கிச் செலுத்தாவிட்டால் அது உங்களுக்குத் திறந்து கொள்ளாது.

அரை மனதோடு கூடிய அழைப்புகளுக்கு ஆண்டவன் வருவதேயில்லை. அரைமனதோடு செய்யப்படுகிற முயற்சிகள் ஞானோதயத்தைத் தருவதில்லை. முழு ஈடுபாடு இருக்குமேயானால் ஒரு வினாடியில் கூட அது நிகழ முடியும். போதிய அளவு தீவிரத்தைப் பெறுவதற்கு ஒரு முட்டாளுக்கு வேண்டுமானால் 12 ஆண்டுகள் ஆகலாம். உங்களைத் தீவிரப்படுத்திக் கொண்டால் ஒரு வினாடியில் அது நிகழும். அதற்குப் பிறகு வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும். நீங்கள் விரும்புகிற விதத்தில், விரும்புகிற வழியில், நீங்கள் வாழ்ந்து கொண்டே போவீர்கள். ஆனால் அந்த ஒரு வினாடியை உருவாக்காமல் மற்ற அபத்தங்களை உருவாக்கிக் கொண்டே இருப்பதனால் என்ன பயன்?

## Inner Engineering

**Date:** 19 - 25 Aug. 2009

**Location**: Latvian Canadian Cultural Centre, 4 Credit Union Drive
Toronto, ON M4A 2N8 Canada

**Free Intro talk**: Wed 19 August - 9–10am & 6:30–7:30pm

*ALL ARE WELCOME*

**Session Info:** TIMINGS: Attendance on all 7 days is mandatory.
Please select Morning or Evening session for weekdays.
Weekend sessions are common.

**Weekday Morning Session:** 9am to 12pm OR
**Weekday Evening Session:** 6:30pm to 9:30pm
Saturday: 10am to 1pm    Sunday: 8am to 5pm
**Tel.: 1-866-424-4742**
website: www.ishafoundation.org    www.ishayoga.org


என் மூலம் வீடு வாங்குவது /
விற்பதன் மூலம்
BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



KENNEDY / SHEPPARD New Condo. 1000 sq.ft.
2 bedroom + Den. Low maintenance.

House with Mechanic shop Scarborough

Church for sale Toronto

Buy low, Sell high - 40 years Low Interest
வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost
What's your Risk?

We look after seniors over 70 years peaceful life.

Country Style
Coffee shop - Oshawa
Good Income

வீடும் வியாபாரமும் Business Zoning
Future long term Investment

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.





SMILE....

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# இரு இடங்களில்

## துரித பணமாற்றுச் சேவை

# பொன்விழா கண்ட ஸ்தாபனம்

இதில் 18 வருடங்கள் கனடாவில்

**கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?**



தமிழ் மக்கள் இதயங்களில்
பணமாற்றுச் சேவையில்
இடம் பிடித்தவர்கள்

## மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
**SCARBOROUGH, ON. M1J 2H6**
தொலைபேசி எண்: **416-267-8221**

**3351 MARKHAM ROAD, SUITE #109**
**(Markham & Steeles)**
**SCARBOROUGH, ON. M1X 0A6**
தொலைபேசி எண்: **416-321-8221**

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# தென் ஆப்பிரிக்காவை துரத்தும் துரதிருஷ்டம்

## விளையாட்டுத் தகவல்கள் 263

நடப்புச் சாம்பியன் இந்தியா உலகக் கோப்பை போட்டியிலிருந்து அரையிறுதிக்கு முன்னதாகவே வெளியேறிய நிலையில், கௌரவமிக்க அந்தக் கோப்பையைக் கைப்பற்றும் வாய்ப்பு தென் ஆப்பிரிக்காவுக்கே அதிகம் என்பது பெரும்பாலான ரசிகர்களின் கருத்து. ஆனால் மற்ற உலகக் கோப்பை போட்டிகள் போல இம்முறையும் துரதிருஷ்டமே அந்த அணிக்கு விஞ்சியது.

கடந்த முறை போட்டியில் இந்தியாவிடம் 5 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்று கோப்பையை இழந்த பாகிஸ்தான், இம்முறை போட்டியில் வலுகுறைந்த அணிகளில் ஒன்று என்ற கணிப்பை பெற்றிருந்த நிலையில், நாட்டிங்காமில் நடந்த போட்டியில் வலுவான தென் ஆப்பிரிக்காவுக்கு அதிர்ச்சி அளித்தது.

2007-ம் ஆண்டு சொந்த நாட்டில் நடந்த முதல் உலகக்கோப்பை போட்டியிலும் பட்டம் வெல்லும் அணியாகப் பார்க்கப்பட்ட தென் ஆப்பிரிக்கா, இந்தியா, நியூஸிலாந்து அணிகளைப் போல 2 வெற்றி, ஒரு தோல்வியைப் பெற்றிருந்த நிலையில் சூப்பர்-8 க்கு முன்னேறும் வாய்ப்பை ரன் ரேட்டில் இழந்து பரிதாபத்தை தேடியது.

இது மாதிரியான துரதிருஷ்டம் ஒன்று அல்லது 2 முறை என்றால் ரசிகர்கள் சமாதானமடைந்து கொள்ளலாம். ஆனால் டுவென்டி-20 போட்டியைக் காட்டிலும் 50 ஓவர் உலகக் கோப்பை போட்டிகளில் எதிரிகூட பரிதாபப்படக்கூடிய சோதனைகளை அந்த அணி சந்தித்துள்ளது.

தென் ஆப்பிரிக்க அரசின் நிறவெறிக் கொள்கை காரணமாக 1970-ம் ஆண்டு சர்வதேச போட்டிகளிலிருந்து அந்நாட்டு அணியை சஸ்பெண்ட் செய்தது கிரிக்கெட்டின் ஆளுமை அமைப்பான ஐசிசி. தென் ஆப்பிரிக்கா தனது நிறவெறிக் கொள்கையை தளர்த்தியதால் 1991-ம் ஆண்டு தடையை நீக்கி மீண்டும் அந்நாட்டு அணியை விளையாட அனுமதித்தது ஐசிசி. புது ஜனனம் பெற்ற தென் ஆப்பிரிக்கா இந்திய அணியுடன் கொல்கத்தாவில் 1991-ம் ஆண்டு பரீட்சித்துப் பார்த்தது. அதுமுதல் சர்வதேச போட்டிகளில் பல்வேறு ஏற்ற இறக்கங்களைப் பெற்றாலும் உலகக் கோப்பை போட்டிகளில் சோதனை மேல் சோதனையைச் சந்தித்தது.

கடந்த முறை தென் ஆப்பிரிக்காவில் நடந்த 8-வது உலகக் கோப்பை போட்டியில் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தின்போது மழை குறுக்கிட்டதால் அந்த அணியின் அடுத்த சுற்று வாய்ப்பு கரைந்ததை யாரும் எளிதில் மறக்க முடியாது.

தென் ஆப்பிரிக்காவுடன் ஒப்பிடுகையில் நியூஸிலாந்தை "வீக் டீம்" என அப்போட்டியில் யார் வேண்டுமானாலும் கூறிவிடமுடியும். ஆனால், 30.3-வது ஓவரின்போது மழை குறுக்கிட்டதால் டக்வொர்த்-லீவிஸ் தோழர்கள் வடிவமைத்த விதி, ஆட்டத்தின் "தலை விதி"யை மாற்றிவிட்டது.

அதன்படி, 8.3 ஓவர்களில் (51 பந்துகள்) 44 ரன்களைச் சேர்த்தால் வெற்றி என்ற நிலையைப் பெற்றது நியூஸிலாந்து. 9 விக்கெட்டுகள் மீதமுள்ள நிலையில், தவழும் குழந்தையாக காணப்பட்ட நமீபியாவுக்குக் கூட அது சாதாரணமானதாகவே இருக்க முடியும். 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நியூஸிலாந்துக்கு அபார வெற்றி. இதனால் போட்டியிலிருந்து தென் ஆப்பிரிக்கா வெளியேறியது.

அதற்கு முன்னர் 92-ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியிலும் இதே "டக்வொர்த்-லீவிஸ்" விதியால் துரதிருஷ்டத்தை அடைந்தது. அந்த அரை இறுதி ஆட்டத்தில் 19 பந்துகளில் 23 ரன்களை சேர்த்தால் வெற்றி என்ற சூழ்நிலையில் மழை குறுக்கிட்டதால் இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

அதையடுத்து, ஒரு பந்தில் 22 ரன் எடுக்க வேண்டும் என டக்வொர்த்-லீவிஸ் விதி கூறியது. இதனால் தென் ஆப்பிரிக்க அணி பரிதாபத்தை சம்பாதித்தது.

முன்னதாக, 96-ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியிலும் இதே மாதிரி நிகழ்வு. தொடக்கம் முதல் தோல்வி என்பதே என்னவென்று தெரியாமல் வெற்றிக் கொடி நாட்டிவந்த தென் ஆப்பிரிக்கா, வலுகுறைந்த மேற்கிந்தியத் தீவுகளிடம் தோல்வியுற்று, உலக ரசிகர்களிடம் பரிதாபத்தை தேடிக்கொண்டது.

அவற்றுக்கெல்லாம் ஆறுதலாக இம்முறை டுவென்டி-20 கோப்பையைக் கைப்பற்றலாம் என ரசிகர்கள் நினைத்திருந்த நிலையில், ஹெர்சல் கிப்ஸ், ஜாக் காலிஸ், மார்க் பௌச்சர், கேப்டன் கிரேம் ஸ்மித் ஆகியோரை உள்ளடக்கிய வலுவான தென் ஆப்பிரிக்க அணிக்கு, ஷாகித் அப்ரிதி வடிவில் துரதிருஷ்டம் வந்தது.

தென் ஆப்பிரிக்க அணியை யாரும் வலுவில்லாத அணி என எந்த சூழலிலும் கூறமுடியாது. ஆனால் முக்கிய போட்டிகளின் முக்கிய கட்டங்களில் தோல்வியைத் தழுவுவது, தொடர்கதையாக இருந்துவருகிறது. யார் செய்த பாவமோ?

### டுவென்டி-20 கிரிக்கெட்: உலக சாம்பியன் பாகிஸ்தான

இங்கிலாந்தில் இரண்டாவது "டுவென்டி-20" உலக கோப்பை கிரிக்கெட் தொடர் நடந்தது. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 12 அணிகள் விளையாடின. லீக் மற்றும் "சூப்பர்-8" சுற்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி இலங்கை, பாகிஸ்தான், வெஸ்ட் இண்டீஸ், தென் ஆப்ரிக்கா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. அரையிறுதியில் இலங்கை (எதிர்-வெஸ்ட் இண்டீஸ்) மற்றும் பாகிஸ்தான் (எதிர்-தென் ஆப்ரிக்கா) அணிகள் வெற்றி பெற்று பைனலுக்கு தகுதிபெற்றன.

லார்ட்சில் நடந்த Final இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதின. 'Toss' வென்ற இலங்கை கேப்டன் சங்ககரா பேட்டிங் தேர்வு செய்தார். முதலில் பேட் செய்த இலங்கை அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 138 ரன்கள் எடுத்தது. கேப்டன் சங்ககரா (64*), மாத்திவ்ஸ் (35*), ஜெயசூர்யா (17), சில்வா (14) அணியின் ஸ்கோரை உயர்த்தினர்.

பாகிஸ்தான் சார்பில் அப்துல் ரசாக் 3 விக்கெட் வீழ்த்தினர். சுலப இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணி 18.4 ஒவரில் 2 விக்கெட் இழப்புக்கு 139 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்று கோப்பை வென்றது. அப்ரிதி (54*), கம்ரான் அக்மல் (37), சோயப் மாலிக் (24*), ஹசன் (19) அணியை வெற்றிக்கு அழைத்து சென்றனர். இலங்கை சார்பில் முரளிதரன், ஜெயசூர்யா தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். ஆட்டநாயகன் விருது அப்ரிடிக்கு வழங்கப்பட்டது.

தொடர் நாயகன் விருதை தில்சன் தட்டிச்சென்றார். இதன்மூலம் முதன் முறையாக பாகிஸ்தான் அணி "டுவென்டி-20" உலக கோப்பை வென்று சாதித்தது. தவிர கடந்த 2007ம் ஆண்டு நடந்த "டுவென்டி-20" உலக கோப்பை தொடரின் பைனலில் இந்தியாவிடம் தோல்வி கண்ட பாகிஸ்தான் அணி இம்முறை கோப்பை வென்று சாதித்தது.

### பிரேசிலை மிரட்டியது எகிப்து

தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் 8 நாடுகளுக்கு இடையேயான கான்.ஃபெடரேஷன் கோப்பை கால்பந்து போட்டியில் நேற்று எகிப்து அணியை 4- 3 என்ற கோல் கணக்கில் வீழ்த்த பிரேசில் அணி போராட வேண்டியிருந்தது.

பிரிவு "பி" ஆட்டமாஅன இதில் பிரேசில் வீரர்கள் காகா, லூயிஸ் ஃபேபியானோ, யுவான் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து இடைவேளையின் போது பிரேசில் அணி 3- 1 என்று முன்னிலை பெற்றிருந்தது. ஆனால் இடைவேளைக்கு முன்பி வகுக்கப்பட்டிருந்த வலுவற்ற தடுப்பு உத்திக-ளினால் இடைவேளைக்கு பிறகு எகிப்து அணி அடுத்தடுத்து இரண்டு கோல்களை அபாரமாக அடித்து சமன் செய்து பிரேசில் அணியை அதிர்ச்சியடையச் செய்தது. முதல் பாதியில் கோல் அடித்த எகிப்து வீரர் மொகமட் ஷாகி, மொகமட் ஜிடான் ஆகியோர் 2-வது பாதியில் இந்த கோல்களை அடித்து பிரேசிலை மிரட்டினர்.

ஆட்டம் 90-வது நிமிடத்திற்கு நகரும் வரை பிரேசில் அணியால் வெற்றிக்கான கோலை அடிக்க முடியவில்லை. அந்த கடைசி நிமிடத்தில் எகிப்து வீரர் அகமட் அல் முகமடி, லூசியோ அடித்த ஷாட்டை கையில் வாங்கினார். இதனால் பெனால்ட்டி வாய்ப்பு கிடைத்தது.

அதனை காகா கோலின் வலது மூலைக்கு அடித்து கோலாக மாற்றினார். பிரேசில் அணியின ரிடத்தில் ஆசுவாச புன்னகை தவழத் தொடங்கியது.

### டாரஸ் ஹேட்ரிக் ஸ்பெயின் அபார வெற்றி

தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் கான்.ஃபெடரேஷன் கோப்பை கால்பந்து போட்டித் தொடரில் ஸ்பெயின் அணியின் ஃபெர்னான்டோ டாரஸ் முதல் 17 நிமிடங்களில் அடித்த ஹேட்ரிக்கால் அந்த அணி நியூஸிலாந்து அணியை 5 - 0 என்ற கோல் கணக்கில் சுக்கு நூறாக்கியது. இந்த வெற்றியின் மூலம் ஐரோப்பிய சாம்பியனான ஸ்பெயின் தனது தொடர் வெற்றிச் சாதனையை 33 போட்டிகளாக அதிகரித்துள்ளது. இதற்கு முன்னர் நடைபெற்ற துவக்கப்போட்டியில் தென் ஆப்பிரிக்கா அணியும் இராக் அணியும் கோல்கள் எதுவும் போடாமல் 0-0 என்று ட்ரா செய்தன.

### உலக சாம்பியனுக்கு அதிர்ச்சி அளித்தது எகிப்து

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து போட்டியில் உலக சாம்பியனான இத்தாலி அணியை எகிப்து 1 0 என்ற கணக்கில் வீழ்த்தி அதிர்ச்சி அளித்தது. இத்தாலி அணி சர்வதேச கால்பந்து வரலாற்றில் ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்த அணி ஒன்றிடம் தோல்வியை சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

ஜொஹன்னஸ்பேர்க் எலீனா பார்க் அரங்கில் "பி" பிரிவுக்காக நடந்த இந்த போட்டியில் எகிப்து அணி இத்தாலிக்கு கடும் நெருக்கடி கொடுத்தது. இதன்மூலம் போட்டியின் 40 ஆவது நிமடத்தில் எகிப்தின் மொஹமட் ஹோமோஸ் கோலொன்றை போட்டு வெற்றியை உறுதி செய்தார். உலக சாம்பியனான இத்தாலி யினால் கடைசிவரை கோலொன்றை போடமுடியாமல் போனது.

கடந்த 1992 ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருதடவை நடத்தப்படும் கொன்பெடரேஷன் கிண்ண போட்டி ஒன்றில் ஐரோப்பிய கண்ட அணி ஒன்றை ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்த அணியொன்று வீழ்த்தும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். முன்னர் 2003 ஆம் ஆண்டு கொன்பெடரேஷன் போட்டியில் கெமரூன் அணி ஐரோப்பிய கண்டத்தில் இருந்து தேர்வான துருக்கி அணியை வீழ்த்தி இருந்தது. அதேபோன்று இந்த வெற்றியுடன் எகிப்து அணி கொன்பெடரேஷன் கிண்ண அரையிறுதி போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை அதிகரித்துக் கொண்டது. எனினும் "பி" பிரிவில் இருந்து பலம்வாய்ந்த பிரேசில் அணி ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

பிரேஸில் அணி இந்த தொடரில் விளையாடிய இரண்டு போட்டிகளிலும் எகிப்து மற்றும்



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 22ஆம் பக்கம்

S.A.P HELPING HANDS உதவும் கரங்கள்

மக்கள் சேவை சதாசிவ சேவை

மூத்தோருக்கான சேவைகள்

- இருப்பிட வசதிகள் ஒழுங்கு செய்தல்
- சமூக நல பணிமனைக்கு அழைத்துச் செல்தல்
- கோவில் / தேவாலயம் அழைத்துச் செல்தல்
- வைத்தியரிடம் அழைத்துச்செல்தல்
- கடைகளுக்கு அழைத்துச் செல்தல்
- எல்லா வகையான படிவங்களும் நிரப்புதல்
- கோடைகால சுற்றுலா

சதாசிவா - 416.454.2810
ASATHN@hotmail.com

மற்றைய சேவைகள்

> All Mortgage / Refinance
> Personal Business Loan
> All kind of Insurances
> Line of Credits
> Bankruptcy
> Accident Claims

இலவச ஆலோசனைகளும், ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

# கொண்டோவிற்குரிய மாதாந்த கட்டுப்பணம்

## Monthly maintenance fee



காலமாற்றம் - இது நியதி. வாழ்க்கை மாற்றம் - இது தேவை. மாற்றத்தின் ஒவ்வொருபடியும் ஆரம்பத்தில் இறுக்கமாகவும், ஏற்பதற்கு சிறிது கஷ்டமாகவும் இருக்கலாம். காலப்போக்கில் இதுவே பழக்கப்பட்டு விடும்.

வாழும் கட்டிடம் - அதற்கு முன்னும் பின்னும் காணி - நிலம், புல்லு - தரை, கார் தரிப்பு இடம் போன்றவைகளுடனான வீடு. இந்த நிலைமையிலேயே ஆரம்ப வாழ்க்கை. காலப்போக்கில் மக்கள் தொகையின் அதிகரிப்பு. இதனால் வீட்டின் விலையின் அதிகரிப்பு, நிலநெருக்கடி, சகல வசதிகளும் கொண்ட நகரத்தில் அனைவராலும் வாங்கமுடியாத நிலைமை வந்தபோது, அடுக்குமாடிக்கட்டிடத்தில் ஒரு மனை (Condominium Unit) என்ற நிலைமை உருவாகியது.

இதன் ஓர் அங்கமாக தொடர்வீடுகளாக கட்டப்படுவதை (Townhouse) கொள்ளலாம். வீடுகளில் வசிப்பவர்கள் வயதான காலங்களில் வாழ்க்கையை இலகுவானதாகவும், தரமானதாகவும் ஏற்படுத்திக்கொள்ள உருவாக்கியதாகவும் இந்த அடுக்குமாடி மனை வாழ்க்கை முறையைக் கொள்ளலாம். இவ்வாறான வாழ்க்கை முறை பொதுவாக (வசதியானதாகவும்) இலகுவானதாக இருக்கும். தனிப்பட்டவர்கள், புதிதாக திருமணமானவர்கள், வயோதிபர்கள் இதனையே அதிகமாக விரும்புகின்றனர். இந்த வசதிக்கு மேலதிகமாக கொடுப்பனவு செய்யவேண்டும் என்பதும் உண்மை.

இதன் ஒரு வளர்ச்சிப்பாதையில் உருவாகியதே வியாபாரக் கொண்டோக்கள் - (Business Condominium). இந்த முறை 1980களில் பிரபல்யம் அடையத்தொடங்கியது. இன்றைய காலகட்டத்தில் ஒருபடி மேலாக தனி வீடுகள், இரண்டு வீடுகள் சேர்ந்த வீடுகளிற்கும் இந்த கொண்டோ முறை வந்துள்ளது.
இவ்வாறான கொண்டோ முறைகளிற்கு ஒரு மாதாந்த கட்டுப்பணம் செலுத்தப்பட வேண்டும் என்பது யாவரும் முக்கியமாக அறியவேண்டிய விடயம்.

இந்தவகையான அலுவலக கட்டிடத்தொகுதி அல்லது மனைத்தொகுதி அல்லது வியாபாரக் கட்டிடத்தொகுதியின் ஒவ்வொரு நாட்களிற்குரிய முக்கியமான தேவைகளை கவனிக்க ஒரு முகாமைத்துவ நிறுவனம் (Management Company) அமர்த்தப்படும். இந்த நிறுவனம் இக்கட்டிடத்தொகுதியை மேற்பார்வை செய்வதால் முகாமைத்துவ நிறுவனம் என அழைக்கப்படும்.

இவ்வாறு முகாமைத்துவம் செய்யும் நிறுவனத்திற்கு மாதாந்த கொடுப்பனவு செய்தல் வேண்டும். உதாரணமாக ஒரு அடுக்குமாடி மனையில் பொதுவாக ஏற்படும் செலவுகளைக் கருத்தில் கொண்டால், முக்கியமாக புல்தரை, கார்தரிப்பு, பகுதிகளை தரமாக பராமரித்தல், (Snow Cleaning), பாதுகாவலர் (Security Guard), பொதுவான காப்புறுதி என்பவற்றைக் கொள்ளலாம். கட்டிடங்களிற்கு ஏற்ப பொதுவான செலவுகள் மாறுபடலாம். ஒரு குறிப்பிட்ட வருடத்தில், உதாரணமாக ஏப்பிரல் 01, 2009 தொடக்கம் மார்ச் 31, 2010 ஒரு வருட காலமாக எடுத்தால் இதற்கு மொத்தமாக எவ்வாறு செலவு வரலாம் என ஒரு வரவு செலவு கணக்கு திட்டம் (Budget) தயாரிக்கப்படும். இந்த Budget தயாரிக்கும்போது இந்த நிறுவனத்திற்கு முகாமைத்துவ செலவு, எதிர்பாராத செலவுகள், எதிர்காலத்தில் நிச்சயமாக வரும் என எதிர்பார்த்து சேமிக்கும் பகுதி (இது சட்டபூர்வமான சேமிப்பு) (Reserve Fund) என்பனவும் சேர்த்து கொள்ளப்படும். இவ்வாறு கணக்கிட்டு பெறப்படும் தொகையை மொத்தமாக உள்ள மனை எண்ணிக்கைகளின் தொகைக்கேற்ப ஒவ்வொரு அலகுகளிற்கும் கட்டணம் மாதாந்தமாக அறவிடப்படும். இதுவே Monthly Maintenance Fee என அழைக்கப்படும். இந்த தொகையுடன் இன்றைய

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 301**


**HomeLife GTA Realty Inc., Brokerage***

**Independently owned & operated**
"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto
Tel.: **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga
Tel.: **905.712.2666**

HOMELIFE HIGHER STANDARDS



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

**New Condo. Available in Downtown Toronto**

- Highrise Condo. Building
- 2 Bedrooms
- 2 Washrooms
- 1 Parking
- 1 Locker
- Balcony
- Hardwood / Ceramic Floor
- Loft (2 Floors)
- Higher Floor
- Quick Closing
- Spadina & Front - Toronto
- Special Price Only $385,000 (less than $375/sqft)

**Semi-detached House for Sale**

- Morningside & Sheppard
- 3 Level Back split
- 4 Bedrooms
- 2 Full washrooms
- Good for extended Family
- Asking Only$219,900 (Better than renting)

**Condo. for Rent**

- Wellesley & Jarvis
- 1 + Den Bedroom
- Only 1 year old building
- 24 hrs. security
- Indoor swimming pool, exercise room
- Available July /August

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# காட்சிச் சிறப்பு

அடுத்து, நாடகத்துக்குக் காட்சிகள் முக்கியம். காட்சிகளைச் சொல்லால் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவதில் நிகரற்றவர் கம்பர். சுக்கிரீவனும் வாலியும் மற்போர் செய்யும் காட்சியை,

எடுப்பர் பற்றியுற்று ஒருவரையொருவர் விட்டெறி-
வர்
கொடுப்பர் வந்துரம் குத்துவர் கைத்தலம் குளிப்ப
கடுப்பினிற் பெருங் கறங்கெனச் சாரிகை பிறங்கத்
தடுப்பர் பின்றுவர் ஒன்றுவர் தழுவுவர் விழுவர்
(கிட்.கா. வாலிவதைப் படலம் 56)

என்று விளக்குகையில் மற்போர் எப்படி அமையவேண்டும் என்றும் அறிவுறுத்தப் படுவதைப் பார்க்கிறோம். இலங்கைக்குப் பாலம் அமைக்கும் வேகத்தை,

குமுதன் இட்ட குலவரை கூத்தரின்
திமிதம் இட்டுத் திரியுந் திரைகடல்
துமிதம் ஊர்புக வானர் துள்ளினர்
அமுதம் இன்னும் எழுமென்னும் ஆசையால்
(யுத்.கா. சேதுபந்தனப் படலம் 42)

என்று காட்டும் விதம் ஓர் அற்புதமான கற்பனைச் சித்திரம்.

ஓவியக் கவிதைகள்

நாடகத்துக்கேற்ற காட்சிகளை ஓவியமாக வரைந்து அரங்கில் வைப்பது வழக்கம். ஓவியருக்கும் கவிஞருக்கும் ஒற்றுமைகள் அதிகம். ஓவியர் பலவித வண்ணப் பூச்சுகளைக் கொண்டு தமது சிந்தனைகளை வரைவது போலவே கவிஞரும் பொருத்தமான சொற்களைக் கொண்டு தமது கற்பனைகளைக் காட்சிகளாக்குவர்.
எனினும் கவிஞர் சொற்களெல்லாம் ஓவியம் ஆவதில்லை. அவை படிப்பவர் மனத்திற் படமாக விரிகின்றபொழுதே சித்திரக் கோலம் பிறக்கின்றது எனலாம். சொல்ல வருவதை நுணுக்கமாக விவரித்துக் கண்முன் நிறுத்து வதற்குத் தகைசான்ற ஆற்றல் வேண்டும். சொல்வளமும் கலைத்துவ உள்ளமும் கற்பனைத் திறனும் மிகவே வேண்டும்.



கல்வியிற் சிறந்தவரும் கவிபாடுவதில் இணையில்லாதவருமாகிய கம்பருக்குச் சொற்களால் சித்திரம் வரைவது என்பது கைவந்த கலை. எப்பொழுதுமே சொல்லையும் பொருளையும் பொருத்தமுறக் குழைத்துக் கற்பனைச் சுவைகளை அவற்றோடு கலப்பது அவரது இயல்பு. அதன்பின் அநுபவ அடுப்பிலே அருமையாகச் சமைத்து அழகான வட்டிலில் அள்ளி வழங்குவார். அதுவும் இயற்கைக் காட்சி என்று வந்துவிட்டாற் சொல்ல வேண்டியதில்லை. அற்புதமாகப் படைத்துவிடுவார். அவரது ஓவியக் கவிதைகள் இராமாயணத்தில் அதிகமோ அதிகம். அவற்றில் அரங்கக் காட்சியையொத்த ஓவியம் ஒன்று இது:

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்

தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கும் மாதோ.

கோசல நாட்டு மருதநில மாட்சியைக் காட்சியாக்குகின்றார் கம்பர். ஐவகை நிலங்களுள் மருதநிலம் மனத்தைக் கவர்வது, மக்கள் தொழிற்பாடு அதிகம் உடையது, வயலும் வயல் சார்ந்த இடமும் ஆதலாற் செல்வம் மிகுந்தது, நீர்வளம் உடையதால் இயற்கை அழகு வாய்ந்தது. இங்கு அவர் ஓவியமாக்கியிருப்பது மருதநில இயற்கைச் சிறப்பைத்தான்:

மருதநிலத்தை அரசி ஆக்குகின்றார். இந்த அரசி வீற்றிருந்து பார்த்து மகிழ நடன நிகழ்ச்சி ஒன்று நடத்தப்படுகின்றது. நடன நங்கையர் தோகை மயில்கள். தாமரை மலர்கள் விளக்குப் பிடிக்கவும் மேகங்கள் மத்தளம் அடிக்கவும் மகர யாழினும் இனிமையாக வண்டுகள் பாட்டு இசைக்கவும் சோலை மயில்கள் நடனங்கள் ஆடுகின்றன. பின்னணியில் உள்ள தடாக நீர் அலை திரைச் சீலைபோல எழுவதும் விழுவதுமாக உள்ளது. இந்த அழகிய நிகழ்ச்சியின் பார்வையாளராகக் குவளை மலர்கள் விளங்குகின்றன.

இது கம்பரின் அரங்க ஓவியம். அவர் சொல்ல வந்தது மருத நிலத்து இயற்கை வளத்தை. இங்கு சோலைகள் அதிகம். கார்முகிலைக் கண்டு களித்து நடமிடும் மயிற் கூட்டங்கள் ஏராளம். தாமரை மலர்களோடு கூடிய தடாகங்கள் பல. குவளை மலர்கள், தேன் உண்ணும் வண்டுகள் என்பவற்றையும் மருதம் கொண்டிருக்கின்றது.
இவ்விதம் மொட்டையாகச் சொல்லாது, இயற்கை வளங்களைப் பாத்திரங்கள் ஆக்கி அவை-யெல்லாம் அரங்கம் என்கின்ற ஓரிடத்தில் அமைவனபோலக் காட்சியாக்கி இருப்பது கம்பரின் நாடக உத்திச் சிறப்பு. அதுமட்டுமன்றி மருதநில மக்களின் சீரையும் சிறப்பையும் குதூகலத்தையுங்கூடக் குறிப்பாக உணர்த்தியிருக்கின்றார்.

ஓவியர் தமது படைப்பின்கீழ் ஒப்பமிடுவது வழக்கம். அவரைப்போற் கம்பரும் தமது சித்திரக் கவியில் ஒப்பம் ஒன்றை வைத்திருக்கின்றார். 'மாதோ' என்று அவர் முடித்திருக்கும் விதம் கவனிக்க வேண்டியது. இது வெறும் அசைச் சொல் அன்று. அநுபவித்து இந்தக் காட்சியை அவர் பாடியதன் அடையாளம். 'இவ்விதமாக மருதநிலம் வீற்றிருக்கும் மாட்சிதான் என்னே!' என்று கூறி முடிக்கும் வியப்புணர்வு இந்தச் சொல்லுக்குள் அடக்கம் பெற்றிருக்கின்றது.

கம்பர் சோழநாட்டவர். சோழ நாடு சோறுடைத்து என்பது அவ்வையார் வாக்கு. அதாவது, வயல்நிலங்களை அதிகம் கொண்டது என்பது பொருள். மேலும் கம்பரை ஆதரித்த சடையப்பரும் உழவர் மரபினர். உழவரின் மேன்மைகளை ஏர் எழுபது, திருக்கை வழக்கம் ஆகிய நூல்களிலும் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஆக, தான் நேரடியாகக் கண்டு களித்த சோழநாட்டு மருதநிலக் காட்சிகளையே கோசலநாட்டின்மீது ஏற்றிக் கம்பர் பாடியிருப்பது கண்கூடு.




நிறைவாக ...
இராமாயணம் எனப்படும் காப்பிய நாடகத்தில் பாத்திரங்கள் மட்டுமன்றி இயக்குநர் கம்பரும் நடிக்கிறார். அவரது கற்பனையும் நடிக்கிறது. சொற்களும் நடிக்கின்றன. பெரும்பான்மைக் கவிதைகள் நாடகக் காட்சிகளே.

நாடகத்தில் காலம் இடம் செயல் மூன்றும் ஒருமைப்பட்டிருத்தல் வேண்டும் என்பர் அரிஸ்டாட்டில். இத்திறத்தைக் கம்பராமா யணத்திற் பல இடங்களிற் கண்டின்புறலாம். அதனாலே காப்பியத்தைப் படிக்கின்ற பொழுது நாடகம் ஒன்றைப் பார்க்கின்ற உணர்வு மேலிடும் வகையில் கவிச்சக்கரவர்த்தி தன் கல்வித் தளத்தையும் கவித் திறத்தையும் கற்பனை வளத்தையும் காட்டியிருக்கின்றார்.



கவிஞர் வி. கந்தவனம்


# APARTMENTS FOR RENT



In a NEWLY Renovated High-Rise Apartment Building
Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby

Pl. Call: 416.264.2818

ரிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS



யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361


# வாழ்க்கை சுவர்க்கமாகுது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Markham/Painted Post**



**$219,900**
Semi detached 2 story, Bed rooms 3, Washrooms 2 Close To All Amenities, 401, Mall, Scarborough Town Centre, Finished Basement

**Medowvale/Sheppard**



**$289,000**
Town house 3 story, Bed rooms 3 , Washrooms 2 Very Demand Location.Owner Spent $$$ Dollar For Upgrades

**Steeles / Markham Rd**



**$289,900**
Town house 2 Story Bed rooms2, Washrooms 1 Walk To Steeles! No Need To Pay Extra For Ttc. Great Markham / Steeles Location-

**Mccowan/Denision**



**$327,000**
TDetached 2 story, Bed rooms 3, Washrooms 2 Larger Enclosed Front Porch, Garage Side Door To Front Porch, Newer Roof 2007. Minutes To Ttc,

**Stouffville/9th Line**



**$3349, 900**
Detached 2 Story, Bedrooms 3, Washrooms 3, 2 Yrs New!, Direct Access To Garage;Oak Stairs;Gas Fireplace;Upgraded Tile

**Staines/Steeles**




**$354,900**
Detached 2 Story, Bedrooms 3 Wasroom2, All Brick Spacious 3 Bedroom House, Laminated Walkout Basement

**Mccowan/Denison**




**$369,800**
Link 2 Story, Bed rooms 3+2 Washrooms 3, Completly Renovated With Ceramic Floor Entrance Way-Basement Contains 2 Bed-

**Denison/Featherstone**




**383,900**
Link 2 Story, Bed rooms 4+2 Washrooms4, Renovated Basement With Separate Entrance,New Roof & New Furnac(2006)

**Markham Road/ 16th Ave**




**$389,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Only 3.5 Years New. Approx 1850 Sq Ft, 9Ft Large Eat-In Kitchen

**Passmore/Oasis**



**$395,500**
Detached 2 story , Bed rooms 3+1 Washrooms 3, Near School & Ttc. Freshly Painted, Attractive Front Porch

**Markham/Steeles**



**$399,900**
Link 2 Story, Bedrooms 4, Washrooms 3, Fully Fenced Yard*Walk To Ttc/Schools/Shops/Restaurant/Church/Comm. Ctr/Park

**Markham Rd/Highglen**



**$449,900**
Detached 2 Storys, Bed rooms 4+2, Washrooms 4 Profesionaly Finished Basement Appartment With Sep Enterance.Approx 2100 Sqft

**Mccowan & Elson**



**$454,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms4, Close To Schools, Shopping And All Emenities, Finished Basement With Kitchen &

**Williamson & Bur Oak**



**$459,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3 Brand New Madison Home! Approximately 2100 Sq. Ft. Close Parks, Schools,

**Morningside/Shep-**



**$469,900**
Detached 2 Story, Bedrooms 5+1, Washroom 5 Over $50,000 In Upgrades.9 Foot Cielings On Main Floor & Basement. Pot Lights & Hard-

**9th Line & 14th Avenue**



**$498,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4, 2830 Sq. Ft. Plan. Across From Legacy Public School. Walking Distance To Park

**14th Ave/9th Line**




**$512,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Combined Liv/Din Rms W/9Ft Ceilings And Oak Staircase * A Gas Fireplace

**Kennedy/Highglen**



**$799,000**
Detached 2 Story, Bedrooms 4+4 Washrooms 5 Situated On One Of The Best & Quiet Street In The Area Approx 4000 Sf

**Mccowan/ Eglinton**




**$164,900**
Condo Apt, Bed rooms 2+1,Was rooms2 Bright & Spacious Corner Unit In Extremely Well Maintained Luxury Building

**Bovaird/Mc Laughlin**




**$289,800**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 2, Affordable Detached All Brick Two Storey, Laminate Floors In Living/Dining Rooms

**Rossland/Salem**




**$299,900**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3, Ideal For A Young Family. Features Large Family Room W/ Fireplace

**Sales of Businessl**



**$1,400,000**
Sale Of Business With Property Gas Stations. Self Serve Petro Canada With Convenience Store

**Sales of Business**




**$159,000 For Sale**
Sale Of Business Without Property Gas Stations. Self-Service Gas Bar And Convenience Recently Renovated

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# சமிபாட்டுப்பகுதி

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## The Digestive System

வாய்வழி - The Oral Cavity
உமிழ்நீர் சுரப்பி - Salivary glands
களம் - Oesophagus
இரைப்பை - Stomach
முன்சிறுகுடல் - Duodenum
சிறுகுடல் - Small intestine
பெருங்குடல் - Large intestine
குருட்டுக்குடல் அல்லது குடல்வளரி - Appendix
நேர்குடல் _ Rectum
குதம் - Anus

என்பவற்றை எடுத்துக் கூறலாம். மற்றும் ஈரல் (Liver) பித்தப்பை (Bile bladder) சதையம் அல்லது கணயம் (Pancreas) என்பவற்றில் இருந்து சுரக்கப்படும் சுரப்பி நீரான கைரோகுளோறி அமிலம், (HCL) பெப்சின், இஞ்சுலின் போன்றவை (Pepsin - Insulin) முக்கிய இடத்தை வகிக்கின்றது. அத்துடன் சுவை அரும்புகளும் (Taste buds) உண்டு. நாம் உண்ணும் உணவுகள் வாயில் இடப்பட்டவுடன் அங்கு உமிழ் நீர் சுரப்பியில் இருந்து சொரியப்படும் திரவத்துடன் சேர்ந்து நன்கு பற்களினால் அரைக்கப்பட்டு உணவுக்குழல் அல்லது களம் (Oesophagus) வழியால் வயிற்றுப் பகுதியில் உள்ள இரைப்பையை அடைகின்றது. இந்த இரைப்பையானது வயிற்றின் உட்பகுதியில் நீர் அடங்கிய இரட்டைச் சவ்வுப் பகுதியால் (peritoneum) சூழப்பட்டுள்ளது. இரைப்பையின் உட்பக்கச் சுவர்கள் சவ்வு சளித்தன்மை (Mucus) யாகவும் இருக்கும். இரைப்பை, உணவை அரைத்துப் பிசைந்து குழைக்கின்றது.

பின்பு இரைப்பையில் இருந்து உணவு சிறுகுடலுக்குச் செல்லுகின்றது. சிறுகுடலில் மூன்று பகுதிகள் உண்டு. அவையாவன

1. டியோடினம் - (Duodenum)
2. ஜிஜீனம் - (Jejunum)
3. இலியம் - (Elleum) என்பனவாகும்.

டியோடினம் என்ற முதல் பகுதியில் கல்லீரல், இணையம் ஆகியவற்றில் இருந்து சுரக்கும் பல அமிலங்களும், ஆல் கலங்களும் உண்டு. இவை இங்கு உணவைப் பதப்படுத்திக் கொடுக்கும். இரைப்பையில் நடைபெறும் வேலையிலும் பார்க்க இங்கு வேலை அதிகமாகும். பின்பு உணவுகள் ஜீஜீனம் (Jejunum) இலியம் (Elleum) என்பவற்றுக்கு வந்து உணவில் உள்ள புரதச்சத்து அமினோ அமிலமாக மாற்றப்படும். கொழுப்பு அமிலமாக மாற்றப்படும். காபோவைதிரேட் சர்க்கரையாக மாற்றப்படும்.

சிறுகுடலின் சுவர்கள் உணவில் மிச்சமான சக்தியையும், கழிவையும் பிரித்து எடுத்து சத்தை இரத்தத்துடன் கலக்கும். (புரட்டீன், சக்கரை கொழுப்பாக மாறும்)

செமிக்காத பொருட்களும், கழிவுப் பொருட்களும் பெருங்குடலுக்கு அனுப்பப்படுகின்றது. அங்கு நீர் உறுஞ்சப்பட்டு கழிவுகள் வெளியேற்றப்படுகின்றது. பெருங்குடலில் மியூக்கஸ் (Mucus) என்ற திரவம் சுரக்கின்றது. உணவுக்கழிவுகள் இளகிய நிலையை அடைய உதவுகின்றது.

கழிவுப் பொருட்கள் மலகுடலை (Rectum) அடைந்து குதம் (Anus) வழியால் வெளியேற்றப்படுகின்றது.

மேலும் வியாதிகள் நிலைபற்றிப் பார்ப்போம். அவையாவன:

இரைப்பை அழற்சி (Gastritis)
இரைப்பையில் புண் ( Stomach ulcer)
இரைப்பைப்புற்றுநோய் (Cancer of the stomach)
இரைப்பையினுள் இரத்தக்கசிவு (Stomach Bleeding)
அமீபா காரணமான சீதபேதி (Amoebic Dysentery)
பற்றீரியா காரணமான சீதபேதி (Bacillary Dysentery)
குருட்டுக்குடலில் (குடல்வளரி) தொற்று. (Appendicitis)
குடலிறக்கம் (Hernia)
வயிற்றோட்டம் (Diarrhea)
பெருங்குடலில் அழற்ச்சி (Colitis)
பெருங்குடலில் புற்றுநோய் (Cancer of the large intestine)
நெஞ்செரிவுடன் கூடிய ஏவறை (Heart Burn)
அரையைச் சார்ந்த குடலிறக்கம் (Inguinal Hernia)
நெரிவுற்ற குடலிறக்கம் (Strangulated Hernia)
குதவாசலின் உட்பகுதியில் குடலையொட்டி வளரும் சவ்வு (Hemorrhoids)

என்பவற்றைப் பொதுவாக எடுத்துக்கூறலாம். இவற்றில் சிலவற்றைப்பார்ப்போம்.

பெருங்குடல், கழிவில் உள்ள நீரை நன்கு உறுஞ்சாவிட்டால் வயிற்றோட்டம் என்ற வியாதி நிலை ஏற்படவாய்புண்டு. டியோடினத்தில் ஏற்படும் புண் பெப்டிக் அல்சர் எனப்படும். இது இரைப்பையிலும் ஏற்படலாம். இரைப்பைக்குச் செல்லும் பொருட்களை அமிலங்கள் தாக்கும். எதனையும் சுட்டெரிக்கும் தன்மை வாய்ந்தது. இதன் ஆற்றல் அதிகரித்தால் இரைப்பைச் சுவர் தாக்கப்பட்டு புண் ஏற்படும்.

மேலும் இரைப்பை தாக்கப்பட்டுப் புண் வருவதற்கு மேலும் சில காரணங்கள் உண்டு.

1. இரைப்பை டியோடினத்தில் இருந்து வரும் பித்தநீர் (Bile) மற்றும் கணநீர் (சதயம்) (Pancreatic enzyme) தாக்கத்தால் இரைப்பைச்சுவர் தாக்கப்பட்டுப்புண் ஏற்படலாம்.

2. நுண்கிருமிகளினாலும் இரைப்பைச்சுவர் தாக்கப்பட்டு புண் ஏற்பட இடம் உண்டு. இது பெரும்பாலும் 40 - 45 வயதிற்குப் பின்பு அதிகமாக ஏற்படுவதுண்டு.

புகைபிடித்தல், வேளைக்குச் சாப்பிடாமல் இருத்தல், மன அழுத்தம், மிஞ்சிய காரப்பொருட்கள் பாவித்தல் என்பனவற்றால் இரைப்பையில் புண் ஏற்பட இடமுண்டு.

நாம் உண்ணும் போது காற்று உள்செல்லும். உண்ணும் உணவை அமிலங்களும், ஆல்கலங்களும் தாக்கும் போது பல இராசாயன மாற்றம் ஏற்படும். இதனால் ஹைட்ரஜன், கரியமல வாயு, மென்தோல்சல்பைட் என பலவகைப்பட்ட வாயுகள் உண்டாகி வெளியேறும். ஆனால் முழுமையாக வெளியேற்றாது.

சிலருக்கு வாந்தி ஏற்படுவதுண்டு. நமக்குத் தேவையற்ற விரும்பாத உணவு, கிருமிவகை உட்சென்றால் உடனே மூளைக்கு இரைப்பை உணர்வு நரம்புகள் அறிவிக்கும். இவ்வேளை மூளை சிறுகுடலுக்கு உத்தரவு இடும். இந்நிலையில் சிறுகுடலைச் சுற்றியுள்ள தசைகளும், சுருங்கத் தொடங்கி இரைப்பைக்குள் இருக்கும் வேண்டாத பொருட்களை வாயின் வழியால் வெளியேற்றும். இதுவே சத்தியாகும். இதற்கு காரணம் கண்டு தகுந்த சிகிச்சை செய்யவேண்டிய நிலை இருப்பதினால் உரிய வைத்தியர்களைக் காணவேண்டும்.

சிலருக்கு வயிற்றோட்டம் வருவதுண்டு. பெருங்குடலில் மிஞ்சிய பொருட்களின் கழிவுவரும்போது அதில் உள்ள நீர் உறிஞ்சி எடுக்கப்படாவிட்டால் இது ஏற்படும். அல்லது சிறுகுடல் காலரா போன்ற கிருமிகளினால் தாக்கப்பட்டால் வயிற்றோட்டம் என்ற பேதி ஏற்படும். இதனால் வயிறு சுத்தமாகாது. தண்ணீர் தேவை அளவுகுறையும். இரத்த அழுத்தம் குறைந்து காணப்படும். எனவே அவ்வேளையில் எலுமிச்சம் பழரசம் + உப்பு கலந்து கொடுப்பதுடன் வைத்தியர்களை நாடிச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்வது மிக நன்று.




ஒருவருக்கு வயிற்றுவலி இருந்தால் முதல் நோயை நிதானிக்க வேண்டும். இந்த வலியானது அப்பெண்டிக்ஸ் (Appendix), சலாசயம் (Kidney) கருப்பை (Womb / Uterus) உணவு சமியாமை போன்றவற்றால் பெரும்பாலும் ஏற்படுவதுண்டு. எதற்கும் வைத்தியர்களை நாடிச் சென்றால் தகுந்த சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளமுடியும். பெருங்குடலில் வால்போல் இருக்கும் பகுதி தான் குடல்வளரி (Appendix) ஆகும். இதில் குடல் அழற்சி (Appendicitis) என்னும் வியாதி ஏற்படும். இவ்வேளையில் அவ்விடத்தில் வீக்கம், அடைப்புவலி, சுரம் காணப்படும். சிலவேளையில் வாந்தியும் இருக்கும். இதில் காணப்படும் வலி, தும்மல், இருமல் பெருமூச்சு ஏற்படும்போது கூடிக்காணப்படும். இவ்வேளையில் உடனடியாக வைத்தியசாலையை அடைந்து வைத்தியரை நாடி தகுந்த ஆலோசனைப்பெறவும். இதற்கு பெரும்பாலும் சத்திரசிகிச்சையே நடைபெறுவதை நாம் அறிவோம்.

மேலும் இவ்வுறுப்பில் சீழ்பிடித்து அதிகரித்தால் வெடித்துவிடும் நிலை ஏற்படும். இதனால் இதில் உண்டாகும் நஞ்சு அருகில் உள்ள உறுப்புகளுக்குப் பரவி உயிரிழக்கும் நிலையும் ஏற்படும். வயிற்றின் வலது புறத்தை அழுத்திப்பார்த்தால் தாங்கமுடியாத வலி இருக்கும். இரத்ததைப் பரிசோதித்துப்பார்க்கும் போது வெண்சீவ அணுக்கள் (W.P.C) நிறைந்து காணப்படும் எனக் கூறப்படுகின்றது. இதனால் நோய் தொற்று பல உறுப்புகளுக்கும் பரவிச்செல்லும் நிலை ஏற்படும். இவ்வியாதி தொற்றுக்கிருமி, கல்லடைப்பு என்பவற்றால் ஏற்படும்.

பெருங்குடலில் கட்டிகள் இருந்து தகுந்த சிகிச்சைகள்

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



தொடர்ச்சி 12ஆம் பக்கம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு:416.939.2013

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# மலிவான வாகன காப்புறுதி கம்பனிகளை கண்டு பிடித்து கனடாவில் சிபார்சு செய்யும் ஹனிரிக்ஸ் நிறுவனம்

## கனடிய தகவல் தொடர் 104

## Kanetix

வாகன காப்புறுதிகளை கனடாவில் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் பொதுவாக பின்வரும் நான்கு வழிகளில் பெற்றுகொள்ளலாம்.

1. குறிப்பிட்ட கம்பனிக்கு என பணிபுரியும் முகவர் மூலம் பெறுதல். (State Farm Company, Co-Operators Insurance Company)


சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


2. ஒன்றுக்கு மேற்பட்ட சில கம்பனிகளுக்கு பணி புரியும் தரகர் மூலம் பெறுதல் (By Independent Broker)

3. முகவர் என எவரும் இல்லாது நேரடியாக காப்புறுதி கம்பனியோடு தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு அல்லது இணையதளம் மூலம் பெறுதல். (உதாரணம் - TD Monex insurance company, Bel Air Direct Insurance Company)

4. நேரடியாக அரச காப்புறுதி கூட்டுஸ்தாபனங்கள் மூலம் பெறுதல்

ஆனால் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் ஒன்ராரியோ மாகாணத்தில் மாகாண அரசின் கூட்டுஸ்தாபனங்கள் வாகன காப்புறுதிகளை விநியோகிப்பதில்லை.

கனடாவில் பின்வரும் மாகாணங்களில் மட்டும் இம்மாகாண அரசின் கூட்டுஸ்தாபனங்கள் வாகன காப்புறுதிகளை விநியோக்கின்றன.

1. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் (Insurance Corporation of British Columbia)

2. மனிற்றோவா மாகாணம் (Manitoba Public Insurance)

3. சாஸ்காற்சுவான் மாகாணம் (Saskatchewan Government Insurance)

இம்மூன்று மாகாணங்களிலும் உள்ள போக்குவரத்து அமைச்சின் அலுவலங்களில் வாகன உரிமை பத்திரம் பெறும் போதே வாகனத்திற்குரிய காப்புறுதியினையும் சேர்த்து பெறலாம்.

கியூபெக் மாகாணத்தில் மட்டும் வாகன காப்புறுதியில் விபத்துகளில் ஏற்படும் உடல் காயங்களுக்குரிய காப்புறுதி திட்டத்தினை மட்டும் (Accident Benefits) மாகாண அரசில் இருந்து பெறலாம்.

ஏனைய வாகனத்தின் காப்புறுதி திட்டங்களை தனியார் காப்புறுதி கம்பனியில் இருந்தே பெறுதல் வேண்டும்.

தமிழர்கள் அதிகமாக வசிக்கும் இவ் ஒன்ராரியோ மாகாணத்தில் மட்டும் ஏராளமான கம்பனிகள் மேல் குறிப்பிட்ட முதல் மூன்று வழிகள் மூலம் வாகன காப்புறுதிகளை விநியோகம் செய்கின்றன.

இங்கு வாகன காப்புறுதி செய்து கொள்ள விரும்பும் ஒருவர் எவ்வளவு தொகை தமது காப்புறுதிக்காக மாத கட்டுபணம் செலுத்துதல் வேண்டும் என்பதனை பல்வேறு காரணிகளை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு கம்பனியும் தீர்மானிக்கின்றது. இத்தீர்மானம் என்பது ஒவ்வொரு நபருக்கும் கம்பனிக்கு கம்பனி வித்தியாசப்படும். இங்கு வாகன காப்புறுதி ஒப்பந்தம் செய்துகொள்ளப்போகும் ஒவ்வொரு வருக்கும் மேற்குறிப்பிட்ட காரணிகள் என்பது வெவ்வேறு நிலைப்பாடுகளில் இருக்கலாம்.

வெவ்வேறு நிலைப்பாடுகளில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் அவரவரின் நிலைபாட்டுக்கு ஏற்றமாதிரி மலிவான வாகன காப்புறுதிகள் எவை? எப்படி இவற்றினைக் கண்டு பிடிக்கலாம் இதுவே இங்கே எல்லோருக்கும் உள்ள கேள்விக்குறி.

பல்வேறு வழிகள் மூலம் பல்வேறு கம்பனிகளிலும் தகவல்களை வழங்கி குறைவான விலை உள்ள கம்பனி எது என்பதனை முகவர்கள் மூலமாகவோ நேரடியாகவோ தேடிப் பார்க்கலாம். ஆனால் இது இலகுவான வழி அல்ல. தங்களிடம் இருந்து தகவல்களை நேரடியாகவோ அல்லது இணையத் தளங்களினூடாகவோ அவரவர் நிலைப்பாட்டுக்கு ஏற்றமாதிரி மூன்று மலிவான காப்புறுதி கம்பனிகளை சிபார்சு செய்து அக்கம்பனிகள் தொடர்புகளையும் உருவாக்கி கனடாவில் கொடுக்கும் நிறுவனமே **'ஹனிரிக்ஸ்'** (Kanetix) என்னும் நிறுவனம் ஆகும்.

1999 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கும் இந்நிறுவனத்தில் சுமார் முப்பதுக்கு மேற்பட்ட காப்புறுதி கம்பனிகள் அங்கம் வகிக்கின்றன. (இந்நிறுவனம் வாகன காப்புறுதிகள் மட்டுமல்லாது ஏனைய காப்புறுதிகளிலும் மலிவானதை சிபார்சு செய்கின்றது)

இந்நிறுவனத்தின் இணையத்தள முகவரி www.kanetix.ca

இந்நிறுவனத்தின் தொலைபேசி இலக்கம்: **1.888.854.2503** அல்லது **416.598.5401** ஆகும்.

இவ் இணையத்தளத்தினுள் சென்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கி கொண்டே போதல் வேண்டும். இறுதியாக தங்கள் நிலைப்பாட்டில் தங்களுக்கு மலிவான கம்பனி எது என்பதனை விலையுடன் தகவல்களாக வழங்கப்படும். அத்துடன் தங்கள் தகவல்கள் சிபார்சு செய்யப்படும் மலிவான கம்பனிகளுக்கோ அல்லது அக்கம்பனிகளில் காப்புறுதி செய்யும் முகவர்களுக்கோ மின் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் அவர்களே நேரடியாக தொடர்புகொண்டு காப்புறுதி செய்ய வேண்டிய உதவிகளுக்கு வழி காட்டுவார்கள்.



## வருடாந்தப் போட்டிகள் - 2009

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தன் அங்கத்தவர்கள், அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடாத்தும் வருடாந்தப் போட்டிகள்.

பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், எழுத்துக் கூட்டிச்சொல்லுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. அங்கத்தவர்களின் வாரிசுகளை இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: St. Stephen's Pressbyterian Church
3817 Lawrence Ave.East
Scarborough,Ontario, M1G 1R2

காலம்: ஜுலை 04, 2009 - சனிக்கிழமை - காலை 8:30 மணிக்கு

விண்ணப்ப முடிவுத் திகதி: ஜுலை 02, 2009

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவத்திற்கும் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

*(905) 472-4194* *(416) 318-6195* *(416) 431-1060*
*(416) 856-8055* *(416) 321-5522*


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# சூரிய பகவானும் நாமும்

எமது வாழ்வில் சூரிய பகவானுக்கு முக்கிய பங்கு உண்டு. பகலவன் மகராராசியில் நுழையும் பொழுது தைப்பொங்கலும், மேடராசியில் நுழையும் பொழுது வருடப்பிறப்பும் கொண்டாடப்படுகின்றன. சூரிய நமஸ்காரம், சூரியக்குளிப்பு என்று பகலவனின் பெருமைகளை அடுக்கிச் செல்லாம்.

இக்கட்டுரையில் சூரியக்குளிப்பை மாத்திரம் கவனிப்போம். இலையுதிர்காலம், பனிக்காலம், இளவேனிற்காலம் ஆகிய ஒன்பது மாதங்களும் படிப்படியாகச் சூரியன் தெற்குநோக்கிச் செல்லும் பொழுது குளிர்காலம் ஆரம்பமாகிப் பூமத்திய ரேகையைத் தாண்டி மகர ரேகையை நோக்கி தெற்கே செல்லும் பொழுது பனிக்காலம் உருவாகின்றது. மீண்டும் வடக்கு நோக்கி வரும் பொழுது அகலக் கோடாகிய கர்க்கடகரேகையை அண்மிக்கும் பொழுது கோடை காலம் உருவாகிறது. என்ன இது பூமி சாத்திரப்பாடம் போல் இருக்கிறதே என அலுத்து விடாதீர்கள். இது ஒரு கால நிலை பற்றிய சிறு விளக்கம்.

சூரியக்குளிப்பு என்பது, சூரிய ஒளியானது எமது உடலில் பூரணமாகப்படும் படியாக திறந்த வெளியிலோ, கடற்கரை ஓரத்திலோ நின்று கொண்டு சூரியக் கிரணங்களைத் தோலினூடாக உள்வாங்குவதைக் குறிக்கும்.

அளவாக இக்கிரணங்கள் எமது தோலில் படும் பொழுது விற்றமின் D எமது உடலில் இயல்பாகவே உருவாகின்றது. சூரியக்கிரணங்கள் உறிஞ்சப்படும் அளவு நபருக்கு நபர் வித்தியாசப்படும். வெள்ளைநிறம், கபிலநிறம், கறுப்பு நிறம் என்று தோலின் நிறங்கள், அதில் உள்ள மெலனின் நிறப்பொருளின் செறிவுக்கு ஏற்ப வித்தியாசப்படும். மெலனின் நிறப்பொருளிற்கு சூரியக்கிரணங்களில் இருந்து வரும் புற ஊதாக்கதிர்களைத் தடுக்கும் தன்மை ஓரளவு உண்டு. புற ஊதாக்கதிர் A (U V A), புற ஊதாக்கதிர் B (U V B) என்ற கதிர்வகைகளில் விற்றமின் D யை உற்பத்தி செய்வதற்கு UVB கதிர்வகை தான் தேவைப்படுகின்றது. சூரியக்கதிர்கள் தோலில் ஊடுருவும் தன்மை மெலனின் நிறப்பொருளால் குறைக்கப்படுவதனால் வெள்ளைத்தோல் மனிதர்களிலும் பார்க்க, நிறத்தவர்கள், சற்றுக்கூடுதலான நேரம் சூரியக்குளியல் செய்தல் வேண்டும். அநேகமாக 10 நிமிடங்கள் தொட்டு 20 நிமிடங்கள் வரையிலான நேரம் போதுமானது.

மேலதிகமாகச் சூரியக்குளியல் செய்யும் பொழுது விற்றமின் D தயாரிக்கும் பொறிமுறை உடலினால் மூடப்பட்டுவிடும். பதிலாக தோலில் சுருக்கங்கள், புற்றுநோய்கள் என்பவற்றை ஏற்படுத்தலாம். இதுவும் தோலின் நிறத்திற்கேற்ப வேறுபடும். வெள்ளைத் தோலுடன் ஒப்பிடும்பொழுது நிறத்தோல் உடையவர்களுக்கு தோல் புற்றுநோய் ஏற்படுவது குறைவு. எனினும் அடிக்கடி சூரியக்குளியல் அல்லது வெயிலில் அதிக நேரம் நிற்கும் வேலை உடையவர்கள் தோலில் மாற்றங்கள் காணப்பட்டால் ஒரு தோல் வைத்தியரை, வல்லுனரை அணுகுவது நல்லது. அளவுக்கு மிஞ்சி தோலினூடுபுகும் UVA, UVB கதிர்கள் கலங்களில் உள்ள DNA என்ற பகுதியை விகாரமடையச் செய்து புற்றுநோய்க்கலங்களை உருவாக்கிவிடலாம்.

சூரியக்கதிர்களால் நன்மையும் உண்டு. அதேநேரம் அளவுக்கு மீறிய நேரம் சூரியக்குளியல் செய்யும் பொழுது தீமையும் உண்டு. குளிர்காலங்களில் சூரியன் வெகுதொலைவுக்கு சென்று விடுவதாலும் கனடா நாடு அகலக் கோடு 40க்கும் 70க்கும் இடையில் அமைந்து உள்ளதனால் குளிர்காலங்களில் புற ஊதா கதிர்களின் செறிவு விற்றமின் D யைத் திறம்படத் தயாரிக்கும்மளவிற்கு இருக்கமாட்டாது.

## சூரியத்தடுப்புக் களிம்பு

களிம்பு மருந்துகள் வாங்கும் பொழுது அது எந்த அளவுக்குப் புற ஊதாக்கதிர்களைத் தடுக்கும் என்பதை அறிந்து வாங்கவும். சூரியத்தடுப்புக்காரணி SPF ( Sun Protective Factor ) பல அளவுகளில் உண்டு. SPF 15, SPF 20, SPF 30, SPF 60 என்று பல அளவுகளில் இப்பூச்சு மருந்துகள் உண்டு.




## நலந்தானா! - 2

**Dr. K. Senthilnathan**
Health Educator
(Certified First and CPR Instructor)
***To learn and receive certificates on First aid and CPR courses. Pl. call 416-502-9252***

உதாரணமாக SPF 15ஐ எடுத்துக் கொண்டால் மருந்து ஒன்றும் பூசாமல் ஒரு நபரினால் வெயிலில், தோலில் கொப்பளங்கள் ஏற்படாமல் நிற்பதற்கு 20 நிமிடங்கள் எடுக்கும் என வைத்துக்கொள்வோம். அதே நபர் SPF 15 உள்ள களிம்பைப் பூசிக்கொண்டு வெயிலில் நின்றால் (20x15=300) அவரினால் 300 நிமிடங்கள் வரை நிற்கக் கூடியதாக இருக்கும்.

இது விளக்கம் தருவதற்காக கூறப்பட்ட உதாரணமாகும். கொப்பளம் ஏற்படுவதற்கு எவ்வளவு நேரம் செல்கின்றது என்று நீங்கள் நின்று பார்த்துவிடக்கூடாது என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

## கவனிக்க வேண்டியவை

1. தோலில் மருந்தைப் பூசினாலும் அதிக வியர்வை ஏற்படும் பொழுது அம்மருந்து சற்று வியர்வையுடன் வடிந்து சென்று விடும்.




2. கடலில் தண்ணீரில் நீந்திய பின்பு மருந்து கழுவப்பட்டுவிடும்.

3. கவனித்து அடிக்கடி பூசிவிடுவது நல்லது.

4. மருந்து வாங்கும்பொழுது UVB, UVA இரண்டையும் தடுக்கக் கூடிய மருந்தை வாசித்து வாங்கவும்.

5. ஒவ்வாமைத்தன்மை உண்டா என்பதைப் பரீட்சித்துப் பார்த்த பின்பு தோலில் பூசவும்.

6. SPF 30 அளவு அநேகமாகப் போதுமானது. எனினும் உங்கள் வைத்தியரிடம் ஆலோசனை கேட்கவும்.


# சமிபாட்டுப்பகுதி...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்யாமல் விட்டால் அவை முற்றி தாக்கப்பட்டு மலத்துடன் இரத்தம், சளித்தன்மையான திரவம் கலந்து வருவதைக்காணலாம். இவ்வியாதி பெரும்பாலும் 60 வயதிற்கு மேற்பட்டவருக்கு வருவதுண்டு. சிலவேளை புற்றுநோய் அறிகுறியாகவும் இருக்கமுடியும்.

இரைப்பை, பகுதியில் அமிலம் உண்டு. இது உணவு செரிக்கப்படுவதற்கு பயன்படுகின்றது. ஆனால் இது அதிகரித்தால் இரைப்பையில் உள்ள சுவர்களின் சவ்வு சேதம் அடைந்து புண் ஏற்படுகின்றது. உரிய நேரத்தில் சிகிச்சை செய்யாமல் விட்டால் நாளடைவில் புற்றுநோயாகவும் மாறிவிடும். எனவே முன்கூட்டியே வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்வது நன்று. இந்த வியாதியானது அதிகமான காரப்பொருட்கள், மித மிஞ்சிய மது, உரியவேளை சாப்பிடாமல் இருத்தல், உண்ணாவிரதம், நோன்பு போன்ற நிலையில் இரைப்பை பகுதியில் உள்ள அமிலங்களோடு சேர்ந்து அதிகமாகி மெல்லிய சவ்வுப்பகுதியை தாக்கி புண் நிலையை ஏற்படுத்தும். எனவே இந்நிலையில் இருந்து காப்பாற்ற நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து வயிற்றின் இடது பக்கத்தில் ஏற்படும்வலி. செரிமானம் இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம். இது அமீபா நோய் ஆகவும் இருக்கலாம். இதேபோன்று சிறுநீரகத்தில் கற்கள் தோன்றினாலும் வலி ஏற்படும். இந்த வலி வயிற்றின் பின்பக்கமும் ஏற்படும். ஆனால் சிறுநீரகக்கற்கள் சிறுநீர் குழாய்வரை தொடர்ச்சியாகக் காணப்படும். மற்றும் கற்கள் அசையும் பொதுதான் அதிக வலி இருக்கும். ஆனால் கடுமையானவலி விட்டுவிட்டு வந்தால் அது சிறுநீரககற்களினால் ஏற்படும் வலிதான் என்பதை அறியலாம்.




ஆனால் அமீபா மூலம் ஏற்பட்டிருந்ததால் இப்படி நிலை இருக்காது. இந்நிலையில் நீர்போன்ற மலம் அடிக்கடி போய்க்கொண்டு இருக்கும். மலம் சளியுடனும் செல்லும். பசி இருக்காது. காய்சலும் ஏற்படலாம். இருதய துடிப்பு வேகமாக இருக்கும். எனவே ஏற்பட்டுள்ள நோய் எப்படியானது என்பதை உடன் அறிந்து கொள்ள வேண்டும். எதற்கும் உரிய வைத்தியரைக் காணவேண்டும்.

பித்தம் அதிகரித்தால் கல்லீரலில் உள்ள கொழுப்பைக்கரைக்கும். இதன்நிறம் மஞ்சளாக இருக்கும். இரத்தத்தில் உள்ள ஈரம், பித்தநீருக்கு மஞ்சள் நிறத்தைக் கொடுக்கின்றது. இதனை ஆங்கிலத்தில் Bile Pigment என அழைக்கப்படும். சிறு குடலில் கொழுப்பைக் கரைத்து விட்டு பித்தம் கல்லீரலுக்கு வரும். கல்லீரலில் சரியாக வேலை செய்யாவிட்டால் பித்தநீர் அளவு இரதத்தில் அதிகமாகிவிடும். இதனால் மஞ்சள் காமாலை (Jaundice) நோய் ஏற்படுகின்றது. சில தொற்றுக்கிருமிகள் கல்லீரலைத் தாக்கினாலும் இந்நோய் வரலாம்.

அடுத்து நமது இரத்தத்தை எடுத்துச் செல்லும் குழாய்களில் ஏற்படும் முடிச்சுத்தான் மூலநோய் ஆகும். இந்த முடிச்சு ஆசனவாயின் அருகே காணப்படும். இதனை ஆங்கிலத்தில் Piles என அழைக்கப்படும். மலம் வெளியேறும்போது அல்லது மலம் வெளியேறிபின் இரத்தம் வெளியேறுவதே மூலரோத்தின் முதல் அறிகுறியாகும். இதில் இருவகை உண்டு. உள்மூலம், வெளிமூலம் என்பனவாகும். உள்மூலமானது வெளியில் தெரியாது. ஆனால் மலம் கழிந்தபின் சொட்டு, சொட்டாக இரத்தம் விழுந்தவண்ணம் இருக்கும். வீக்கமோ, கட்டியோ தெரியாது. ஆனால் வெளிமூலம் நன்கு தெரியும். கசிவுகாணப்படும். கடி சிலவேளையில் காணப்படும். மலம் கழிக்கும் போது வெளிதள்ளப்படும் நிலையும் உண்டு. மூலவியாதியின் போது வெளியேறும் இரத்தம் சிவப்பாக கபிலநிறம் அற்று காணப்படும். இடையிடையே எரிச்சலும் அரிப்பும் ஏற்படும்.

ஆனால் மலவாசலில் அரிப்பு தன்மை கீரைப்பூச்சி (Thread worm) காரணமாகவும் இருக்கலாம். இது மூலநோய் ஏற்படுவதற்கு ஏதுவாகவும் அமையலாம். சிலர் இம்மூலவியாதி பரம்பரை வியாதி எனவும் கூறுவார்கள். எனவே எதற்கும் மலச்சிக்கல் ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

உணவில் நார்ப்பொருள் அதிகமுள்ள உணவுவகைகளை கையாளவேண்டும். காய்கறி, கீரை பாவித்துவரவேண்டும். வேண்டிய பழவர்க்கம் எடுப்பது மிக நன்று. உஷ்ணமான இடங்களில் நீண்டநேரம் நிற்பதை தவிர்த்தல் வேண்டும். தண்ணீர் வேண்டியளவு குடிப்பது மிக நன்று. இரவு படுக்கைக்குச் செல்லும்போதும், படுக்கையைவிட்டு எழும்பும் காலை வேளையும் நீர்பாவிப்பது மிக நன்றாகும். எதற்கும் தங்கள் வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த ஆலோசனைகளும், சிகிச்சையும் பெற்றுக்கொள்ள முடியும். இரத்த சோகை ஏற்படாது பாதுகாத்துக்கொள்ளவும். இரத்தம் தொடர்ந்து போய் கொண்டிருந்தால் சோகை நிலை ஏற்படும். இந்நிலையை தங்கள் வைத்தியர் எடுத்துக்கூறுவார் கவலைப்பட வேண்டாம்.

# மாறக்கூடாத குடும்ப அமைப்பு

## ஓடும் நீர் உறைவதில்லை

குடும்பம் ஒரு கோவில், குடும்பம் ஒரு பல்கலைக்கழகம், குடும்பம் ஒரு சமுதாயத்தின் ஆணிவேர், குடும்பம் குழந்தைகளுக்கான வழிகாட்டி என்றெல்லாம் நாம் கூறும்போது ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட மரபுரீதியாகச் சில ஒழுங்குமுறைகளை உள்ளடக்கிய குடும்ப அமைப்பை அடிப்படையாகக் கொண்டே கூறுகிறோம். இந்த ஒழுங்கு படுத்தப்பட்ட குடும்ப அமைப்பு என்பது கணவன், மனைவி, குழந்தைகள் என்ற முறையில் அமைந்திருத்தல் வேண்டும். இவ்வாறு கூறும்போது எல்லாக்குடும்ப அமைப்புக்களும் இந்த ஒழுங்கு முறையில் தானே அமைந்திருக்கின்றன என்று நீங்கள் கூறுவது எனக்குக் கேட்கிறது. ஆனால் அது சமுதாயத்தின் பார்வையைத் தான் குறிக்கின்றதே தவிர ஒவ்வொரு குடும்ப அமைப்பிலும் இந்த ஒழுங்குமுறை இருக்கின்றதா என்பதை நீங்களே ஆராய்ந்து பார்த்தால் பெரும்பாலான குடும்பங்களில் இந்த அமைப்பை காணமுடிவதில்லை.

குடும்பத்திற்கு ஒரு நல்ல தலைமை இருத்தல் வேண்டும் என்பதற்கு இரண்டாம் கருத்து உலகத்தில் இல்லை. இது சாதி, இன, மத சமுதாய வேறுபாடுகள் எதுவும் இன்றி அன்று முதல் இன்றுவரை ஏற்றுக்கொள்ளப் பட்டுவருவது. எதிர்காலத்தில், ஏன் உலகம் உள்ள அளவும் கடைப்பிடிக்கப்பட வேண்டியது மாறக்கூடாத ஒரு அமைப்பு. கணவனே குடும்பத்தின் தலைவன் என்று கூறுவது ஆணுக்கு அகங்காரத்தையும் பெண்ணுக்குத் தாழ்வு மனப்பான்மையையும் கொடுப்பதாகக் கருதக்கூடாது. எந்த ஒரு அமைப்பும் அது குடும்பமாக இருந்தாலும் சரி, அரசாங்கமாக இருந்தாலும் சரி ஒரு வியாபார நிறுவனமாக இருந்தாலும் சரி ஒரு தலைமையின் கீழ் செயற்படவேண்டியது அவசியமாகின்றது. எனவே தலைமை தவிர்க்கப்படமுடியாதது.

இங்கே குடும்பத்தின் தலைவன் கணவன் என்று அமைவது அவசியம் என்று கூறவேண்டியதில்லை. இந்தத் தலைவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்பதைச் சிறிது ஆராய்வது அவசியம். தலைமை கொடுக்கப்படுவதேயன்றி எடுக்கப்படுவதல்ல (Leadership is given not taken) ஒருவருக்குத் தலைமைத்துவத்தைக் கொடுக்கும் போது அதற்கான தலைமைத்துவத் தகைமைகளை அவர் கொண்டிருந்தால் மட்டுமே சாத்திய மாகும். இந்த விதிமுறை குடும்ப அமைப்பில் மாறுபட்டுள்ளது. ஒரு ஆண் திருமணம் செய்யும் போது தகைமைகளைப் பரீட்சிக்காமலே தலைமைத்துவம் வழங்கப்படுகின்றது. ஏனெனில் அவரிடமிருந்து தரமான ஆளுமைத்திறன் அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

> அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
>
> நன்றியுடன் KG Master

நடைமுறையில் பலரிடம் ஆளுமை யில்லாத ஆண்மையே காணக்கூடிய தாக இருக்கின்றது. ஆளுமைக்கான தகுதிகள் எவையுமின்றித் தமது தலைமைத்துவத்தை நிலை நிறுத்த முயற்சிப்பவர்கள் பலர். இவர்கள் தம்மைத் தாமாகவே தலைவனாகத் தெரிவு செய்து கொள்வார்கள். தமது கருத்துக்களை மற்றவர்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணித்துக் கொண்டிருப்பார்கள். காலப்போக்கில் இவர்களது கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

ஒரு தலைமை நிலையாக இருப்பதற்கு அத்தலைமையின் கருத்துக்கள் செயற்பாடுகள், தீர்மானங்கள் மற்றவர்களால் ஏற்கப்படுவதுடன் பின்பற்றப்படவும் வேண்டும். குடும்பத்தலைவனுக்கும் இது விதிவிலக்கல்ல. இயல்பாகவே வழங்கப்படும் தலைமைத்து வத்தை ஆளுமையைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தக்கூடிய வழிகளை அறிவியல் மூலமாகவும், அனுபவரீதியாகவும் அறிந்து நடைமுறைப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு ஆணுக்கும் உண்டு. மாறுபட்ட இயல்புகளைக் கொண்ட இரண்டு மனிதப்பிறவிகளின் உறவுகளுக்குக் கணவன், மனைவி என்ற புதிய அந்தஸ்து வழங்கப்பட்டு ஒன்று கூட்டப்படுவதே குடும்பத்தின் ஆரம்பமாகின்றது. இங்கே ஆளுமை ஆணிடமும் ஆளுமை தவிர்ந்த ஏனையவை பெண்ணிடமும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

ஆளுமை அல்லது ஆண்மை என்பது ஒரு கணவனின் வீரம், மனஉறுதி, வாய்மை, நேர்த்தியான சிந்தனை, மற்றவர்கள் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், திட்டமிட்ட எதிர்கால நோக்கு, சேவை மனப்பாங்கு, வெற்றி மனப்பாங்கு போன்ற தகைமைகளை உள்ளடக்கியது. தனது மனைவிக்கும் குழந்தைகளுக்கும் மட்டுமல்ல தன்னைச் சார்ந்த சமுதாயத்திற்கே உதாரணபுருசர்களாக வாழ வேண்டிய தலையாய பொறுப்பைக் கொண்டது. தனது குடும்பத்தைப் பொறுத்த வரையில் தனது எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாகத் தமது வாழ்வை நெறிபடுத்தவேண்டிய கடப்பாட்டைக் கொண்டது.

குடும்பங்களில் காணப்படும் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு அடிப்படையாகக் காணப்படுவது இந்த ஆளுமையின் பலவீனமே. ஆளுமைக்கான தகைமையை, ஆண்மையை, இழக்கும்போது தலைமை உதாசீனப்படுவதால் ஒரு வழிகாட்டியில்லாத கப்பல்போல் குடும்பங்கள் தடுமாற்றம் அடைகின்றன. இத்தடுமாற்றங்கள் இனிவரும் சந்ததியினரையும் பாதிக்கின்றன. தவறான பழக்கவழக்கங்கள், போலித்தனம், பொய்யுரைத்தல், மற்றவர்களை ஏமாற்றுதல், இறை நம்பிக்கையின்மை போன்ற பல்வேறு காரணங்களால் தமது ஆளுமையை இழந்துவிடுகிறார்கள். இவர்கள் தங்களது எதிர்காலச் சந்ததியினருக்கு என்ன தகவல்களைக் கொடுக்கின்றார்கள் என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்.



KG Master-kgmaster@rogers.com

ஒரு குடும்ப அமைப்பில் கணவன், மனைவி, குழந்தைகள் என்ற ஒழுங்கு முறையைக் குலைக்கும் ஆண்களும் தோல்வியாளர்களே. சிலர் தனது மனைவிக்கு முதல் தனது பெற்றோருக்கு இடமளிப்பார்கள். இது ஆளுமைக்கு ஒரு அசிங்கம். தனது மனைவியையும், குழந்தைகளையும் ஒதுக்கிவிட்டு பெற்றோர்களுக்கு முன்னுரிமை கொடுத்து தனது குடும்பத்தின் தலைமைத்துவத் தகைமையை உதாசீனம் செய்யும் ஆண்கள் வாழ்வியலில் வழுக்கிவிழுந்து விடுகிறார்கள். திருமணமானதும் பெற்றோர்களைக் கைவிடுங்கள் என்று கூறுவதாக எண்ணினால் அதுவும் ஆளுமையற்ற ஆண்மையே. பெற்றோரை உயிர் உள்ளவரை பேணிப்பாது காக்க வேண்டியது ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். பெற்றோராகிய மனித தெய்வங்கள் உடலியல், உளவியல் ரீதியாகப் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் கணவன், மனைவி, குழந்தை என்ற ஒழுங்கு முறைக்குள் நுழைய விட்டுக் கூத்தாடுவது தான் தவறு. சில ஆண்கள் மனைவிக்கு முன்னர் தமது சகோதர, சகோதரிகளைப் புகுத்துவார்கள். இவர்களுக்கு நான் கூறக்கூடிய அறிவுரை என்னவென்றால், ஆண்மையை அடகுவைத்த நீங்கள் அடிமையாகிவிட்டதனால் ஆண்டிபோல் ஒரு பாத்திரத்தைக் கையில் ஏந்தி ஒதுங்கிவிடுங்கள். இது சமுதாயத்திற்கு நீங்கள் செய்யும் பெரும் உதவி.

ஒரு குடும்ப அமைப்பில் கணவனுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும் எனும்போது மனைவி இரண்டாம் இடம் என்பதல்ல. ஒரு கூட்டமைப்பின் ஆளுமைசார்ந்த விடயங்களுக்கு அவர் முன்னுரிமை கொண்டவராகிறார் என்பது தான் பொருள். ஒரு தலைமையின் சிறப்பு அந்தத் தலைமைசார்ந்துள்ள அத்தனை பேரதும் சிறப்பே. குடும்பம் ஒரு கோவில் என்பது ஒரு கோவிலில் உள்ள தெய்வங்கள் போன்று சமத்துவமான அந்தஸ்தைக் கொண்டவர்களது சேர்க்கையே அது. இங்கே கணவன், மனைவிக்கு இடையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது.

கணவன், மனைவி, குழந்தைகள் என்ற ஒழுங்கில் ஒரு மனைவி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தனது கணவனை விடுத்து குழந்தைகளுக்கு முன்னுரிமையளிக்கக் கூடாது. இதைப் பெரும்பாலான பெண்கள் உணர்ந்து கொள்வதில்லை. உங்கள் குழந்தைகளின் மீதான அன்பு ஒரு தலைமையை அவமதிப்பதாக அமையக்கூடாது. ஒரு அவமதிக்கப்பட்ட தலைமை அந்தக்குடும்ப ஒழுக்கத்திற்கு ஒரு சாவுமணி. நடைமுறையில் நாம் காணும் இளையவர்களது தவறான நடத்தைகளுக்கு குடும்பத்தின் பலவீனமான தலைமையே அடிப்படையாக அமைந்துள்ளது. கணவன் மனைவிக்கிடையிலான பூரண புரிந்துணர்வு ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட தலைமைக்கு வழிவகுக்கும்.

தலைமை தவறு செய்வத்தில்லை, அல்லது தவறு செய்யக்கூடாது என்று எதிர்பார்ப்பதும் தவறானது. ஒரு பரிபூரணமான மனிதன் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. தவறு செய்யவதும் அந்தத் தவறிலிருந்து கற்றுக்கொள்வதும் வாழ்வியலின் அடிப்படை. ஒரு குடும்ப அமைப்புக்குள், வாழ்க்கைப் பாதைக்குள் பல்வேறு தவறுகள் நிகழ்வது தவிர்க்க முடியாதது. தவறான பொருளாதார நடவடிக்கைகள் புதிய முயற்சிகளில் தோல்வி போன்ற விடயங்கள் ஒரு கற்றல் முறையாக அமைய வேண்டுமேயன்றி ஒரு குடும்ப அமைப்பின் ஆணிவேரைத் தகர்ப்பதாக அமையக்கூடாது.

ஒரு குடும்ப அமைப்பின் சிறப்பியல்புகள் உங்கள் எதிர்காலச் சந்ததியினரால் பின்பற்றப்படுபவை. வாழ்வில் வெற்றியாளர்களாகிய அனைவரும் கடவுளுக்கு அடுத்ததாகத் தமது பெற்றோரைப் போற்றுகிறார்கள். இந்தப் பெற்றோர்கள் இங்கே கூறிய குடும்ப அமைப்பு முறையால் தமது குழந்தைகளுக்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர்கள். உங்கள் வெற்றி மட்டுமல்ல உங்கள் குழந்தைகளினதும் அவர்களது சந்ததியினரதும் சிறப்பான எதிர்காலம் இந்த ஒழுங்கு முறையினால் மட்டுமே உருவாக்கப்பட முடியும்.

**• கணவன், மனைவி, குழந்தைகள், பெற்றோர்கள், ஏனையோர்.**

வாழுங்கள், வாழ்ந்துகாட்டுங்கள், உங்கள் குழந்தைகளுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் சிறந்த வழிகாட்டியாகுங்கள்.


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3223 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்

(416) 431-5000

1 877 707 3223

On TV

Saturdays at 10:30 am

Rogers Cable Channel - 20

Bell Express vu Channel - 219



# பெயர் இடுக - இயற்பெயர் இடுக

எழுத்து ஆக்கங்களுக்கு ஆக்கியவருடைய இயற்பெயர் இடுவது மிகமிக அவசியமானது. இயற்பெயர் என்பது பெற்றோர்கள் வைத்த பெயர். பிறப்புப்பத்திரத்தில் உள்ள பெயர். கல்விக்கூட இடாப்பில் இருக்கும் பெயர். முற்காலத்தில் ஆக்கியோர் பெயர் இடப்பட்டது. பின்பு நவீன இலக்கியம் புதுமை இலக்கியம் என மேற்குலகப் போக்கில் வெளியான படைப்புக்களுக்கு புனைப்பெயர் இடும் வழக்கம் உருவானது.

இந்த வழக்கம் உண்டானதற்கு இரண்டுகாரணங்களைச் சொல்லலாம். ஒரு இதழில் ஒரு எழுத்தாளரின் இரண்டு விடயதானங்கள் இடம்பெற வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டவுடன் இயற்பெயரை இரண்டு விடயங்களுக்கும் போடாமல் ஒரு விடயத்திற்கு இயற்பெயரையும் அடுத்த விடயங்களுக்கும் புனைப்பெயரையும் (Nickname or Pen name) இட்டார்கள். 1930 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற 'ஈழகேசரி' பத்திரிகையின் ஆசிரியரான சோ. சிவபாதசுந்தரம் அப்பத்திரிகையில் பல பகுதிகளைத் தொடங்கி ஒவ்வொரு பகுதிக்கும் வேண்டிய புனை பெயர்களைச் சூட்டிக்கொண்டார் என்றும் கல்கிக்கு எத்தனை புனைபெயர்கள் உண்டோ அத்தனை புனைபெயர்கள் சிவபாதசுந்தரத்திற்கும் உண்டு என்றும், அக்காலத்திலே சாவித்திரி என்ற பெண்பால் புனை பெயரை இட்ட எழுத்தாளர் சோ. சி என்னும் கனக செந்திநாதன் எழுதியுள்ளார்.

தாம் எழுதிய விடயம் முக்கியமாயினும் தனது பெயர் வெளியில் தெரியக்கூடாது (பயந்தா? பண்பாடா?) என்பதனாலும் பலர் புனை பெயரை இட்டுக்கொண்டார்கள். இதிலே வேடிக்கையான விவகாரம் 'யாரோ!' என்று போட்டு அநாமதேய - பெயர் அற்ற பிரசவங்கள் பிரசுரமாகியமை. இயற்பெயரைப் போடாது புனைபெயர் போட்டவர்கள் அனுபவித்து ஏமாற்றங்கள் அனேகமானவை. ஒருவிடயம் மக்கள் மத்தியில் மிகுந்த பாராட்டையும் வர வேற்பையும் பெற்றுவிட்டால் அந்த புனை பெயரோடு வெளியான ஆக்கத்திற்குச் சொந்தம் கொண்டாடியவர்கள் பலர் ஆகினர். இத்தகைய நிகழ்வுகளைக் கோடிகாட்டவே திரைப்பட இயக்குனர் காலஞ் சென்ற ஸ்ரீதர் 'கல்யாணப்பரிசு' என்ற திரைப்படத்தில் நகைச்சுவை நடிகர் தங்கவேலுவை எழுதாத எழுத்தாளர் பைரவன் ஆக்கி நாட்டு நடப்பை நயம்படக் காட்டினார். பந்தமற்ற சொந்தம் கொண்டாடி புனைபெயர்களை விலக்கியவர்களும் இருக்கிறார்கள்.

ஒருகாலத்தில் இயற்பெயர்களும் ஆள்மாறாட்டம் பெற்ற வரலாறும் உண்டு. இது குறித்து சிநேகிதி, பெண், பாவைவிளக்கு, வேங்கையின் மைந்தன், புதுவெள்ளம், சித்திரப்பாவை ஆகிய படைப்புக்களால் பெயர்பெற்ற எழுத்தாளர் அகிலன் தனது ஆரம்பகால அனுபவத்தை கட்டுரை ஆக்கியுள்ளார். ஒருநாள் அகிலன் புகையிரதத்தில் பயணம் செய்து கொண்டிருந்தார். புகையிரதப்பெட்டியுள் மேல் தளத்தில் உள்ள படுக்கைப் பலகையில் படுத்திருந்தார். ஒரு நிலையத்தில் ரயில் நின்றது, சிலர் இறங்கினர். பலர் ஏறினர். அகிலன் படுத்திருந்த பெட்டிக்குள் அவர் பக்கத்தில் கிடந்த இருக்கைகளில் நான்கு நபர்கள் கூட்டாளிகளாய் ஏறி இருந்தனர். அதற்குள் வேறு ஒருவரும் ஏற்கனவே மூலை இருக்கையில் முடங்கியிருந்தார். ரயில் ஓடத்தொடங்கியது. வந்தவர்கள் கதைக்கத் தொடங்கினார்கள். அந்தக்காலத்தில் இந்தக்காலம் போல் சினிமா, நடிகர், நடிகைகள் அரசியல் ஆர்ப்பாட்டம், தலைவர்கள் கொண்டாட்டம் என்ற பேச்சு இருந்ததில்லை. ஊர் வளப்பம், விவசாயம், தொழில்துறை, கோயில் திருவிழாக்கள் போன்றவற்றோடு கலைமகள், கல்கி, ஆனந்தவிகடன், அமுதசுரபி, குமுதம் முதலிய இதழ்களில் வெளியான கதைகள் பற்றியும் பயணங்களில் மக்கள் உரையாடுவார்கள்.

அகிலன் பயணம் செய்த ரயிலுக்குள் இருந்தவர்கள் அகிலன் எழுதிய கதைகள் பற்றி உரையாடத்தொடங்கினார்கள். இருந்தவர்கள் நால்வரும் அகிலனின் கதைகளை வாசித்தவர்கள். இதனால் பரவசம் உற்றவர்கள். உரையாடல் உச்ச ரசனையில் உலவியது. இந்த அகிலனை நான் பார்க்க ஆசைப்படுகிறேன். எத்தனையோ வருடங்களாய்த் தேடுகின்றேன் காணமுடியவில்லை என்று ஒருவர் கவலையோடு அங்கலாய்த்தார். மற்றவர்களும் அகிலனைக்காண வேண்டும் என்ற தங்கள் ஆவலை வெளிப்படுத்தி அங்கலாய்த்தவரோடு கலந்தனர்.

மூலையில் சாந்தபடி இருந்தவர் சற்று நிமிர்ந்தார். ஒரு செருமலைச் செருமினார். இது கவன ஈர்ப்புக்குரிய செருமல். அவர்கள் அவரை உற்று நோக்கினர். 'நீங்கள் அதிஸ்டக்காரர்கள்' என்றார். ஏன் நாங்கள் அதிஸ்டக்காரர்கள்?'

நீங்கள் காண ஆசைப்படும் அகிலன் இந்த ரயிலுக்குள்ளேயே இருக்கிறார் என்றார் மூலைப்பிரமுகர். உரையாடியவர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள். 'ஐயா! அவர் எங்கே இருக்கிறார்? இந்தப் பெட்டியுக்குள்ளேயா? அல்லது வேறு பெட்டிக்குள்ளா? என்று அவசரம் காட்டினார்கள்.

மேலே படுத்துக்கிடந்த அகிலனுக்கு திகில் உண்டகியது. தன்னைத் தெரிந்தவர் தன்னைக்காட்டிக் கொடுக்கப் போகிறார்; என்ற நினைப்பில் முகத்தைத் தேய்த்துத் துடைத்தார். சட்டையை சரி செய்தார். வேட்டியை ஒழுங்குபடுத்தினார். அவர்காட்டும் வரை பேசாமல் கிடப்போம் என்று மௌனமானார். உரையாடியவர்களின் ஆவல் மீதூர மூலைப்பிரமுகர் 'நான்தான் அந்த அகிலன் என்று கூறியபடி ஒரு புன்சிரிப்பை உதிர்த்தார். அகிலனின் ரசிகர்கள் விசிறிகளாகி வீச்செடுத்து அவரை ஆரத்தழுவினர். அடுத்த ஸ்ரேசன் வந்தது. வண்டி நின்றது. அவருக்கு காப்பியா? பாலா? என்று கேட்டு வாங்கிக் கொடுத்து மகிழ்ந்தனர்.

படுக்கையில் கிடந்த உண்மை அகிலன் திகைத்துத் திணறி அசையாமல் கிடந்து பயணத்தை முடித்தார். அன்றிலிருந்துதான் தனது புகைப்படத்தையும் தன் கதைகளோடு பிரசுரிக்க கொடுத்தாக எழுதியுள்ளார். தன்னைத் தெரியாதவர்களிடத்தில் தன்னைப் புகழ்தல் படைப்பாளர்களுக்கு, சிருஷ்டியாளர்களுக்கு தேவையானதே என்றார் இலக்கண நூலாசிரியரான பவனந்திமுனிவர்.

'தன்னை மன்றிடை அறியாரிடத்தில் தான் தற்புகழ்தல் தகும் புலவோர்க்கே' என்பது அவருடைய சூத்திரமாகும். பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டல், நிலையங்களுக்குப் பெயர் வைத்தல், அமைப்புகளுக்கு நாமம் தரித்தல் எல்லாம் ஒரு அடையாளத்தின் அவசியத்திற்கே. தொல்காப்பியம் என்னும் நூல் ஆசிரியர் என்மனார் புலவர், என்மனார் புலவர் என்று தமக்கு முன்பிருந்த புலவர்களின் இலக்கியக் கோட்பாடுகளுக்கே தாம் இலக்கண வரம்பு கட்டுவதாகக் கூறினார். தனது சொந்தச் சிந்தனைகளை வேறாகவும், தனக்கு முன்பிருந்த புலவர்களின் சிந்தனைகளை வேறாகவும் குறிப்பிட்டு கூறிய பெருமகன் தொல்காப்பியர்.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன். இமையோர் விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என்னும் உயரிய அனுபவ உண்மையை கூறியது தமிழ் விடுதூது என்ற நூல். இந்த நூலில் கூறப்பட்ட சொற்களை வைத்தே பல நூல்கள் எழுந்துள்ளன. பலருடைய கடித மட்டைகளில் (Litter Pad) மகுட வாசகங்களாய் வந்துள்ளன. ஆயின் தமிழ் விடுதூது எழுதிய ஆசிரியர் தனது பெயரை ஆக்கியோர் உரிமையுடன் இட்டுக்கொள்ளவில்லை. இது பணிவுமாம் என்றும் பெரிமைப்பண்பு சார்ந்ததா? மொழிப் பயன்மட்டும் எண்ணிய தலத்தின் பாற்பட்டதா? என்று தெரியவில்லை. நல்லகாலமாக வேறு ஒருவர் தனது பெயரைப் போட்டு அதனை வெளியிடவில்லை. அது அந்தக் காலம். அன்று புலமைச் சொத்துத் திருடர்கள் இல்லை. காரணம் கள்ளாமை காத்த நெஞ்சுடையார் வாழ்ந்த காலமது.

மனித குலத்தின் நல்வாழ்வுக்காகவும் மேம்பாட்டுக்காகவும் ஆக்கங்களை உருவாக்கியவர்கள் பண்பாளர்கள், சான்றோர்கள் என்று கணிக்கப்பட்டார்கள். மனஉந்துதல்களை உணர்வு நிலையிலிருந்து அறிவு நிலைக்கு செலுத்தி அமைதியாகவும் ஆறுதலாகவும் இருந்து தமது ஆக்கங்களை உருவாக்கினார்கள். தங்கள் கூற்று எவரையும் புண்படுத்தக்கூடாது எவருடைய வாழ்க்கையையும் குழப்பிவிடக்கூடாது என்ற கவனமும் கவலையும் அவர்களுக்கு இருந்தது. தம்மால் உருவாக்கப்படும் ஆக்கங்கள் தமது உணர்வின் கொந்தளிப்புக்களால் உருவாகி நிறைவடைந்ததும் திரும்பி அதனை வாசித்துப்பார்த்து அதனை மீள்பார்வை செய்யும்போது அது மனித குலத்தை அல்லல்படுத்தும் அழிக்கும் என்று அறிவு அறிவுறுத்தினால் அதனை வெளியிடாமல் கிழித்து எறிந்தும் எரியூட்டியும் ஆறுதல் அடைந்திருக்கிறார்கள். சான்றோர்களின் புலமைத்திறன் வித்துவம் வீச்சு வெளிப்பாடு எல்லாம் மனித குலத்தின் அன்பு வாழ்வு, அரவணைப்பு வாழ்வு, உறவு இறுக்கம், பாசம், நேசம், ஒழுக்கம், ஒற்றுமை முதலியவற்றிற்கு பங்கம் ஏற்படுத்தாத படைப்புக்களாகவே இருந்தன. இப்பண்பு ஏன் குறைந்தது குலைந்தது என்று ஆராய்ந்தால் துன்பக்கேணியுள் துவளநேரிடும்.

வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய்கூறுவல் என்ற சங்ககாலப் புலவன் தொடங்கிய மெய்மை என்பது புதுமை கொண்ட புரட்சிகரமான பரிமாணங்களை எடுத்தமைக்கு வாழ்வியல் அசைவு இயக்கங்களும் காரணமாயின என்பதும் உண்மையே.

சைவசமயச்சூழலில் இருக்கும் சித்திரபுத்திரனார் கதைபோன்று சோவியத்யூனியனிலும் படைப்பாளிகள் குறித்த பதிவுகளை வைத்திருந்த சித்திர புத்திரனார் பற்றியும் ஒரு எழுத்தாளன் எழுதியிருந்தான். சோவியத்சித்திர புத்திரனார் இறந்துபோன ஒரு எழுத்தாளர் பேச்சாளர் பற்றிய பதிவுகளை எழுதி கடவுளுக்கு முன்னால் நின்று வாசித்தார். நாவாலும் பேனாவாலும் மக்களைக் குழப்பிய கொலைகள், கொள்ளைகளுக்குத் தூண்டிய குற்றங்களுக்காக அந்தப் புத்திஜீவிக்கு நரகக்கிடங்கு வாழ்க்கை தீர்ப்பாகியது. இயற்பெயர் இடாது புனைப்பெயர் இட்டாலும் சித்திரபுத்திரனாரிடத்திலும் கடவுளிடத்திலும் அடையாளத்தை மறைக்கமுடியாது என்பதும் அக்கதையின் சாராம்சமாகும்.


ஆன்மீகத்துறைசார்ந்த படைப்பாளிகள் தங்கள் ஆக்கங்களை வெளிப்படுத்தி அதனை மக்கள் கடைப்பிடிக்கும்படி வேண்டுவார்கள் .அந்த வேண்டுகோளில் தாம் சொல்லுவதை சத்தியவாக்காகக் கூறுவார்கள். இன்னபெயர் கொண்ட நான் கூறுகிறேன் ஆணையிடுகிறேன் நம்பிச் செயல்படுத்துங்கள் என்று தங்கள் பெயர்களையும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரிடம் இந்தப் போக்கைக் காணலாம்.

சம்பந்தனின் திருநீற்றுப்பதிகம் என்ற பத்துப்



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 30ஆம் பக்கம்



# மாயாண்டி குடும்பத்தார் – திரைவிமர்சனம்

தமிழ் திரைப்படத் துறையில் ஒரு கெட்ட வழக்கம் உண்டு. ஒரு திரைப்படம் பெரிய வெற்றியை பெற்றால், அதனை ஞாபகமூட்டுவது போல் வரிசையாக தொடர்ந்து நிறைய படங்கள் வரும். ‘அதுதான் வெற்றி பார்முலா, கண்டுபிடித்து விட்டோம்’ என்பதுபோல். ‘சுப்பிரமணியபுரம்’, ‘வெண்ணிலா கபடிக் குழு’ ஆகியவற்றின் வெற்றிக்குப் பிறகு அப்படி தமிழ் திரையுலகம் கண்டுபிடித்திருக்கும் வெற்றி பார்முலா கிராமியக் கதைகள். இந்தத் தடத்தில் வந்திருக்கும் படம்தான் ‘மாயாண்டி குடும்பத்தார்’! காதல், பாசம், பங்காளி சண்டைகள் நிரம்பிய ஒரு வழக்கமான தமிழ் ‘மண்வாசனை’ திரைப்படம்.




தமிழக கிராமங்களில், குறிப்பாக தெக்கத்தி பக்கங்களில் வெகு சாதாரணமாக நடக்கிற பங்காளி சண்டைதான் இந்தப் படத்தின் கதாநாயகன். மற்றபடி பெரிய நட்சத்திர நடிகர்கள் இல்லை. வெளிநாட்டில் காதலர்கள் ஆடிப்பாடும் காட்சிகள் இல்லை. குலுக்கல் நடனம் இல்லை. ஆபாசம் இல்லை. எனவே, குடும்பத்துடன் பார்க்கலாம். ஒரு புதுமையாக பத்து இயக்குனர்களை நடிக்க வைத்திருக்கிறார்கள். இவ்வளவு புதுமைகளே போதும், படம் வெற்றி பெற்றுவிடும் என்று இயக்குநர் நினைத்துவிட்டார் போலும். அந்த நம்பிக்கையில் கதையில் கோட்டை விட்டுவிட்டார்.



**- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

அண்ணன், தம்பிகளான மாயாண்டி குடும்பத்துக்கும் விருமாண்டி குடும்பத்துக்கும் இடையே பங்காளிச் சண்டை. பொன்வண்ணன், சீமான், ஜெகன்நாத், தருண்கோபி என மாயாண்டி குடும்பத்தில் நான்கு மகன்கள் இருக்கிறார்கள். இதில் பொன்வண்ணன், பூச்சி மருந்து அடிப்பவர். சீமான், புரட்சி பேசிக்கொண்டு பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் நபர். ஜெகன்நாத், மைக்செட் வைத்திருக்கிறார். நான்காவது பையன் தருண்கோபி. படிப்பு வாசனையே அறியாத மாயாண்டி குடும்பத்தில் இவன் மட்டும் படித்தவன். இந்த நால்வருக்கும் ஒரு சகோதரி. அவரை ராஜ்கபூருக்கு கட்டி கொடுத்துள்ளார்கள். இந்த ஐந்து பேருக்கும் தாய்மாமனாக வரும் இளவரசு, டீக்கடை வைத்திருக்கிறார்.

மூத்தவர் விருமாண்டியின் குடும்பத்தில் சித்தப்பனை எப்போதும் முண்டிக்கொண்டிருக்கும் வாரிசுகள். அதில் ஒருவன் மட்டும் விதி விலக்கு. சித்தம் சரியில்லாத லூசு பையனாய் வரும் சிங்கம்புலி, மாயாண்டி குடும்பத்தினருடன் பாசமாகவும் சாப்பாட்டு ராமனாகவும் இருக்கிறார்.

மாயாண்டி இறந்து போகும்போது, மூத்த மருமகள் இருவரும் சொத்தைப் பிரிக்கச் சொல்லுகிறார்கள். சொத்தை விற்றுத்தான் தருண்கோபியைப் படிக்க வைத்ததால், அவனுக்கு சொத்தில் பங்கில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ‘வீட்டுக்கு ஒரு நாள் அவனுக்கு சோறு போடுகிறோம்’ என அண்ணிகள் சொல்ல, அண்ணன்மார்கள் கொதிக்கிறார்கள். தன்னால் அண்ணன்மார் குடும்பம் சிதையக்கூடாது என்று தருண்கோபி சம்மதிக்க, தாய்மாமன் இளவரசும் இதை ஆதரிக்க சொத்து பிரிகிறது. தினம் ஒரு வீட்டில் சாப்பாட்டு என்று சொல்லியிருந்தாலும் கூட கொளுந்தனை அவமானப்படுத்துகிறார்கள் அண்ணிகள். அவன் தோட்டத்துக் குடிசையில் தானே கஞ்சி காய்ச்சிக் குடித்து விட்டு கல்லூரிக்குச் சென்று வருகிறான்.

இந்த களேபரங்களுக்கு மத்தியில் தருண்கோபிக்கு ஒரு காதலும் இணையாக நகர்கிறது. பொறியியல் படிப்பை முடிக்கும் அவனுக்கு நல்ல வேலையும் கிடைக்கிறது. அப்போது தன் காதலிக்கு ஏற்கெனவே திருமணம் ஆனது அவனுக்குத் தெரிகிறது. அவன்தான் நல்லவனாயிற்றே. எனவே, காதலியை அவன் புரிந்துகொள்கிறான். அவனது மூத்த அண்ணிக்கு வியாதி வந்து ஆபரேஷன் செய்த போது, அவளைக் காப்பாற்ற அவன் மேற்கொண்ட முயற்சிகளில், அவனது அண்ணிகளும் திருந்தி அவனைப் புரிந்து கொள்கிறார்கள். மணிவண்ணனின் தங்கையான, கஸ்டப்பட்ட காலத்தில் தன் மகள் திருமணத்துக்கு சேர்த்து வைத்திருந்த பணத்தைக் கொடுத்து வலிந்து உதவிய, அத்தையின் மகளை தருண்கோபி திருமணம் செய்துகொள்கிறான்.

‘சுபம்’ என படத்தை முடிக்க சிறந்த இடம். ஆனால், தமிழ் சினிமா வெற்றி பார்முலாவின் படி, ‘க்ளைமாக்ஸில் ஒரு திருப்பம் இருக்கவேண்டும்’ என்பதால், விருமாண்டியின் மகன் அத்தை மகளை வம்பிழுக்க, தருண்கோபி அவர்களை அடித்து நொறுக்கி விட்டு, பெரியப்பாவிடம் பாச மழை பொழிந்து அவர் மனதை மாற்றிய பிறகே படம் முடிகிறது.

மாயாண்டியாக வரும் இயக்குனர் மணிவண்ணன், லூசு பையனாய் வரும் இயக்குநர் சிங்கம்புலி மற்றும் இயக்குநர் ஜெகன் ஆகியோர் நடிகர்களாக முத்திரை பதித்திருக்கிறார்கள். இயக்குநர் இளவரசு இயல்பாய் நடித்திருக்கிறார். மற்றபடி, இயக்குநர் சீமான் விவசாய போராட்டம் நடத்துபவராக வருகிறார். ஒரு பாடலை பாடிவிட்டு, இரண்டு காட்சிக்கு ஒரு முறை வசனம் பேசிவிட்டு போகிறார். இயக்குநர் பொன்வண்ணனுக்கும் ஒன்றும் சொல்லி கொள்ளும்படியாய் இல்லை. தருண்கோபி எப்ப பார்த்தாலும் இடுங்கிய கண்களுடன், எந்த விதமான எக்ஸ்பிரஷனும் இல்லாமல் வந்து போகிறார்.

ஒரு ஆண்கள் தொலைகாட்சித் தொடர் போல்தான் இருக்கிறது. ஆனால், சில குறைகளைத் தவிர்த்துப் பார்த்தால், ‘மாயாண்டி குடும்பத்தார்’ சராசரி தமிழ்ப் படத்தின் தரத்தைவிட உயர்ந்ததுதான்.







# நவதிருப்பதி - நலம் தரும் நவதிருப்பதிகள்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 59



மார்கழி மாதம் மாதவனுக்கு உகந்த மாதம் என்பார்கள். இம்மாதத்தில் வரும் அமாவாசை தினத்துக்கு அடுத்த தினம் வைகுண்ட ஏகாதசி தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் விரதம் இருந்து பெருமாளை தரிசிப்பவர்களுக்கு சொர்க்கத்தில் இடம் நிச்சயம் என்பது நம்பிக்கை. தமிழகத்தின் தென்பகுதியில், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் மற்றும் அதனை சுற்றியுள்ள நத்தம், திருப்புளியங்குடி, பெருங்குளம், இரட்டை திருப்பதிகள், தென்திருப் பேரை, திருக்கோளூர், ஆழ்வார்திருநகரி ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களுக்கு சென்று வழிபடுவது மாதவம் செய்த பலனை அளிக்கும். நவதிருப்பதிகள் என்றழைக்கப்படும் இந்த ஒன்பது வைணவ சேத்திரங்களும் நவகிரகங்களுடன் தொடர்புடையவை. நமது இந்த மாத உலா, இந்த நவதிருப்பதிகள்தான். இறை நம்பிக்கை இல்லாதவர்களும் இந்தத் தலங்களுக்கு பயணம் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது. தாமிரவருணி நதியின் கரையில் அருகருகே அமைந்துள்ள இந்தக் கோயில்கள், அப்பகுதியில் ஒருகாலத்தில் செழித்திருந்த வேளாண்மைக்கும் பண்பாட்டுக்கும் ஆதாரம்.

நவதிருப்பதிகளில் முதலாவது வருவது ஸ்ரீவைகுண்டம். நவகிரகங்களில் சூரியனின் அம்சம் கொண்டது, பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும் ஸ்ரீவைகுண்டம் கள்ளர்பிரான் கோயில். இங்கு வைகுண்டநாதர் மூலவராக இருக்கிறார். தன்னிடமிருந்த வேதங்களை திருடிசென்ற கோமுகாசுரனை தோற்கடிக்க வேண்டி, பிரம்மன், இங்கு அமர்ந்து தவம் செய்ததாக புராணம் கூறுகிறது. திருநெல்வேலி - திருச்செந்தூர் சாலையில், தாமிரவருணி நதியின் கரையில், தாமிரபரணியின் கடைசி தடுப்பணையை ஒட்டியுள்ளது ஸ்ரீவைகுண்டம். தாமிரபரணி வற்றாத ஜீவ நதி என்பதால் இங்கு கோடையிலும் நீர் இருக்கும். இதனால் செழிப்பான பூமியாக உள்ளது ஸ்ரீவைகுண்டம். இங்குள்ள கோபுரம் உயரமானது அல்ல. முகப்பு மண்டபமும் சிற்பங்கள் அற்றது. ஆனால், உள்ளே செல்லச் செல்ல கோயிலின் பிரம்மாண்டம் நம்மை சூழ்ந்துகொள்ளும். கோயிலின் முகப்புக் கோபுரத்தின் விளிம்பில் நுண்ணிய சிறிய கல்சிற்பங்கள் உள்ளன. ராமர் பட்டாபிஷேகத் தோற்றம், அனுமன் சீதையுடன் நிற்கும் ராமர் போன்ற சிலைகள் மிக அழகானவை. கோபுரத்தில் பலவகையான சுதையாலான காமச் சிற்பங்கள், கேளிசிற்பங்கள் உள்ளன.

திருநெல்வேலி - திருச்செந்தூர் தேசிய நெடுஞ்சாலையில், தாமிரவருணி நதியின் கரையில், ஸ்ரீவைகுண்டத்தை அடுத்து வரும் சிற்றூர் ஆழ்வார்திருநகரி. நவகிரகங்களில் குருவின் அம்சம் கொண்டது இங்குள்ள கோயில். இங்கு மூலவர் ஆதிநாதர், தாயார் ஆதிநாத வல்லி, திருகூர்வல்லியுடன் அருள்பாலிக்கின்றார். பழம்தமிழ் புலவர் நம்மாழ்வார் அவதரித்த தலம் என்ற சிறப்பும் ஆழ்வார்திருநகரிக்கு உண்டு. இங்கு நம்மாழ்வார் பதினொரு பாசுரங்களால் மங்களாசாசனம் செய்துள்ளார். ஆழ்வார்திருநகரியில் பார்க்க வேண்டிய முக்கியமான இடம், கோயிலில் உள்ள உறங்கா புளியமரம்தான். சுமார் 5,100 ஆண்டுகளை கடந்து இன்றும் இந்த மரம் நிற்கிறது என்கிறார்கள். இந்த புளியமரத்தினடியில்தான் நம்மாழ்வார் வாழ்ந்திருந்தார் என்றும், தன் குருவை தேடியலைந்த மதுரகவியாழ்வார் இங்கே நம்மாழ்வாரைக் கண்டடைந்து தன் குருவாக ஏற்றுக்கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. திருப்புளியாழ்வார் என்ற பெயரில் ஒரு வளாகத்துக்குள் உள்ள மிகத்தொன்மையான இந்த மரம், பலவாக பிளந்து பட்டைகளிலிருந்து மீண்டும் முளைத்திருக்கிறது. இன்றும் இங்கே நம்மாழ்வாருக்கு தனி சன்னிதி இருக்கிறது. ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளது போன்ற சிறப்பான சிற்பங்கள் ஆழ்வார்திருநகரி கோயிலிலும் உள்ளன. குறவன் - குறத்தி, வீரபத்ரர் - மோகினி, ரதிமன்மதன், திமிறிப்பாயும் குதிரைகளும் அவற்றின் மேல் வீற்றிருக்கும் வீரனும், துதிக்கை உள்ள யாளிகள், தூண்களிலும் மேலுத்தரங்களில் உள்ள சிங்கமுக யாளிகள் ஆகிய அனைத்து சிற்பங்களும் முக்கியமானவை.

ஆழ்வார்திருநகரியில் இருந்து இரண்டு கி.மீ. தொலைவில் உள்ளது, திருப்பதி திருக்கோளூர். இங்கு மூலவராகிய வைத்தமாநிதிபெருமாள் புஜங்கசயனத்தில் ஆதிசேசன் மீது பள்ளிக் கொண்டுள்ளார். உற்சவராகிய நித்திய பவித்ரன் நின்ற திருக்கோலத்துடன் திருமகள், பூமாதேவியுடன் காட்சியளிக்கிறார். பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான மதுரகவிஆழ்வார் இந்த ஊரில்தான் பிறந்தார் என்பது இதன் சிறப்புக்கு மற்றுமொரு காரணம். அவருக்கு இங்கு தனி சன்னதி உள்ளது. செவ்வாய் அம்சம் கொண்டது இத்தலம். திருக்கோளூர் சிற்பங்கள் ஏதுமில்லாத நடுத்தரமான கோயில். என்றாலும், கோயிலின் முக்கியமான கவர்ச்சியே ஆற்றங்கரையில் பசுமையான சூழலில் அமைந்துள்ளதும், மையக் கருவறை நிறைத்துப் படுத்திருக்கும் பெரிய பள்ளிகொண்ட பெருமாளும்தான்.

ஆழ்வார்திருநகரியில் இருந்து மூன்று கீ.மீ. தொலைவில் உள்ள இரட்டை திருப்பதி என்றழைக்கப்படும் துலைவில்லிமங்கலம். இங்கு பெருமான் ஸ்ரீநிவாசர், தாயார் அலமேலுமங்கை, பத்மாவதி ஆகியோருடன் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார். உற்சவர் - தேவர் பிரான். துலையும் (தராசு), வில்லும் சாபவிமோசனம் அடைந்த தலம் என்பதால் துலைவில்லிமங்கலம் என்ற பெயர் உண்டானது என்பது வரலாறு. நவகிரகங்களில் ராகு அம்சம் கொண்டது இந்த ஊர். துலைவில்லி மங்கலத்தில் அருகருகே அமைந்துள்ள இரட்டை திருப்பதி கோயில்களுள் அடுத்த கோயிலில் மூலவர் அரவிந்த லோசனர். கேதுவின் அம்சம் கொண்டது இந்தக் கோயில். சுப்பரபர் என்ற முனிவர் இந்த இரண்டு தலங்களையும் ஒரே கால கட்டத்தில் பிரதிஷடை செய்ததால் இரட்டை திருப்பதி என்று அழைக்கப்படுகிறது.

நவகிரகங்களில் சந்திரனின் அம்சம் கொண்டது திருவரகுணமங்கை என்னும் நத்தம். மோட்சத்தினை கொடுப்பது இந்த தலம் என்கிறார்கள். இங்கு பெருமாள் விஜயாசனர், தாயார் வரகுண மங்கை, வரகுணவல்லியுடன் அருள்புரிகிறார். இத்தலத்தில் பிறவி எடுத்ததால் சொர்க்கம் நிச்சயம் என்பது ஐதீகம்.

நவகிரகங்களில் புதனின் அம்சம் கொண்டது திருப்புளியங்குடி. ஸ்ரீவைகுண்டத்திலிருந்து தூத்துக்குடி செல்லும் வழியில் வரகுணமங்கைக்கு அடுத்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது இத்தலம். மூலவர் பூமிபாலகர், புஜங்கசயனத்தில் ஆதிசேடன் மீது காட்சியளிக்கிறார். இங்கு, மூலஸ்தானத்தில் சயன கோலத்தில் இருக்கும் பெருமாளின் வயிற்றிலிருந்து வளர்ந்துள்ள தாமரைக்கொடி,

### எப்படி செல்வது? எங்கே தங்குவது?

சென்னையில் இருந்து திருநெல்வேலிக்கும் தூத்துக்குடிக்கும் தினமும் ரயில் போக்குவரத்தும் பேருந்து போக்குவரத்தும் உள்ளது. இந்த இரண்டு நகரங்களில் இருந்துமே நவதிருப்பதிகள் மிக அருகில்தான் உள்ளன. ஆனால், நவதிருப்பதிகளான ஒன்பது ஊர்களுக்கும் பேருந்து மாறி, மாறி ஏறிச் சென்று வருவது சிரமம். அதிக நேரம் பிடிக்கும். எனவே, அனைத்து ஊர்களும் பக்கத்தில் பக்கத்திலேயே உள்ளதால், வாடகை வாகனம் ஒன்று அமர்த்தி சென்று வந்தால் ஒரே நாளில் அனைத்துத் தலங்களையும் தரிசித்து விடலாம். சென்னையில் இருந்து வருபவர்களுக்கு ‘தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்’ ஏற்பாடு செய்து தருகிறது. மாதம் இருமுறை சென்னையிலிருந்து நடத்தப்படும் இச்சுற்றுலா முதல் மற்றும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் புறப்படுகிறது. மூன்று நாள் தங்கும் வசதியுடன் கூடிய பயணத்துக்கு நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ.1,100 ஆகும்.

**வழிப்போக்கன்**

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

வீடு, மனை, நிலம் வியாபாரம்,
வியாபாரக்கட்டிடம் வாங்க, விற்க
அழையுங்கள் Ratheesh





Ratheesh Subramaniam, B. Sc (Hons)
Sales Representative

Cell: 416-303-4005 Office: 416 - 321-6969
Email: ratheesh_maniam@hotmail.com

HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga - 905.712.2666
*Independently owned & operated

கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது

# “தமிழ் சினிமா பாடல் வரிகள் மிகவும் தாழ்ந்திருக்கின்றன”

## நேர்காணல்: கவிஞர் மனுஷ்யபுத்திரன்



தமிழ் இலக்கிய வட்டாரத்தில் முக்கியமான ஒரு கவிஞராக அறியப்படுபவரும், ‘உயிர்மை’ இலக்கிய இதழ் ஆசிரியருமான மனுஷ்யபுத்திரன், கமலஹாசனின் ‘உன்னைப் போல் ஒருவன்’ படத்தில் பாடலாசிரியராக அறிமுகமாகிறார். சென்னையில் நடைபெற்ற இப்படத்தின் ஊடகவியலாளர்கள் சந்திப்புக்கு வந்திருந்த கவிஞர் மனுஷ்யபுத்திரனை சந்தித்தோம். ‘உன்னைப் போல் ஒருவன்’ பாடல் அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டார்.

கேள்வி: தமிழின் முதல் இருபெரும் முன்னணி நடிகர்களில் ஒருவர் கமலஹாசன். அதுபோல் மலையாளத்தில் முதல் இருபெரும் கதாநாயகர்களில் ஒருவர் மோகன்லால். இந்த இருவரும் இணையும் படம் என்பதால் ‘உன்னைப் போல் ஒருவன்’ திரைப்படம் அதிகம் எதிர்பார்ப்புக்கு உள்ளாகியிருக்கிறது. மேலும், இந்தப் படத்தில் கமலஹாசனின் மகள் ஸ்ருதி இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். இவ்வளவு எதிர்பார்ப்பும் பிரபலமும் இருக்கும் ஒரு படத்தில் பாடலாசிரியராக அறிமுகமாகுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மனுஷ்யபுத்திரன்: நான் ஒரு பாடல் எழுதுவேன் என்றோ, பாடலாசிரியர் ஆவேன் என்றோ ஒருபோதும் நினைத்ததில்லை. இந்நிலையில், இப்படியொரு பெரிய படத்தில் பாடல் எழுத கிடைத்திருக்கும் வாய்ப்பு... நிச்சயம் அதிஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். எதைச் செய்தாலும் அதை மிகப் பிரகாசமாக செய்யவேண்டும் என்று விரும்புவேன். நான் இலக்கியம் சார்ந்து ஈடுபட்ட பணிகளில் அந்தத் துறையின் முதன்மையான ஆளுமைகளுடன் பணியாற்றியிருக்கிறேன். சினிமாவிலும் அத்தகைய ஒரு துவக்கம் கிடைத்ததற்கு காரணம் எப்போதும் என்னுடன் இருக்கும் அதிஷ்டம்தான் என்று தோன்றுகிறது.

கேள்வி: தமிழ் இலக்கிய உலகில் ஒரு தீவிர படைப்பாளியாக அறியப்படுபவர் நீங்கள். பொதுவாக தமிழ் சிற்றிதழ் சூழலில் இயங்கும் எழுத்தாளர்கள், ‘வெகுஜன வியாபார சினி-மா’வில் பணியாற்றுபவர்களை எதிர்த்தே எழுதி வந்திருக்கிறார்கள். இந்நிலையில் அப்படியொரு சூழலில் இருந்து சினிமாவுக்கு வருவது எப்படி இருக்கிறது?

மனுஷ்யபுத்திரன்: தமிழ் சினிமாவில் ஒரு புதிய அலை உருவாகி வரும் ஒரு காலகட்டத்தில் எனக்கு இந்த வாய்ப்பு வந்திருக்கிறது. இதில் நான் மனத்தடை கொள்ள எதுவும் இல்லை என்றே நினைக்கிறேன். ஒரு கவிஞனாக, எழுத்தாளனாக நான் உற்சாகத்துடன் சினி-மாவில் வேலை செய்வதற்கு உகந்த கால கட்டம் இதுதான்.

கேள்வி: ஏற்கெனவே எஸ்.ராமகிருஷ்ணன், ஜெயமோகன், நாஞ்சில்நாடன் ஆகியோர் தமிழ் திரைப்படங்களில் பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் மூவரும் இணைந்து ஒரு படத்துக்குப் பாடல்களும் எழுதியிருக்கிறார்கள். தீவிர எழுத்தாளர்கள் திரைத்துறைக்கும் வருவது நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என நினைக்கிறீர்கள்?

மனுஷ்யபுத்திரன்: திரைத்துறைக்கு மட்டுமல்லாமல், சமூக புறக்கணிப்பை மட்டுமே பார்த்திருக்கும் எழுத்தாளனுக்கும் இது சில நல்ல விளைவுகளை ஏற்படுத்தலாம்.

கேள்வி: கமலஹாசனை ஏற்கெனவே உங்களுக்குத் தெரியுமா?

மனுஷ்யபுத்திரன்: ‘உன்னைப் போல் ஒருவன்’ பட அறிமுக விழா ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பத்திரிகையாளர் ஒருவர் கமலிடம், “தீவிர இலக்கிய உலகைச் சேர்ந்த மனுஷ்ய புத்திரனையும் இரா. முருகனையும் உங்களுடன் பணியாற்ற ஏன் அழைத்தீர்கள்” என்று கேட்டபோது, “நட்பு ஒரு காரணம். ரசனை ஒரு காரணம்” என்று கமல் பதில் அளித்தார். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நான் ‘உயிர்மை’ பதிப்பகத்தை ஆரம்பித்தபோது, அவர்தான் தொடங்கி வைத்தார். அதன்பின் நீண்டகாலம் அவரை சந்திக்கவில்லை. சென்றவருடம்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்


**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

Independently owned & operated

*“Dream is yours responsibility is ours”*

எமது நிறுவனம் பற்றிய சில தகவல்கள்

- *3 Brokers to Help / Assist*
- *Open 7 days And After Hours Services Availlable*
- *Regular Training Provided*
- *Exclusive Projects for HomeLife GTA Sales Agents Only (Better Prices And Deposit Structure for Buyers)*
- *2 Branches: Scarborough & Mississauga*
- *Convenient Locations*
- *Private Room*



Broker / Owner



Broker/Manager



Broker / Owner

*To Join the Success full Respectful Team*

**Please Call @ 416.321.6969 / 905.712.2666**

www.homelifegtarealty.com Email: gtarealty@gmail.com

1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 28, Mississauga

# "தமிழ் சினிமா...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

சுஜாதாவின் மறைவின்போது மீண்டும் சந்தித்தேன். அவர் என் கவிதைகளைப் படித்திருக்கிறார் என்பதை அறிவேன். அது ஒரு மானசீகமான நட்பு, பிரியம்... தமிழில் எழுத்தாளர்கள் பலரோடும் கமலுக்கு அந்தகைய மானசீக பந்தம் உண்டு. அவர் ஒரு நவீன எழுத்தாளனையோ, கவிஞனையோ தன்னுடன் பணியாற்ற அழைப்பது மிகவும் இயற்கையானது. அவனை அவருக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்திருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை.

- மா. கிருஷ்ணன் -

கேள்வி: பாட்டெழுதிய அனுபவம் பற்றி சொல்லுங்கள்...

மனுஷ்யபுத்திரன்: 'உன்னைப் போல் ஒருவன்' படத்தின் இயக்குநர் சக்ரி பாடல் இடம்பெறும் சூழலை விரிவாக விளக்கினார். அது வன்முறையின் பேரழிவைப் பற்றிய பின்புலம். இசையமைப்பாளர் ஸ்ருதி, அவர் பாடி பதிவு செய்த ஒரு சரணத்தை கொடுத்து அந்த பாடலின் இயல்பை பற்றிக் கூறினார். வீட்டிற்கு போய் அந்த சரணத்தை திரும்பத் திரும்ப கேட்டேன். பனி மிகுந்த பின்னிரவில் எனது முதல் பாடல் பிறந்தது. அடுத்த நாள் காலையில் கமலைப் போய்ப் பார்த்தேன். அந்த பாடலை வெகு கவனமாக வாசித்தார். பிறகு, கவிதைக்கும் பாடலுக்கும் இடையிலான வித்தியாசங்களைப் பற்றி நுணுக்கமாக குறிப்பிட்டு, சில வரிகளில் இருக்கும் இறுக்கத்தை கொஞ்சம் தளர்த்த முடியுமா என்று கேட்டார். செய்து தருவதாக கூறினேன். அப்போது அங்கே ஸ்ருதி வந்தார். பாடலை பாடிப் பார்த்துவிட்டு தனது மெட்டுக்கு பாடல் கச்சிதமாக பொருந்துவதாக குறிப்பிட்டபோது சந்தோஷமாக இருந்தது. அடுத்த நாளே ரிகார்டிங் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தார்கள். கமல், தன் சொந்தக் குரலில் அந்தப் பாடலை பாடினார்.

கேள்வி: இப்பொழுது இசையுடன் கேட்கும் போது, உங்கள் வரிகள் உங்களுக்கு என்ன உணர்வை ஏற்படுத்துகின்றன?

மனுஷ்யபுத்திரன்: சொற்கள் பாடலாக மாறுவதைப் பார்ப்பது மிகப் பெரிய அனுபவம். நான் ரிகார்டிங் தியேட்டரில் அமர்ந்தபடி அந்த மாஜிக் நிகழ்வதை பார்த்துக்கொண்டிருந்தேன். ஸ்ருதியின் அற்புதமான இசையில் கமல் அந்தப் பாடலை பாடியபோது எனது வரிகளைத் தாண்டி அது மனதை கரையச் செய்யும் வேறொரு கலைப்படைப்பாக மாறுவதை கண்டேன். என் கண்களில் நீர் தளும்பியது. எனது வரிகள் எனக்கே புத்தம் புதியதாக மாறின. மறக்க முடியாத அனுபவம் அது. இந்தப் பாடலின் இன்னொரு வடிவத்தை ஸ்ருதி பாடியிருகிறார். நமது காலகட்டத்தின் மாபெரும்



துயரத்தை வெளிப்படுத்தும் பாடலாக அது எல்லோருடைய இதயத்தையும் தொடும் என்றே நினைக்கிறேன்.

கேள்வி: இன்றைய தமிழ் சினிமா பாடல்கள் பற்றி?

மனுஷ்யபுத்திரன்: தமிழ் திரைப்பட பாடலாசிரியர்களில் கண்ணதாசனும் வைரமுத்துவும் மிகவும் தனித்துவமான ஆளுமை கொண்ட கவிகள். தமிழ் வாழ்க்கையின் ரத்த நாளங்களில் கலந்த எண்ணற்ற வரிகளை அவர்கள் எழுதியிருக்கிறார்கள். பிறகு, வந்த பாடலாசிரியர்கள் யாரும் அத்தகைய ஆளுமை கொண்டவர்கள் அல்ல. சிறிது காலத்திற்கு முன்பு ஏ.ஆர்.ரஹ்மானின் இசை நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்தேன். ரஹ்மானின் இசையும் ஹரிகரனின் குரலும் நம்மை எங்கோ ஒரு உயர்ந்த அனுபவத்திற்குள் இட்டுச் செல்கையில் வரிகள் மிகவும் தாழ்ந்திருந்தன.

கேள்வி: சினிமாவிற்கு தொடர்ந்து எழுதுவீர்களா?

மனுஷ்யபுத்திரன்: நிச்சயமாக. எனக்கு கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் முழுமையாக பயன்படுத்துவேன். தமிழில் தனிப்பட்ட இசை ஆல்பங்கள் வெளிவருவது சாத்தியமானல், அது ஒரு கவிஞனுக்கு மிகவும் உற்சாகம் தருவதாக அமையும்.



# ஆப்கானிஸ்தானின் பெண்கவி

இப்படித்தான் அந்த மறக்கமுடியாத காலை தொடங்கியது. சூரியன் யன்னல் வழியாக வந்து என் படுக்கையில் விழுந்து கிடந்தான். இரண்டு மலைகளுக்கு நடுவாக அவன் சாமர்த்தியமாக வந்தான். வானம் ஒரு நல்ல நாளைத் தரக் காத்திருந்தது. ஆனால் பெருந்திரளான மக்கள் கூடியிருப்பதுபோல வெளியே சத்தம் கேட்டது. இரண்டே இரண்டு பேர்தான் ஆனால் அவர்கள் ஒரு சைன்யத்துக்கு சமமாக சத்தம் போட்டு பேசினார்கள். பேசியவர்களில் ஒருவர் என் நண்பர் மற்றவர் வாகன சாரதி.

ஆப்கானிஸ்தானில் மாசாரிஷரி.ஃப் என்ற இடத்தில் நண்பருக்கும் எனக்கும் வேலையிருந்தது. அதை முடித்துவிட்டு மாலை திரும்புவதாக ஏற்பாடு. வீதியிலே சன நடமாட்டம் இல்லாதபடியால் சாரதி வாகனத்தை அதிவேகமாக ஓட்டினான். யாரோ ஒரு சிற்றரசர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் போட்ட பாதை அது. பராமரிப்பு இல்லாமல் அப்படியே இருந்ததால் வாகனம் துள்ளித் துள்ளி விழுந்தது. பால்க் என்ற இடத்தை தாண்டியபோது ஒரு சமாதியை சுட்டிக் காட்டினார் நண்பர். அது ஒரு பெண்ணுக்காக கட்டப்பட்ட சமாதி. அவள் ஆயிரம் வருடங்களுக்கு முன் இறந்துபோனாள் என்றும், காதல் கைகூடாப்பெறாத நிலையில் சிறையிலே கொலை செய்யப்பட்டாள் என்றும் கூறினார். அவள்தான் ஆப்கானிஸ்தானின் முதல் பெண்கவி. நான் நண்பரைப் பார்த்து "அப்படியா, நிறுத்துங்கள், நிறுத்துங்கள். அதைப் பார்த்துவிட்டு போகலாமே" என்றேன். நண்பர் பெரிய ஆர்வம் காட்டாமல் "சரி, விசாரித்துப் பார்ப்போம்." என்றார்.

வெய்யில் காய்ந்தபடியால் ஒரு கிழவர் தண்ணீர் அள்ளி பாதையிலே தெளித்துக்கொண்டிருந்தார். அப்போதும் புழுதி அடங்காமல் ஆவியாக மாறி மேலே எழும்பியது. பாதங்களை மூடிய கறுப்பு உடையில் ஒரு பெண் கல்லின் மேலே உட்கார்ந்திருந்தாள். அவளை மறைத்த உடையில் நெற்றிக்கு கீழே ஒரு நீள்சதுரம் காணப்பட்டது. வெளியுலகத்துடன் அவளுடைய தொடர்பு அந்த நீள்சதுரம் வழியே நடந்தது. எவ்வளவு மறைத்தாலும் அந்த ஆடைக்குள்ளே இருப்பது யெளவனமான பெண் என்றே மனதில் தோன்றியது. அவள் கண்கள் இரண்டும் பார்ப்பதற்கு நல்ல வெய்யிலில் தண்ணீரில் துள்ளி விழும் மீன்கள் போல தெறித்தன. தூரத்து சமாதியில் இரண்டு இளம் பெண்கள் ஏதோ வேலையில் இருந்தார்கள். அவர்கள் கறுப்பு உடை அணியாமல் முக்காடு மட்டும் அணிந்திருந்தார்கள். ஒருத்தி சமாதியை துடைத்தாள். இன்னொரு பெண் மரக்கிளையில் ஒரு துண்டுக் கயிற்றை கட்டிக்கொண்டிருந்தாள்.

கிழவர் அழுக்கான உடையணிந்திருந்தார். அவர் தரித்திருந்த தலைப்பா அவருடைய தலையிலும் பார்க்க இரண்டு மடங்கு உயரமாக இருந்தது. கிழவருக்கு நாங்கள் வந்த காரியத்தை இரண்டுமுறை விளக்கினோம். கவியரங்கத்தில் கவிதை வாசிப்பதுபோல ஒவ்வொரு வசனத்தையும் இரண்டு தடவை சொன்னால்தான் அவரிடமிருந்து பதில் கிடைத்தது. கிழவர் கல்லிலே உட்கார்ந்திருந்த பெண்மணியிடம் ஏதோ கூறினார். அந்தப் பெண் தன் கால்களை விடுவித்துக்கொண்டு ஒரு பாம்பு சுருள் அவிழ்ப்பதுபோல முழு உடம்பையும் நேராக்கி எழும்பி நின்றாள். உயரமான பெண். கிழவர் அவளிடம் ஏதோ கேட்க அவள் பதில் பேசாமல் கிடுகிடுவென்று உள்ளே போனாள். கிழவரும் பின் தொடர்ந்தார்.

**- அ. முத்துலிங்கம் -**

நாங்கள் வாசலில் காத்து நின்றோம். ஒரு சிறுமி துணியை பரப்பி அதற்குமேல் இரண்டே இரண்டு மாதுளம்பழங்களை வைத்து விற்றுக்கொண்டிருந்தாள். ஆனால் வாங்குவதற்கு அங்கே ஒருவருமில்லை. மரக்கிளையில் நூற்றுக்கணக்கான கயிறுகள் கட்டித் தொங்கின. எதற்காக கயிறு கட்டுகிறார்கள் என்று நண்பர் விசாரித்தார். காதலுக்காக உயிர் துறந்த பெண்ணுக்கு மரியாதை செய்கிறார்கள் என்று அந்தச் சிறு பெண் கூறினாள். எங்களுக்கு பழங்களை விற்க அவள் முயற்சி செய்யவில்லை. அன்றைய நாள் முடிவதற்கிடையில் ஒரு பெரிய வியாபாரம் அவளை நோக்கி வரும் என்பதுபோல நம்பிக்கையுடன் காத்திருந்தாள்.

கிழவர் அனுமதி வாங்கிவிட்டார். அங்கே பிரார்த்தனை செய்யும் பெண்களை தொந்திரவு செய்யாமல் சுற்றிப் பார்க்கலாம் என்றார். நாங்கள் முதலில் பார்த்த அந்த இரண்டு பெண்களை தவிர வேறு ஒருவரும் அங்கே இல்லை. சமாதியை துடைத்த பெண் அதற்குமேல் ஒரு பூ வைத்திருந்தாள். எப்பொழுதோ இறந்துபோன பெண்ணுக்காக அவர்கள் பிரார்த்தித்தார்கள். அந்தப் பெண்களும் ஒரு வேளை யாரையோ ரகஸ்யமாகக் காதலிக்கலாம்.

பெண்கவியின் பெயர் ராபியா பல்கி. அவள் காதலித்த குற்றத்தை செய்தது மட்டுமல்லாமல் காதலைப் பற்றி கவிதையும் எழுதினாள். அவளுடைய தகப்பன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஆப்கானிஸ்தானில் ஆட்சி செய்த ஒரு குறு நில மன்னன். அவன் இறந்த போது அவளுடைய அண்ணன் பட்டத்துக்கு வந்தான். அவனுக்கு ஒரு துருக்கிய அடிமை இருந்தான். அவனுடைய பெயர் பக்ராஷ். ராபியாவுக்கும் பக்ராசுக்கும் இடையில் காதல் உண்டானது. ராபியா கவிதை எழுதி மன்னர் சபையில் அவற்றை படிக்கும் வழக்கமுள்ளவள். அதையெல்லாம் அடிமை கேட்டுக்கொண்டிருப்பான். இருவரும் கவிதையில் கடிதம் பரிமாறிக்கொள்வார்கள். ஒருநாள் அண்ணன்காரனுக்கு தங்கையின் காதல் சங்கதி தெரியவந்தது. அவளைப் பிடித்து, கழுத்து நாளத்தை அறுத்து சிறையிலே போட்டு அடைத்தான். அவள் திரும்பவும் வெளி உலகத்தை பாராமல் அங்கேயே இறந்துபோகிறாள்.

ஆப்கானிஸ்தானை நீங்கிவந்து பல வருடங்களானாலும் உயிர் பிரியும்போதும் கவிதை எழுதிவைத்த பெண்ணை என்னால் மறக்க முடியவில்லை. அவள் தன்னுடைய காமத்தை சொல்கிறபோது அதை ஒரு குதிரைக்கு கடிவாளம் போட்டு இழுக்கும் செயலுக்கு ஒப்பிட்டிருக்கிறாள். கடிவாள வாரை இழுக்க இழுக்க குதிரை வேகமாகப் போவதுபோல காமமும் அதை அடக்க அடக்க இன்னும் வேகம் கூடுகிறது, அடங்குவதில்லை என்று தன் கவிதையில் சொல்லியிருந்தாள். இப்படியான உவமையை வேறு எந்த ஒரு பெண்ணும் சொன்னதாக தெரியவில்லை.

காதல் என்னும் வஞ்சக வலையில் மாட்டி
என் முயற்சிகள் வீணாய் சிதறின.
உயர்சாதிப் புரவியில்
எப்பொழுது சவாரிசெய்தேன்,
நானறியேன்.
கடிவாளவாரை
இழுக்க இழுக்க
அடங்காத்தனம் மிகுந்தது.
அருவருப்பானவற்றை காணும்போது
அதிகமாக விரும்பு.
நஞ்சை சாப்பிடு, ஆனால்
சர்க்கரையை ருசி.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு, ராபியா பல்கியின் துடைத்து பூ வைத்த சமாதியை கடந்தபோது அவர் எழுதிய ஒரு கவிதையைக்கூட நான் படித்திருக்கவில்லை. சமீபத்தில் ஓர் அலுவலக வரவேற்பறையில் நான் காத்துக்கொண்டிருந்தபோது அங்கே கிடந்த பழைய பத்திரிகை ஒன்றில் அவருடைய கவிதை ஒன்றை படிக்க நேர்ந்தது. அதுதான் மேலேயுள்ள கவிதை. ராபியாவின் கவிதையை நான் அவருடைய சமாதிக்கு போனபோதே படித்திருந்தால் அன்று அவருடைய சமாதிக்கு நிழல் கொடுக்கும் மரத்தில் நானும் ஒரு கயிற்றை கட்டியிருப்பேன். நூற்றுக் கணக்கான இளம்பெண்கள் ஆயிரம் வருடங்களாக மரக்கிளைகளில் கட்டிய கயிறுகளோடு இன்று அங்கே என்னுடைய கயிறும் தொங்கிக்கொண்டிருக்கும்.

அரண்மனையில் பிறந்து வளர்ந்த ராபியா இளவரசி ஓர் அடிமையை காதலித்து இறக்க முன்னர் தன்னுடைய ரத்தத்தால் சிறைச் சுவரில் எழுதிவைத்த கவிதையை நான் இன்றுவரை படிக்கவில்லை. தேடிக்கொண்டிருக்கிறேன்.


## வயோதிபருக்கான வாகன சேவை

- பிள்ளைகள் வேலையில் லீவு எடுப்பது கஷ்டமா?
- லீவு எடுத்தால் வேலை போய்விடும் என்ற பயமா?


கவலை வேண்டாம் என்னை அழையுங்கள்



குடும்ப வைத்தியர், உடல் பரிசோதனை நிலையம், விசேட வைத்தியர் (Specialist), வைத்தியசாலை மற்றும் அரச காரியாலயங்கள் உட்பட வைத்தியர் பிறமொழியாயின் மொயிபெயர்ப்பும் செய்து மருந்து மாத்திரைகளையும் வாங்கி கொடுத்து தங்களின் தங்குமிடங்களில் பாதுகாப்பாக கொண்டுசென்று விடுவேன். முன்கூட்டியே நாள், நேரம் என்பதை அறியத்தரவும்.

தொடர்புகளுக்கு: **மாறன்** - ***647.205.8502***

## ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

## A1 கொழும்பு

**போட்டோ ஸ்ருடியோ & விடியோ**

2 பாஸ்போட் $5.00 — 2 லாண்டட் காட் $5.00
2 சிற்றிசன் $5.00 - 2 அனைத்துவிதமான ஐ. டி. $5.00
3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ $15.00

**From: அல்பத்துடன் போட்டோ PACKAGES**

25 - 5X7 பிறந்த நாள் போட்டோக்கள் $50.00
50 - 5x7 முதல் நன்மை $100.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $100.00
100 - 5x7 திருமணவிழா $200.00
10- 5x7 Graduation போட்டோக்கள் பாடசாலையில் $50.00

**2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD**
UNIT 3 LOWER LEVEL, Web: www.tamilsyellowpeages.com

**Mobile: 416-752-4444 Tel: 416-755-2333**


## இணுவில் திருவூர் ஒன்றியம் - அறிவித்தல்

தமிழ்மொழித்திறமை காண் மற்றும் பண்ணிசை போட்டிகள்.

காலம்: 11 - 7- 2009 (சனிக்கிழமை)

இடம்: St. Stephen's Presbiterian Church,
3817 Lawrence Ave. East, Scarborough

நேரம்: காலை 9:00 மணி

20 வயதிற்குட்பட்ட இணுவிலை சேர்ந்த பிள்ளைகளுக்கு பண்ணிசை, பேச்சு, எழுத்து, வாசிப்பு, என தமிழில் போட்டிகள் வயது அடிப்படையில் இடம் பெறவிருக்கிறது.

தொடர்புகளுக்கு: ***416.496.9071 416.430.0422 416.451.0445***

# BASEMENT RENT

**BIRCHMOUNT & EGLINTON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Close to bus, school, many stores & subway. Convenient location. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.906.8086

**MARKHAM & ELLESMERE**
Newly renovated bright 2 bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close bus, school & mall.
Avail. immediately.
தொடர்புகட்கு: 416.269.5356

**SCAR. GOLF CLUB & ELLSEMERE**
1 Large bedroom bsmt for rent. Living room, kitchen, washroom, sep. entrance, parking, laundry. Avail. immediately. Close to school, ttc & all amenities.
416.431.9428 / 416.878.7231

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking & laundry. YRT & TTC at door step. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.477.9915

**McLEVIN & NEILSON**
1Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, cable & laundry. Very nice & clean. Close to doctors, Malvern mall, school & library. For immediate occupation.
Contact: 416.281.2105
Call after 6:00 pm & weekends anytime)

**BIRCHMOUNT & LAWRENCE**
Newly renovated 1Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable & laundry. Groceries, bus, shopping centers close by. Available Immediately.
416.757.9998/647.637.5344

**BIRCHMOUNT & SHEPPARD**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, washer & dryer. Close to Mall, school, TTC & doctors.
தொடர்புகட்கு: 416.276.9596

**MARKHAM & SHEPPARD**
2 Spacious bedroom apt. for rent. Parking & laundry. Near to TTC, school, shopping. No smoking & pets. Ladies or elders preferred. Avail. Immediately.
647.343.8700/1.289.240.2638

**LAWRENCE & MORNINGSIDE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school, mall, & library. Avail.immediately
416.724.7595/416.998.2760

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking. Close to bus, shopping, doctors & many more.Avail. August 1st, 2009.
தொடர்புகட்கு: 416.878.5144

**MCCOWAN & ELSON**
Newly renovated 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Step to school & TTC. Quiet place. Park near-by. Available immediately.
தொடர்புகட்கு: 647.991.4437

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Living room. Parking, cable, laundry. Close to TTC 24hrs., school, Era Super Market. Avail. July 01, 09.
647.505.3030 / 647.342.4830

**MARKHAM & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance. Avail. immediately. Close to bus, school, stores, Tamil stores...
905.841.9294 / 416.277.9044

**STEELES & 9th LINE**
2 Bedroom basement apt. for rent. Available from September 2009. Close to all amenities. Call for details: 416.931.3444

**MARKHAM & 14TH AVE.**
New1 bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable, TVI & laundry. Close to many malls, bus, Tamil stores & doctors. Avail. immediatly. Rent $650.
தொடர்புகட்கு: 416.305.9549

**WHITES & FINCH (PICKERING)**
New 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to High School, Junior School, Durham Transit, 2 min. to bus stop. New appliances. Avail. immediately. ***Low Rent.***
தொடர்புகட்கு: 647.295.1110

**SCARB. GOLF CLUB & ELLESMERE**
New 1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school at walking distance.
Avail. immediately.
தொடர்புகட்கு: 416.417.5059

**WARDEN & ELLESMERE**
3 அறைகள் கொண்ட அடித்தளம் (BSMT) உடன் வாடகைக்கு உண்டு. தனிவழி. கார் நிறுத்தம், கேபிள் & துணிதுவைக்க வசதிகள். பாடசாலை, பஸ், பல கடைகள் அண்மையில்.
எல்லாவற்றிக்கும் வசதியான இடம்.
தொடர்புகளுக்கு: 416.757.3109

**MARKHAM & STEELES**
New 1 Bedroom walk-out bsmt. apt. for rent. Parking & laundry. Close to TTC, school, nofrills, Wal-mart etc. Avail. immediately.
416.951.0034 / 416.799.4915

**MARKHAM & ELSON**
Newly renovated 1 Bedroom walk-out bsmt. apt. for rent. Cable & laundry. All new appliances. Close to YRT, TTC, nofrills, Wal-Mart & doctors. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.666.4861
(Call after 4 p.m & week ends)

**NEILSON & MORNINGSIDE**
Newly renovated 2 Bedroom walk-out bsmt. apt. for rent. Parking. All utilities included. Close to 2 schools & 2 buses.
Avail. immediately.
416.792.0662/647.834.9526

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.708.2377

**MCCOWAN & 16TH AVE**
ஒரு அறை / இரண்டு அறைகள் கொண்ட இரண்டு bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to ttc, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**SEWELLS & MORNINGSIDE**
2 Bedroom bsmt. apt. for rent. Parking & laundry. Close to bus, tamil stores & school.
Avail. immediately.
416.283.0166/416.566.2674

**NEILSON & McLEVIN**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to Malvern Mall, school & bus. Avail. immediately.
416.725.9938/416.441.6378

**STEELES & WARDEN**
New 1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, Mall & St Teresa School.
Avail. immediately.
தொடர்புகட்கு: 905.513.7839

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Cable, laundry. Close to Scarb. Campus, TTC, stores. Available immediately.
One room also available for rent.
647.302.8597 / 416.847.9802

**MIDDLEFIELD & ELSON**
(Featherstone Ave.)
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to TTC, 2 min. to school, Wal-Mart, No- frills. Avail. immediately. தொடர்புகட்கு: 416.648.7064

**ON McNICOLL BETWEEN McCOWAN & MIDDLEFIELD**
1 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Full washroom, large kitchen, TV cable, walking distance to 3 bus roots. Tamil single non smokers welcome. Avail. immediately.
416.291.7499 / 647.881.4206

New 2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking & laundry. School in front. Close to TTC & mall. No pets. Avail. immediately. தொடர்புகட்கு: 416.438.6460

**SHEPPARD & MORNINGSIDE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & sep. laundry. Close to TTC & mall. Avail. immediately.
416.286.1755/416.220.5967

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom walk-out bsmt. for rent. **Fully furnished.** Parking, cable & laundry. Close to bus, school & tamil stores. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.388.3616

***LAWRENCE & Scarboro. Golf Club Rd***
1 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. parking, laundry. Available immediately. Close to Bank, TTC, shopping, school, etc.
416.219.4936 / 416.454.9986

**NEILSON & MORNINGSIDE**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking cable & laundry. Close to bus, school, mall. Avail. immediately.
Single or couple preferred.
தொடர்புகட்கு: 647.991.8362

**MARKHAM & LAWRENCE**
1 Large room bsmt. apt. for rent. Sep. entrance. Cable & laundry. Close to school, TTC, Cedabrae Mall, etc. Avail. immediately.
416.439.2535/647.271.5319

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Wal-Mart in front. Close to doctors, plaza, school & TTC. Avail. Immediately.
தொடர்புகட்கு: 416.427.2521

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry, cable, TVI included. Close to TTC, school. Family preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.737.3891

**BRIMLEY & STEELES**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking & laundry. Large kitchen. Close to school, TTC, YRT, doctors & shopping.
Avail. immediately.
905.944.9727 / 647.242.9727

**VICTORIA PARK & LAWRENCE**
Newly renovated 2 large bedroom Walk-out bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, Dhurga Temple, tamil stores & school.
Avail. July1st, 2009.
416.288.9575 / 647.746.4183

**BELLAMY & EGLINTON**
2 bedroom bsmt. or single room for individuals or 4 Bedroom house for rent. Sep. entrance. Parking. All facilities available. Close to GO train, bus, school, stores.
Available immediately.
தொடர்புகட்கு: 416.302.8306

**MORNINGSIDE & McLEVIN**
New One Bedroom walk-out bsmt. apt for rent. Laundry & Cable. Close to TTC, school. Wal-Mart & many malls. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.519.2899

**PHARMACY & ELLESMERE**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to all amenities. Avail. immediately. Rent $750.
416.839.3710/416.332.8941

# CONDO FOR SALE

**McCOWAN & EGLINTON**
2 Bedroom+spacious Den condo. for sale. 2 Full washroom, spacious laundry room, sauna, party hall, new hard wood & tiles etc. Secured building. Close to school.
GO station & bus.
647.209.9132 / 416.439.7875

**KENNEDY & ELLESMERE**
2 bedroom condo. for immediate sale. Newly painted. Excellent condition. Close to many shopping centers, subway & theater etc.
416.335.8394/647.291.2904

# JOB JOB JOB

**பிள்ளை பாரமரிக்க பெண் தேவை**
***Care Giver Wanted***
***Whitby*** இல் வசிக்கும பண்பான தமிழ் குடும்பத்தின் 2 பிள்ளைகளை (வயது 6, 9) வாரநாட்களில் பராமரிக்க நம்பிக்கையான பெண் தேவை. எல்லா வசதிகளும் செய்து தரப்படும். மேலதிக விபரங்கட்கு மாலை 7:00 மணிக்குப்பின்
905.430.7572 / 647.290.8094

**CARE GIVER WANTED**
***MIDLAND & LAWRENCE***
Live-in care giver to look after children. Teach them tamil and able to cook preferred.
பிள்ளைகளை பராமரிக்கக்கூடிய சமைக்கத் தெரிந்த தமிழ் பெண் தேவை.
தொடர்புகட்கு: 416.454.2810

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*
***www.vlambaram.com***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 21

# ROOM RENT

**SCARB. GOLF CLUB & ELLESMERE**
1 Room in bsmt. for rent. Parking & laundry. All facilities close by. For immediate occupation. Contact: 416.737.4326

**TAPSCOTT & FINCH**
Room for rent in main floor. Parking & laundry. Close to TTC, doctors, groceries & temple. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.799.4915

**EGLINTON & MARKHAM**
1 Room available for rent. All facilities. Close to mall, 24 hrs. TTC. Free cable, laundry & internet. Suitable for female only. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.546.8005

**WARDEN & FINCH**
Room for rent. Parking & cable included. Close to Bridlewood Mall, doctors & many more. Avail. immediately. Only for ladies.
தொடர்புகட்கு: 416.492.6817 leave message

**JANE & TESTON**
NEAR WONDERLAND
ஒரு அறை உடன் வாடகைக்கு உண்டு. கார் தரிப்பிடம். எல்லா வசதிகளும் அண்மையில் அமைந்த வசதியான இடம். தனி அல்லது ஜோடி விரும்பத்தக்கது.
416.629.7782/647.204.4970

**MARKHAM & STEELES**
Room for rent. 1 meal optional. ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. விரும்பினால் ஒருநேர சாப்பாடு தரப்படும். Close to nofrills and many malls, TTC & YRT. Avail. immediately.
416.951.0034/905.294.7026

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள், வயதானவாகள், சிறு குடும்பம் விரும்பத்தக்கது.
விபரங்கட்கு: 416.732.6931/416.281.9888

**McLEVIN & TAPSCOTT**
1 Room for rent. Parking & cable.Close to TTC, mall, school. Backyard patio. Avail. immediately.
292 McLevin Avenue.
தொடர்புகட்கு: 905.683.5699

**MARKHAM & PAINTED POST**
1 அறை basement ல் வாடகைக்கு உண்டு. பெரிய living room. தனி வழி. Parking & laundry. Close to Centennial College & many others. Avail. immediately.
416.439.6650/647.203.3517

**WARDEN & SHEPPARD**
1 அறை basement ல் 2 நேர சாப்பாட்டுடன் வாடகைக்கு August 1st, 2009 ல் இருந்து உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு.
416.299.4895/416.201.1222

**LAWRENCE & MIDLAND**
1 Room in 2 bedroom condo for rent. All facilities included. Close to sub-way, Price Shopper, bank, mall. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.616.7427

**BRIMLEY & STEELES**
தனி வீடு ஒன்றின் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Laundry, cooking facilities. Close to bus, school, தமிழ் கடைகள். NO Parking. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.844.7550

**FINCH & BRIDLETOWNE CIRCLE**
Room for rent in bsmt. Sep. entrance. Parking, cooking facilities. Meals Optional. Close to mall, TTC, school. Males only. Avail. immediately.
416.502.3033 / 647.502.0151

**Midland & Eglinton**
3 Bedroom apt.+ rooms available for rent. Close to Yarl Market.

**Morningside & HWY 401**
Rooms available with all facilities. Close to Scarbough university, Centennial College, Christian College.
தொடர்புகளுக்கு: 416.896.2511

**NEILSON & TAPSCOT**
1 Room for rent. Meals on request. Internet, parking. Cooking facilities. Close to Centennial College. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகட்கு; 647.500.6409

**MIDDLEFIELD & HIGHGLEN**
2 Room for rent in a house. Upper floor. Parking & laundry. Close to many shopping malls, bus & school. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.209.0545

**MCCOWAM & FINCH**
2 அறைகள் கொண்ட BSMT இல் ஒரு பெரிய அறை வாடகைக்கு உண்டு. Living room, sep. entrance. Parking, laundry. Avail. immediately. Close to ttc, stores, school, etc.
416.720.2171 / 416.298.1872

**EGLINTON & DANFORTH**
1 bedroom for immediate rent. Sep. entrance & free cable. Close to bus stop & 3 malls. Parking, internet & cooking etc on request. Rent $350. Working male with good character expected.
தொடர்புகட்கு: 416.431.5156

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**MIDDLEFIELD & ELSON**
Spacious rooms for rent. Sep. entrance. All amenities close by. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.300.4530

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance.Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.885.0454

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

**NEILSON & FINCH**
1 room for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Only for woman. Avail. immediately.
416.297.4100/647.986.4100

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent. Parking, cable & laundry. Quiet location. Close to TTC & Tamil stores. Avail. immediately.
416.286.6109/647.628.6109

மேலும் பக்கங்கம் 20

# CONDO. FOR RENT

**McCOWAN & SHEPPARD**
3 Rooms condo. for rent. Parking, washer & dryer & free cable. Close to all facilities.Near HWY 401. Avail. September 1st, 2009. Call for details: 905.424.7468

**WARDEN & FINCH**
3. Bedroom YCC condo. for rent. 1½ washroom. Cable, parking, security, water, gas included. Hydro extra. 24 hours express bus route. 5 min. to Finch station, 1 min. walk to intersection. Avail. September 1st, 2009. 2050 Bridletowne circle - 18th Floor
Call - JEY: 416.274.9726

**FINCH & NEILSON**
2 Bedroom condo. for rent. One Under ground parking, including all amenities.Near Malvern Mall. Avail. July 1st, 2009.
தொடர்புகட்கு: 416.904.2844

# HOUSE FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
3 Bedroom house for rent. 2 parking. All facilities available. Close to TTC, school & mall. Avail. immediately.
416.879.6801/416.293.6253

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking. Close to TTC, Tamil stores, schools, mall, doctors & many more. Avail. immediately. Quiet neighbour hood.
தொடர்புகளுக்கு: 647.219.4558

**MORNINGSIDE & MCLEVIN**
3 bedroom house for rent main floor. Living room, kitchen, Parking. Small family preferred. Close to everything. பிறந்த குழந்தையையும் தாயையும் வீட்டில் வந்து பராமரிக்கக் கூடிய பெண் தேவையா? அழையுங்கள்.
416.724.1837 / 416.357.5683

# HOUSE FOR PRIVATE SALE

**FINCH & NEILSON**
4 Bedrooms corner house (4 yrs) with 2 bedroom bsmt, sep.entrance, small deck, fenced big back-yard, 2 garage, 1remote controlled, 4 drive way parking, 2 Fridge, 2 Stove, washer, dryer, blinds, all window coverings & Patio Furniture. Well kept.
**416.457.1979 / 416.412.7374**

# FOR LADIES & KIDS ENGLISH TUITION CLASS

அடிப்படையிலிருந்து பேச்சு & இலக்கண (Spoken & Grammar) ஆங்கிலம் அனுபவமுள்ள ஆசிரியையால் 3 - 7 வயது பிள்ளைகளுக்கும், இளம், முதிய பெண்களுக்கு கற்றுத்தரப்படும்
தொடர்புகட்கு: **647.822.7722**

# SALE SALE SALE GROCERY STORE FOR SALE

**STATION & HARWOOD (AJAX)**
சுறுசுறுப்பாக வியாபாரம் நடக்கும் பலசரக்குகடை விற்பனைக்குண்டு.
Well running grocery store for sale.
மேலதிக விபரங்கட்கு. 905.426.7799

# BUSINESS FOR SALE

**MIDLAND & ST. CLAIR**
Convenievce Store with lotto & ATM. Good location, in front of school & near apartment. Price $29,000 + stock.
தொடர்புகட்கு: **416.261.5549**

# DAYCARE AVAILABLE

**MARKHAM & DENISON**
Well experienced, First Aid trained lady. Limited space. School drop-off & pick-up. Space available for kids on summer holidays.
தொடர்புகட்கு: **905.209.7012**

# BUSINESS FOR SALE

**MIDDLEFIELD & FINCH**
GTA SQ. MALL, Unit 229
Running business - Snack bar
Turn key operation.
Estimate $39,900.
Shankar: **647.886.5463**

# SPACE FOR RENT

**BIRCHMOUNT & SHEPPARD**
Basement space suitable for dance, tution classes, tax office or small business for rent at **Glowhar Plaza.**
2248 Birchmount Road.
416.293.6860/416.321.8194

# CAR FOR SALE

1995 Honda Civic 235k, automatic
தொடர்புகட்கு: 416.688.8364 /416.754.2002

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*
***www.vlambaram.com***

# ► K. G. S. MOVING ◄

**MOVING & DELIVERY**

- House
- Appartment
- Office
- Basement

- ☛ Toronto
- ☛ Kitchener
- ☛ Ottawa
- ☛ Montreal




Call: Sasi -☎: **416.844.7274**



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774

## Answers - 246 June 15 2009

1) Let $\vec{a} = \vec{i} + \vec{g} + \vec{k} = (1, b, 1)$, $\vec{b} = \lambda^2 \vec{t} - 2\lambda \vec{g} + \vec{k} = \lambda^2, -2\lambda, 1$

Since $\vec{a} \perp \vec{b}$ $\vec{a}.\vec{b} = 0$, $\therefore \lambda^2 - 2\lambda + 1 = 0$, $(\lambda - 1)^2 = 0$, $\lambda = 1$

2) ½ Lawn and 1 garden takes 6½ , and 1 lawn and ½ garden takes 7 hours.
Therefore 1 lawn and 1 garden takes $\frac{2}{3} \times \frac{27}{2} = 9\,hours$

Thus ½ lawn takes 9 - 6½ = 2½ hours. Thus a whole lawn takes 5 hours.

3) If stephen averaged 80 km/h for a trip which was 60 km in length , it must have taken him 45 minutes to make the trip. If the entire trip took 45 mts. and he arrived 20 mts. Late , he must have left home at 9.35 a.m.

4) Let the event A be that a student with good attendance passes. Since odds in favour of $A = \frac{P(A)}{P(A^1)}$, $\frac{8}{1} = \frac{P(A)}{P(A^1)}$, $\frac{8}{1} = \frac{P(A)}{1 - P(A)}$


$8 - 8P(A) = P(A)$, $8 = 9P(A)$, $\therefore P(A) = \frac{8}{9}$

5) Total number of ways the 1st 2 lanes can be occupied is . $_7P_2 = \frac{7!}{5!} = 42\,ways$

Probability is $\frac{1}{42}$.

## Questions – 247 – July 1st, 2009

1) A circle is inscribed in trapezoid PQRS. If PS = QR = 25 cm, PQ = 18 cm. and SR = 32 cm What is the length of the diameter of the circle. [ For gr. 7 & 8]




2) A password for a computer account consists four entries each choosen from upper case letters, lower case letters or digits from 1, 2 …9. For example A2gk or 433d are possible passwords. Sureka has forgetten her password, but remember that it start with M and ends with a digit. The number of possible passwords of this type is (A) 38440 (B) 6760 (C) 6084 (D) 1296 (E) 238328.

3) You want to form four digit numbers with digit 2, 3, 4, 5, 6, 7, 8, What is the probability that the number is greater than 8000, if no digits repeated? For gr. 11 & 12]

4) A die is thrown twice, what is the probability that the sum of the rolls is less than 4 given that one of the roll is 1? [For gr. 11 & 12]

5) Calculate the product of $4\vec{x} - \vec{y}$ and $2\vec{x} + 3\vec{y}$. if $|\vec{x}| = 3$, $|\vec{y}| = 4$ and the angle between $\vec{x}$ & $\vec{y}$ is 60 ? [ For gr.11 & 12]

SUMMER HOLIDAY CLASSES

Available in

◆ Calculas & Vectors ◆ Advanced Functions

◆ Data Management

By an experienced Teacher Mr S.F. Xavier

Tel: 416.431.6774 or 647.831.0070

CLASSESS AT SCARBOROUGH & STOUFVILLE

# தென் ஆப்பிரிக்காவை...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

அமெரிக்க அணிகளை வீழ்த்தியே அரையிறுதி வாய்ப்பை பெற்றுக்கொண்டது. மறுபுறத்தில் தொடரின் “ஏ” பிரிவில் இருந்து ஐரோப்பிய சாம்பியனான ஸ்பெயின் அணி அரையிறுதிக்கு முன்னேற்றம் கண்டது. ஸ்பெயின் விளைாடிய இரண்டு லீக் போட்டிகளிலும் நியூஸிலாந்து, ஈராக் அணிகளை வீழ்த்தியது.

## கான்.ஃ.பெடரேஷன் கோப்பை அரையிறுதியில் ஸ்பெயின்

தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் கான்.ஃ.பெடரேஷன் சர்வதேச கால்பந்து போட்டியில் ஈராக் அணியை 1- 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஸ்பெயின் கால்பந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியது. இடைவேளை வரை நடந்த விறுவிறுப்பான ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்க முடியவில்லை. இடைவேளைக்குப் பிறகு டேவிட் வில்லா ஸ்பெயின் அணியின் வெற்றிக்கான கோலை அடித்தார்.

அரையிறுதியில் ஸ்பெயின் அணி இத்தாலி அல்லது பிரேசில் அணியை எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வெற்றி மூலம் கால்பந்து சாதனைப் புத்தகத்தில் ஸ்பெயின் அணியும் நுழைந்துள்ளது. அதாவது 2006 ஆம் ஆண்டு முதல் சர்வதேச ஆட்டங்களில் தோல்வி கண்டிராத ஸ்பெயின் அணி தொடர்ச்சியாக 14 வெற்றிகளை பெற்று, ஆஸ்ட்ரேலியா, பிரேசில், பிரான்ஸ் ஆக்யிஅ அணிகள் வைத்திருக்கும் சாதனையை சமன் செய்துள்ளது. 6 புள்ளிகள் பெற்று பிரிவு ஏ-யிலிருந்து அரையிறுதிக்கு தகுதி பெற்று விட்ட ஸ்பெயின் அணி வரும் தென் ஆப்பிரிக்க அணியை சந்திக்கிறது.

## எகிப்தை வீழ்த்தி அமெரிக்கா அரையிறுதிக்கு முன்னேற்றம்

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து போட்டியில் எகிப்துக்கு அதிர்ச்சி அளித்த அமெரிக்க அணி அரையிறுதிக்கு முன்னேறியது. இதன்படி “பி” பிரிவில் உலக சாம்பியன் இத்தாலி மற்றும் ஆபிரிக்க சாம்பியன் எகிப்து அணிகள் முதல் சுற்றுடனேயே வெளியேறியது.

கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து போட்டியின் கடைசி லீக் போட்டிகள் நேற்று நடந்தன. இதில் “பி” பிரிவில் கடைசி இடத்தில் இருந்த அமெரிக்க அணி அரையிறுதிக்கு முன்னேறும் என எதிர்பார்க்கப்பட்ட எகிப்துடன் மோதியது. பரபரப்பாக நடந்த ஆட்டத்தில் அமெரிக்க அணி 30 என்ற கோல் வித்தியாசத்தில் எகிப்தை வீழ்த்தியது. இதன்மூலம் அது “பி” பிரவில் இருந்து பிரேசிலுடன் அரையிறுதிக்கு முன்னேறியது. இதேவேளை, இத்தாலி பிரேஸில் அணிகளுக்கு இடையிலான போட்டியில் பிரேஸில் அணி முழு ஆதிக்கம் செலுத்தி 30 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இதனால் இத்தாலி அணியின் அரையிறுதி எதிர்பார்ப்பு பறிபோனது.

இதன்போது கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து வரலாற்றில் உலக சாம்பியன் அணி முதல் சுற்றுடனேயே வெளியேறியது இது இரண்டாவது சந்தர்ப்பமாகும். முன்னர் 2003 ஆம் ஆண்டு தொடரில் அப்போதைய உலக சாம்பியன் பிரேசில் முதல் சுற்றுடனேயே வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கொன்பெடரேஷன் கிண்ண முதல் அரையிறுதிப் போட்டியில் நாளை ஸ்பெயின் அமெரிக்க அணிகள் மோதவுள்ளன.

## ஸ்பெயினுக்கு அதிர்ச்சியளித்த அமெரிக்கா இறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்

சர்வதேச கால்பந்து அரங்கில் கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்த தோல்வியையும் சந்திக்காமல் ஆதிக்கம் செலுத்திவந்த உலகின் முதல் நிலை அணியான ஸ்பெயினுக்கு அமெரிக்கா அதிர்ச்சி அளித்தது. தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் கொன்பெடரேஷன் கிண்ண கால்பந்து போட்டியின் அரையிறுதியில் எவரும் எதிர்பார்க்காத அமெரிக்க அணி ஸ்பெயினை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இதன்மூலம் தொடர்ந்து 35 போட்டிகளில் தோல்வி அடையாமல் ஸ்பெயின் படைத்திருந்த சாதனை முடிவுக்கு வந்தது. அத்துடன் உலகக் கால்பந்து கூட்டமைப்பு நடத்தும் கால்பந்து தொடர் ஒன்றில் அமெரிக்க அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் முதல் சந்தர்ப்பமாகவும் இது பதிவானது. அமெரிக்கா உலக தரவரிசையில் 14 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிளொம்பொன்டைனில் நடந்த அரையிறுதிப் போட்டியில் அமெரிக்க அணியின் தடுப்பு உத்தியை துளைத்துக்கொண்டு ஸ்பெயின் அணியால் செல்ல முடியவில்லை. அமெரிக்காவின் ஜோஸி அல்டிடோர், கிளின்ட் டெம்ப்ஸி ஆகியோர் தலா ஒரு கோலை அடித்ததோடு ஸ்பெயின் அணியின் தடுப்பு உத்திகளின் பலவீனங்களை வெளிப்படுத்தினர். கடந்த 13 ஆட்டங்களில் வெறும் 2 கோல்களையே தங்களுக்கு எதிராக வாங்கியிருந்த ஸ்பெயின் மேலும் இரண்டு கோல்களை வாங்கியது.

ஸ்பெயின் அணியில் டேவிட் வில்லா, பெர்னாண்டோ டொரஸ் போன்ற அனுபவமிக்க திறமையான வீரர்கள் இருந்தும் அமெரிக்க அணியின் கோல் காப்பாளரை தாண்டி ஒரு முறைகூட கோல் அடிக்க முடியவில்லை என்பது ஸ்பெயின் அணிக்கு மிகப்பெரிய அதிர்ச்சியாக இருந்தது. 48 ஆவது நிமிடத்தில் டேவிட் வில்லா கோலை நோக்கி அடித்த பந்தையும் அமெரிக்க கோல் காப்பாளர் ஹோவார்ட் அபாரமாக ஒரு கையால் தடுத்தர். இறுதியில் ஸ்பெயின் அணி கோல் ஒன்றைக் கூட பெறமுடியாமல் தோல்வி அடைந்து வெளியேறியது.

## தப்பித்தது பிரேசில் அமெரிக்காவை வீழ்த்தி சாம்பியன்

தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் கான்.ஃ.பெடரேஷன் கோப்பை கால்பந்து இறுதிப் போட்டியில் அமெரிக்க அணி செலுத்திய ஆதிக்கத்தினால் 0- 2 என்று பின்தங்கியிருந்த பிரேசில் அதன் பிறகு அதிரடி கால்பந்தாட்டத்தை வெளிப்படுத்தி 3 - 2 என்ற கோல் கணக்கில் யு.எஸ்.ஏ. அணியை வீழ்த்தி கோப்பையை வென்றது. இதன் மூலம் கான்.ஃ.பெடரேஷன் கோப்பை சாம்பியன் பட்டத்தை பிரேசில் அரும்பாடுபட்டு தக்க வைத்தது.

இடைவேளைக்கு முன் அமெரிக்க வீரர்களான கிளின்ட் டெம்ப்சீ மற்றும் லண்டன் டொனோவான் ஆகியோர் இரண்டு கோல்களை அடித்து பிரேசில் வீரர்களை அதிர்ச்சியடையச் செய்தனர். ஆனால் அதன் பிறகு பிரேசிலின் நட்சத்திர வீரர் லூயிஸ் ஃ.பேபியானோவின் அபார்மான இரண்டு கோல்களால் ஆட்டம் முடிய 16 நிமிடங்கள் இருந்த போது பிரேசில் சமன் செய்தது.

ஆட்டம் முடிய 6 நிமிடங்கள் இருந்த போது பிரேசில் ஆடிய மிக வேகமான ஆட்டத்தில் அமெரிக்க வீரர் பந்தை கோலுக்கு செல்லாமல் காப்பாற்ற முயல அது பிரேசிலுக்கு கார்னர் வாய்ப்பை அளித்தது. எலானோ கார்னர் ஷாட்டை அடிக்க பிரேசில் கேப்டன் லூசியோ அதனை தலையால் முட்டி சாம்பியன்ஸ்கிப் கோலாக மாற்றினார். இந்த தொடரில் அபாரமாக விளையாடிய காகா நட்சத்திர வீரராக தேர்வு செய்யப்பட்டார்.

இப்போட்டியிலும் அவர் கோல் எதையும் அடிக்காவிட்டாலும் அபாரமான தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தி கோல்களுக்கு மறைமுகக் காரணகர்த்தாவாக இருந்ததனால் ஆட்ட நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டார்.

கான்.ஃ.பெடரேஷன் கோப்பை பிரேசில் அணி 1997, 2005 ஆண்டுகளில் வெற்றி பெற்றுள்ளது. தற்போது 3-வது முறையாக சாம்பியன் ஆனது.

# ‘அஞ்சேல்’ என்று அபயம் அளிக்கும் அம்மை அரவ நாகபூசணி

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல் ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான் புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணை மேல் வரும் பயனைப் போக மாற்றிப்
பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந் துணையைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேச்சாத நாளெல்லாம் பிறவா நாளே!

பெருந்துணையாகவும் அருந்துணையாகவும் விளங்கும் பெம்மானை நாளும் நன்றேத்திப் பாடவேண்டும் என்ற நாவரசரினால் கூற்றுக்கமைய பெருந்தகைப் பிராட்டியாக விளங்கும் அன்னை நாகபூசணியில் நாவரசரின் நாமங்களை நாள்தோறும் நாத்தழும்பேற நவின்றால் நற்கதி அடையலாம். உயிர் உறும் உபாதைக்கு உயரிய மருந்தாக அமைவது அன்னையின் அருள்வளம். எனவேதான் அன்னையின் அடியினை பரவ ஆனிமாதத்தில் ஆயிரக் கணக்கில் அடியவர்கள் அழகிய மணித்தீவாம் நயினையை நண்ணி தொழுதும் அழுதும் அவள் அருள் அமுதம் வேண்டி நிற்பர்.

கோயிலின் முன்றலில் கூடிடும் கூட்டம் கடற்கரை மணலிலும் அதிகமாகக் காணப்படும் என்பதனால் அன்னையின் வலிந்திழுக்கும் வற்றாத அருள், அருளாற்றல் அளவு கடந்ததாகும். பக்தியினாலும், பயத்தினாலும் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் கூடி ஆடியும் பாடியும் அன்னையின் அருள் வளத்தில் திளைப்பர். அன்னையை வேண்டித் தொழுவதால் ஆகும் அனேக பேறுகளை அபிராமிப்பட்டர் பின்வருமாறு அருளியுள்ளார். எல்லோரும் இவை அனைத்தையும் அவாவி நிற்பர் என்பதால் அளவு கடந்து பக்தர் கூட்டம் அலை மோதும்.

தனம் தரும், கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமிகடைக்கண்களே!

ஆலயங்களில் வழிபாடு ஆற்றுவதற்கு உரியவளாக எழுந்தருளியிருக்கும் சக்தி நான்கு திருக்கரங்களை உடையவள். ஒருகையில் தாமரைப் பூவையும் மறுகையிற் செபமாலையை யும் தாங்கியுள்ளாள். மற்றிரு திருக்கைகளில் அபயமும், வரதமும் காட்டுகிறாள். அபயம் காட்டும் வலதுகரம் தம்மை வழிபடும் அடியார்க்கு உலகத் துன்பங்களை இட்டுப் பயப்பட வேண்டாம் என்று ஆறுதல் அளிக்கும் பாவனையில் ‘அஞ்சேல்’ என்று காட்டுவதாக உள்ளது. அபயம் பயத்தை நீக்குவது. வரத முத்திரை காட்டும் இடது கரம் ஞானமாகிய தன் திருவடியைக்காட்டி இதைத்தருவோம் பெற்றுக் கொள் என்ற குறிப்பினை உணர்த்துகின்றது.

உமாதேவியார் சிவனின் அருட்சக்தி என்று சிறப்பிக்கப்படுகின்றாள். எனவேதான் சிவன் உமாமகேஸ்வரர் என அழைக்கப்படுகின்றார். இதனை உடையாள் நடுவுள் நீயிருத்தி என்ற திருவாசக அடிகள் தெளிவுறுத்தும், உமையம்மையானவள் காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி அங்கயற்கண்ணி இராஜேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி,



மகேஸ்வரி, நாகேஸ்வரி, நாகராஜேஸ்வரி, காளி, மாரி என பல பெயர்களில் கோயில் கொண்டு அருள் பாலிக்கின்றாள். நாகம் அணிபவர் பரமர். நாகத்தால் பூசிக்கப்பட்டவள் நாகம்மை. சிவனுக்கு அணியாகவும் சிவசக்தியை அஞ்சலிப்பதாகவும் விளங்கும். அஞ்சும் நாகம் சஞ்சலம் தீர்க்கின்றது.

அலை அரவம் அடங்கி கரை முத்தமிடும்
அழகொளிரும் மணித்தீவில்
விட அரவம் தொழு தேத்தும்
விளங்கு மெழில் நாக பூசணியாள்
படருகின்ற துன்பமெல்லாம் பறந்தோட
பரவுவார்க்கருள் புரியும் பராப்பரையாள்
மலைமகளாம் மாயவனின் தங்கையவள்
மனுக் குலத்தின் ஒப்பற்ற தாயாவாள்!

தாய்மார்கள் வேறுபடுவார்கள். ஆனால் உலகத்தாய் ஒருவரேயாம். அவர் அம்மை என்றும் உலக மாதா எனவும் அழைக்கப்படுகின்றார். சாந்தம், அன்பு, தூய்மை, தியாகம், பொறுமை, தன்னலமின்மை, தயை, கருணை, மன்னிக்கும் சுபாவம் தாய்மையின் தனித்துவம். சக்தியின்றி சிவமில்லை. சிவமின்றி சக்தியில்லை. எத்திறன் நின்றான் ஈசன். அத்திறம் அவளும் நிற்பள். எனவே சக்தி வழிபாடு சிவ வழிபாடேயாகும்.

இறைவழிபாடு என்பது சுயநலத்தற்காக மட்டுமன்றி பொது நலத்திற்காகவும், நாட்டு



**நா. க. சிவராமலிங்கம்**

தொடர்ச்சி 28ஆம் பக்கம்


## இலவசம்! இலவம்! இலவசம்!
## Free Accident Claim Services

### *Motor Vehicle Accident*



- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா?
- உங்கள் வாகன விபத்துக் கோரிக்கையை முற்றிலும் இலவசமாக செய்து கொள்ள விரும்புகிறீர்களா (Free Accident Claim)
- வாகன விபத்தில் வலி, வருத்தம், காயம், உடல் உபாதை அல்லது மனநல பாதிப்பு ஏற்பட்டதா?
- வாகன விபத்தினுள், விபத்து உங்கள் தவறானாலும் அல்லது உங்கள் தவறாக இல்லாவிட்டாலும் பெரும் தொகை பணத்தினை நட்ட ஈடாக பெற விரும்புகிறீர்களா?
- பல வருட அனுபவம் மிக்க எங்கள் வழங்கறிஞர்களின் (Lawyers) இலவச ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்
- Licenced and Excellent Physiotherapy, Doctors, Lawyers & Assessment Services.

***Legal Defence Team Inc.***

*220 Duncan Mills Dr.*
*Suite 519, Toronto, ON (Donmills &Sheppard)*

**Call: Suresh : 416-276-0059**

[24 மணிநேர தமிழில் சேவை]

**Fax: 416-385-1804**

***Our Services:*** Scarborough, Markham, Mississauga, Richmond Hill, Aurora, New Market, Brampton, Pickering

- உங்களுக்கு உதவுவதே எங்கள் நோக்கம். பிறரிடம் சென்று ஏமாறு முன் எங்களை ஒரு முறை அழைத்து ஆலோசனை பெறுங்கள்.
- எமது அனைத்து சேவைகளும் 100% சட்ட ரீதியானவை.

## கடன் பிரச்சினையில் தவிக்கிறீர்களா?



- கடன் சுமை தாங்க முடியவில்லையா?
- உங்கள் Credit பழுதாகிவிடும் என்ற கவலையா?
- உங்கள் வீடு, வாகனம், குழந்தைகளின் கல்வி என்பன பறிபோய் விடும் என்று ஏக்கமா?
- கவலை வேண்டாம். ஒருமுறை எங்களை அழைத்து இலவச ஆலோசனை பெற்ற பின் உங்கள் முடிவை எடுங்கள்.

### இதோ உங்களுக்கு உதவ சில சட்டரீதியான வழிவகைகள்

1. ***Consumer Proposal:*** உங்கள் Credit ஐயும் வீட்டையும் வாகனத்தையும் இதர சொத்துக்களையும் பாதுகாத்தபடியே உங்கள் கடனை சட்டரீதியாக 60% த்தால் குறைத்து மிகுதி 40% த்தை மட்டும் மாதாந்தம் மிகச்சிறு தொகையாக கட்ட வழிசெய்தல்.
2. ***Debt Consolidation:*** உங்கள் அனைத்து கடன்களையும் ஒரு கடனாக்கி மாதாந்தம் மிகச் சிறிய வட்டியுடன் சிறு தொகையாக கட்ட வழி செய்தல். இதன் மூலம் உங்கள் Credit ஐ பாதுகாத்த படியே பெரும்பாலான வட்டிப் பணத்தை நீங்கள் சேமிக்க முடியும்.
3. ***Bankruptcy:*** அனைத்துக் கடன்களிலிருந்தும் 100% சட்டரீதியாக விடுபட உதவுதல்.
4. ***Line of Credit:*** ( Mini Score 680 and Min 2 years credit a must)
5. ***Criminal Problems, Traffic Ticket Problems***

Call: பிரபு பொன்னம்பலம் - **416-822.2600 24 hrs. Hotline**

நிதித்துறையில் பல வருட அனுபவம் கொண்டவர், தமிழர் மத்தியில் பிரபலமானவர்

**Fax: 416-385-1804**


Niru BRAND®
FOOD PRODUCTS
நிரு பிரான்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
Pure Gingelly Oil
(Sesame Oil)
Huile De Sesame Extrite
De Graines De Toute
Premiere Qualite
Kitul
Treacle
CHILLI SAUCE
COW GHEE
CONDENSED
Sweetened
300ml.
SPICY COFFEE
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

205

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்




அன்பாக வளர்த்த பூனையைக் காணவில்லை. கண்டுபிடித்துத் தருவோர்க்கு 1000 டொலர் வெகுமதி. அருமையாக வளர்த்த நாயைக் காணவில்லை. எனது மகள் அதனால் 3 நாட்களாகச் சாப்பிடவில்லை. கண்டுபிடித்துத் தாருங்கள். இப்படிச் செய்திகளைப்படித்துச் சொல்லிக்கொண்டிருந்தான் பிறிம்லி மீனாவின் மதன்.

உலகர் மனதுக்குள் சிரித்தார். உயிரைப் பாதுகாத்துக்கொள்ள சிதறியோடியவர்கள் இன்று இருக்கிறார்களா? கவலையில்லாத மனிதன் உலகில் இல்லை ஆனால் கவலையும் கஸ்டமும் எல்லை மீறிப்போனால்.?



'இடுக்கன் வருங்கால் நகுக' என்றார் வள்ளுவர்.
அப்படியானால் தொடர்ந்து சிரிப்பதா?. தேடுதல் வேட்டையென்ற பேரில் சமாதானம் ஏற்படுத்துகிறோம் என்ற பேரில் ஈராக்கிலும் அப்கானிஸ்தானிலும் தினம் தினம் அழியும் அழிக்கப்படும் மக்கள் தொகை எத்தனை?

ஆறிலும் சாவு நூறிலும் சாவு. ஆனால் தமிழரைப் பொறுத்தமட்டில் ஆமியால் எந்நேரமும் சாவு.



ரொரன்ரோ நகரமே நாற்றமெடுக்கின்றது. கனடா டே பூங்காக்களில் விழாக்கள் இல்லை. நமது வீட்டுக்குப்பைகளை நாமே உரிய இடத்தில் கொண்டு போய்ப் போடவேண்டும் கண்ட நிண்ட இடத்தில் குப்பை போட்டால் குற்றப்பணம் செலுத்தவேண்டும்.

கோயில்களில் கொடியேற்றம் தேர் திருவிழாக்கள் ஆரம்பித்துவிட்டன. ஆனால் குடும்ப உறவினர்களை இழந்தவர்களும் அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று தெரியாமல் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதேயில்லை. அவுஸ்திரேலியாவில் சீக்கிய இன மாணவனின் தலைமுடியை வேற்று இனத்தவர் சிலர் சேர்ந்து கத்தரித்து விட்டார்களென உலகநாடுகளிலும்




நாடாளுமன்றங்களிலும் பேசப்படுகிறது. ஆனால் நம்மவர்களின் கழுத்துக்கள் வெட்டி கடலிலும் காட்டிலும் எறியப்பட்டன, எறியப்படுகின்றன, எறியப்படும்... யாரும் கேட்பாரில்லை கதைப்பாரில்லை.

என்னதான் நடக்கும் நடக்கட்டுமே!

ஆடிமாதம் கதிர்காம தேர், தீர்த்தம், ஆடி அமாவாசை திருவிழாக்கள் வேள்விகள் என பசுமையான நினைவுகளுடன் வாழ்ந்த நம்முன்னோர் எங்கே? மனிதனை மனிதன் பலியெடுத்து நடாத்தும் வேள்விகளைக்கண்டும் காணாதிருக்கும் இன்றைய உலகெங்கே?.

உலக நாடுகள் கோழிச்சண்டை, மாட்டுச்சண்டை, கடாச்சண்டை பார்ப்பதுபோல் வெளியே நின்று பார்க்கிறார்கள். சட்டவிதிகளை மீறி ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், பொதுமக்களின் நிலம், வீடு, வாசல், சொத்துக்கள் அழிக்கப்பட்டன - அழிக்கப்படுகின்றன. அழியும் மக்கள், சிறுவர், பெண்கள்....



1983 ஆடிக்கலவரத்தில் இழந்த கணக்குவழக்கே தீர்க்கப்படவில்லை. இன்றுவரை தமிழர் வெறியாட்டம் ஆடி முடியவில்லை.



உலகர் காந்தி படத்தைத் திருப்பித்திருப்பிப் பார்த்தார். மகாத்மா காந்தி சத்தியாக்கிரகம் இருந்தபொழுது குதிரைப்படையை ஏவி குண்டாந்தடிப்பிரயோகம் செய்த காட்சி. ஆண்டுகள் மாறிவிட்டது. விஞ்ஞானம் தொழில்நுட்பம் மாறிவிட்டது. ஆனால் மனிதன் மாறவில்லை.
'யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைப்பேன்'

**Driving School**



- ஓட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை
- நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
- *G1, G2* தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
- வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்
- நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி - General Driving School

Ministry of Transportation Approved Instructor - பேரின்பநாதன் வேந்தன் - 416-731-2829
Email: venthanctr@yahoo.com

**Arajen Beauty Centre**





- Make Up
- Hair Style & Hair Care
- Dying & Highlighting
- Bridal Make Up & Arangetram
- Skin Care (All Kind of Facial)
- Threading & Waxing
- Skin Treatment
- Nail Art
- Dress Making (Saree & Blouse)
- Permanent Hair Removal
- Pedicure, Manicure
- Mehindi
- Bouquet, Sadainagam
- Cryotherapy
- Micro Dermabrasion

Beauty Classes
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்

Certificate Courses & Seminars

அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

Tel: 416.509.7978
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

# பேரண்டக் கதை - கலிலியோ



## பிரபஞ்சம் - 43

நியூட்டனுக்கு பெயரெடுத்துக் கொடுத்ததில் இயக்கவிதிகளுக்கு பெரும் பங்குண்டு. நான் ஏற்கனவே கூறியபடி, வான்பொருட்களின் இயக்கங்களுக்கான விளக்கங்களைப் பெறுவதற்கு, நியூட்டன் இந்த இயக்க விதிகளையும் பாவித்து வெற்றியும் கண்டார். முற்றுமுழுதாகவே பௌதீகத்தின் உள்ளே அடங்கும் அந்தவிதிகளை, வானியலில் அவற்றின் உயர்வான பயன்பாடு காரணமாக இங்கே தருகின்றேன்.

### நியூட்டனின் இயக்கவிதிகள்

விதி i :- புறவிசைகள் தாக்கினால் அன்றி, பொருள் ஒன்றானது தனது ஓய்வு நிலையிலோ அல்லது மாறா இயக்க நிலையிலோ தொடர்ந்து இருக்கும்.

விதி ii :- பொருள் ஒன்றில் அழுத்திய விசையானது அப்பொருளில் ஏற்படுத்தப்பட்ட 'உந்தமாற்று வீதத்திற்கு' நேர்விகித சமன்.

இவ்விதியின் கணித வடிவமானது, பிரசித்தி பெற்ற $P = mf$ ஆகும். இங்கே P என்பது அழுத்திய விசை, M என்பது பொருளின் திணிவு, F என்பது பொருள் பெற்ற ஆர்முடுகல்.

விதி iii :- ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும், எதிரானதும் ஆன மறுதாக்கம் உண்டு. அக்கால கட்டத்தில் வான் பொருட்களின் இயக்கங்களுக்கான கெப்பினரின் விதிகளும், நியூட்டனின் இயக்கவிதிகளும், ஈர்ப்பு விதியும் சேர்ந்து வான்வெளியை ஓரளவுக்கு விளங்கிக் கொள்ள உதவி செய்தன. அத்துடன் கலிலியோவின் முறையான தொலைக் காட்டிகளையும் வானவியலாளர்கள் பாவிக்கத் தொடங்கினர். இக்காலத்தில் வெள்ளொளியில் ஏழு நிறங்கள் கலந்திருப்பதை நியூட்டன் கண்டுபிடித்திருந்தார். வெள்ளொளியின் ஏழு நிறங்களையும் நிறமாலை அல்லது திருசியம் என்பார்கள். வெள்ளொளியானது முறிவடைகை யில் ஏழுநிறங்களாகப் பிரிகையடையும். அக்காலத்தில் பாவனையில் இருந்த தொலைக்காட்டிகள் வில்லைகளினால் ஆனவை. இத்தொலைக்காட்டிகளில் ஒளிக்கதிர்கள் பட்டு முறிவடைந்தே விம்பங்களைத் தோற்றுவிக்கின்றன. இதனால் இத்தொலைக் காட்டிகளில் தோன்றும் விம்பங்களில் துலக்கத்தன்மை குறைவாகக் காணப்பட்டன. இக்குறைபாட்டினைத் திருத்தும் முகமாக நியூட்டன் புதுவகையான தொலைக்காட்டியை அறிமுகப்படுத்தினார். நியூட்டனின் தொலைக் காட்டிகள் என அழைக்கப்படும் இந்த வகை தொலைக்காட்டிகளில் வில்லைகளுக்குப் பதிலாக ஆடிகளைப் பாவித்து, விம்பங்களை ஒளியின் தெறிப்பினால் பெறலாம். எனவே விம்பங்கள் பல நிறங்களில் தோன்றாது தெளிவாகக் காணப்படும்.

அரிஸ்ரோற்றில், கொப்பநிக்கஸ் போன்றே நியூட்டனும் பேரண்டத்திற்கு ஒரு புதிய வடிவினைக் கொடுத்தார். நியூட்டனின் பேரண்டமானது கொப்பநிக்கசின் திருத்திய வடிவமாக இருந்தது. கொப்ப நிக்கசின் பேரண்ட வடிவமானது, சீரமைக்கப்பட்ட அரிஸ்ரோற்றலின் பேரண்ட மாதிரி என்பதில் எவருக்குமே மாறுபட்ட கருத்தில்லை. நியூட்டனின் பேரண்டமானது சடம், இயக்கம், வெளி என்பவற்றின் அடிப்படையில் பார்க்கப்பட்டது. பெருவெளியில் சடப்பொருட்களின் இயக்கங்களை அவதானித்து, பெற்ற முடிவுகளை ஒழுங்கான அமைப்பில் சீராக வைத்து, விஞ்ஞான முறைப்படி தொகுத்துப் பெறப்பட்ட அமைப்பே நியூட்டனின் பேரண்ட அமைப்பாகும். விஞ்ஞான விளைவுகள் கடவுளின் ஏற்பாட்டின் அமைப்பில்தான் ஒழுங்காக நிகழ்ந்தன, நிகழ்கின்றன, நிகழப்போகின்றன என்பது நியூட்டனின் அசைக்கமுடியாத நம்பிக்கை. பொருட்களின் மேற்செயற்படும், கண்களுக்குப் புலனாகாத ஈர்ப்புவிளைவு, காந்த விளைவு, மின்விளைவு என்பனவற்றின் காரண கர்த்தா கடவுள் என்றே நியூட்டன் கூறினார். அதற்கு ஏற்புடையதான வகையில் பேரண்ட வெளியும், சடப்பொருட்களும், சடப்பொருட்களின் இயக்கங்களும் ஆண்டவனால் அமைக்கப்பட்டுள்ளன என்பது நியூட்டனின் கருத்து. இன்னமும் சிறப்பாகச் சொல்வ தென்றால், நியூட்டனின் வாதம் அதுவாகும்.

மொத்தத்தில் நியூட்டன் கண்ட பேரண்டமானது சூரியனை மையப்படுத்திய, நிலையான, அளவில் மிகப்பெரியதான அளவிடமுடியாததான ஒன்றாக இருந்தது. பேரண்டத்தினுள் காணப்படும் எல்லாப் பொருட்களினதும் இயக்கங்களும் ஈர்ப்புவிதியாலும், இயக்கவிதிகளினாலும் அறியப்படலாம் என்பதும் நியூட்டனின் முடிவு. அத்துடன் இன்னொரு எடுகோளையும் நியூட்டன் எடுத்திருந்தார். பேரண்டம் முழுவதுமே ஈதர் என்ற கண்களுக்குத் தெரியாத, மிக மெல்லியதான ஊடகம் ஒன்று பரவியுள்ளது என்றும் கூறினார். ஒளியானது துணிக்கைகளின் இயல்புகளை கொண்டுள்ளது எனக் காட்டிய நியூட்டன், வெளியிலே ஒளியாகிய துணிக்கை செல்வதற்கு ஒரு ஊடகம் தேவை எனக் கருதியதால் பேரண்டமானது ஈதர் என்ற ஊடகத்தால் நிரம்பியுள்ளது என்ற முடிவுக்கு வர வேண்டியிருந்தது. ஏனெனில் அப்படியாக இருந்தால் மட்டுமே விண்மீன்களில் இருந்து ஒளியானது பேரண்டத்தின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லமுடியும் என நியூட்டன் கூறியிருந்தார்.

நியூட்டனின் ஈதர் என்ற எடுகோள் பிழையானது என பின்நாட்களில் அயன்ஸ்ரைனால் காட்டப்பட்டாலும், பேரண்டத்தை விளங்கிக் கொள்வதற்கு, இன்னமும் திருத்தங்களைச் செய்வதற்கு இந்த ஈதர் என்ற எடுகோள் மிகவசதியாக இருந்தது.

பேரண்டக்கதை இன்னமும் வரும்.



- கனி -




# SRI GANGA BHAVANI ASTOLOGY

# ஸ்ரீ கங்கா பவானி ஜோதிடாலயம்







## Pandit: VENKATA NARAYAN GURUJI

5வது ஜோதிட பரம்பரைக்குரியவரும் 35 வருட கால ஜோதிட அனுபவமும் கொண்டவருமான

## பண்டித் வெங்கட நாராயன் குருஜி

தென் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்

கைரேகை, ஜாதகம், முகநாடி, சாம்திரிகா லக்சனம், வாஸ்த்து சாஸ்திரம் ஆகியவற்றை மிக துல்லியமாக கணித்து வழங்குவார். திருமணப் பொருத்தம் பார்க்கப்படும். திருமணத் தடங்கல் நீங்க குடும்பத்தில் நிலவுகின்ற கணவன் - மனைவி பிரச்சினைகள் தீர, குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் பெற, வேலை வியாபாரம் ஆகியவற்றில் ஏற்படும் தடைகள் நீங்க மற்றும் எதிர்பாராத சரிவுக்களுக்கும் பரிகாரங்கள் வழங்கப்படும். செய்வினை, கண் திருஷ்டிகளும் எதிரிகள் தொல்லைகள், வழக்குகளும், கெட்ட தோஷங்கள் நீங்க விதிமுறைகளும் கூறப்படும்.

**7 Day a week 10.00am to 9.00pm**
**Spoken Languages:Hindi,English,Tamil**

# Tel:647-995-4466

**An Expert Pandit at Service Past, Present,Future of your life will be read over to you from your face reading. Palm Reading & Horoscope Reading Prediction in love, Marriage, Family Problems, Money Problems, Children Mistakes, Education, Business, Sickness, Promotion, Lucky Stone Ect..**

**We provide you Protection for House, Business & Personal Matters Removal all types of Black Magic and Evil things by Performing Devi Upasana, Laxmipooja, Shanthi Pooja Mandala Poojas (Prayers) & also Protection from Enemies and Jealousy.**

**3075 Hurontario St. Apt #1 Mississauga , ON. L5A 2G9**
**Hwy 10 & Dundas**
**(Upstairs Sam's Convenece)**

# ஒல்லியான அழகிய உடலமைப்புக்கு வழிகாட்டும் யோகாசனம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

நமது உடலைப் பாதுகாப்பாக வைப்பது தான் ஒருவரது முதல் கடமையாகும். அப்போதுதான் நமது உள்ளமும் அமைதிபெறும். இதனை அடைந்திட யோகாசனமும் ஆரோக்கிய உணவு முறைகளும் தான் பெரும் பங்காற்றுகின்றன.

யோகக்கலையைப் பயில்வதால் நம்மை மட்டும் அல்லாமல் மற்றவர்களின் வாழ்வையும் சந்தோஷப்படுத்தலாம். இப்போதெல்லாம் உலகளாவிய ரீதியில் மனிதர்களது எடையும் உடல் பருமலும் அதிகரித்துச் செல்வதாக புள்ளிவிபரம் காட்டுகின்றன. இந்த வகையில் உடலை ஒல்லியாக மாற்ற 'யோகா' கண்டிப்பாக பழகிடவேண்டும். உடலில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் குறைப்பதற்கு தனித்தனி யோகாசனங்கள் இருக்கின்றன. இவ்விடயத்தில் வயிற்றுப் பகுதிதான் முதன்மை பெறுகின்றது. அடுத்து இடுப்புப் பகுதியில் அதிக சதைப்பற்று காணப்படுகின்றது. அடுத்ததாக தொடைப்பகுதி அதிக சதைப்பிடிப்பாக காணப்படும்.

சதைப்பற்றுக்கள் நமது உடலில் உருவாகுகின்றது என்றால் நாம் உண்ணும் உணவில் (புரட்டீன்) அதாவது மாவுச்சத்துப் பொருட்கள்தான் காரணம். நாம் உண்ணும் உணவில் மாவுச்சத்து தவிர்க்கப்படவேண்டும்.

### ஒல்லியாக மாற ஆசனங்கள்

உடலைக் குறைக்கவும் ஒல்லியாக மாறவும் ஆசனங்கள் என்ற வகையில் முக்கியமாக பவனமுத்தாசனம், தனூராசனம், திரிகோணாசனம் அர்த்த மச்சேந்திராசனம், வக்ராசனம், ஹலாசனம், மகாமுத்ரா, யோகமுத்ரா போன்ற ஆசனங்கள் பழகி வந்தால் போதுமானதாகும்.

1. **தனூராசனம்**

செய்முறை - குப்புறப்படுத்துக் கொண்டு பின்புறமாக இரண்டு கால்களையும் பிடித்துக்கொண்டு வயிற்றுப்பகுதி மட்டும் தரையில் படும்படி தலையையும் கால்களையும் மேலே உயர்த்தி முன்னும் பின்னும் ஆடவேண்டும். பின்னர் அதேபோல் பக்கவாட்டிலும் ஆடவேண்டும். இவ்வாறு 20 முதல் 30 தடவைகள் செய்ய வேண்டும்.

**பலன்கள்**

வயிற்றுத் தசைகள் நன்கு இணக்கம் அடைந்து தளர்வடைந்து நன்றாகச் சுருங்கி வயிற்றுப்பகுதி குறைக்கப்படுகின்றன. இந்த ஆசனத்தை தினமும் காலை மாலை செய்யவேண்டும்.

2. **திரிகோணாசனம் செய்முறை**

கால்களை இரண்டு அடி அகலமாக வைத்து



திரிகோணாசனம்


நின்று கொண்டு இரண்டு கைகளையும் நீட்டி வலதுபுறம் சாயவேண்டும். அப்படி சாயும்போது வலது கை வலதுகாலைத் தொடவேண்டும். இதேபோல் இடது காலைத் தொடவேண்டும். 10 முதல் 20 எண்ணிக்கைவரை ஒரே நேரத்தில் செய்யவேண்டும்.

**பலன்கள்**

இவ்வாசனம் செய்யும்போது வயிற்றுப்பகுதியின் பக்கவாட்டிலுள்ள சதைப்பற்றுக்கள் குறைந்து தொடைப்பகுதிமுதல் வயிற்றுப்பகுதிவரையுள்ள சதைகள் குறைக்கப்படுகின்றன. இவ்வாசனத்தைப்போன்று கோணாசனம் செய்யவேண்டும். கோணாசனம் செய்யும்போது கைகள் மட்டும் தலைக்குமேல் தூக்கவேண்டும்.

3. **பவனமுத்தாசனம்**

செய்முறை - தரையில் மல்லார்ந்து படுத்துக்கொண்டு இரண்டு கால்களையும் மடக்கி வயிற்றுப்பகுதியில் அழுத்தியவாறு கைகளால் இறுகப்பிடித்து வலது இடது, மேல், கீழ் ஆக ஆடவேண்டும். 20 தடவை செய்யவேண்டும்.




பவனமுத்தாசனம்

**பலன்** - இவ்வாசனம் வயிற்றுப்பகுதி முதலாக தொடைப்பகுதி வரையுள்ள சதைகளை குறைக்கிறது.

4. **அர்த்த மச்சேந்திராசனம் - வக்ராசனம்**

செய்முறை - இரண்டு கால்களையும் நேராக நீட்டியபடி வலது காலை மடக்கி வைக்கவும். இடது கால் பாதம் வலது தொடையின் பக்கத்தில் தரையில் அழுத்தியவாறு வைத்துக்கொண்டு கைகளைத் திருப்பியவாறு உடலைத் திருகவேண்டும். இதுபோல் மறுபக்கமும் மாறி மாறி செய்யவேண்டும். மூன்றுதடவை 20 எண்ணிக்கைவரை இருக்கவும்.

**பலன்கள்** - இவ்வாசனம் செய்யும்போது






வயிற்றுத் தசைகள் முறுக்கப்படுகின்றது. கொழுப்பு கரைக்கப்படுகின்றது. உடல் ஒல்லியாக மாறுகின்றது.

5. **மகாமுத்ரா**

வஜ்ராசனத்தில் அமர்ந்து கால்களை மடக்கி அதன் மேல் இருந்தபடி கைகளைப் பின்புறமாகச் சேர்த்தபடி முன்புறமாக குனியவேண்டும். இந்த நிலையில் தினமும் இரண்டு நிமிடங்களாவது இருக்கவும்.

**பலன்கள்**

வயிற்றுப்பகுதி நன்றாக அழுத்தப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகிறது. வயிறு தொடைகள் என்பனவற்றிலுள்ள கொழுப்புகள் அனைத்தும் கரைந்து உடல் மெலிந்து அழகாகக் காட்சியளிக்கும்.



மகாமுத்ரா

இவ்வகையான ஆசனப்பயிற்சிகளினால் உடல் பருமல் குறைந்து ஒல்லியாகின்றது. அத்துடன் உணவுமுறையிலும் சிலகட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் இளமைப்பொலிவுடன் கூடிய ஒல்லியான உடலமைப்பைப் பெற முடிகின்றது.

# 'அஞ்சேல்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

நலனிற்காகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை பாரதியார் 'சொல்லுக் கடங்காவே பராசக்தி சூரத் தனங்களெல்லாம், வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' - என்றார்.

இதனையே நயினைப் பெரியார் இல்லற ஞானி இராமச் சந்திரா பின்வருமாறு பாடியுள்ளார்.

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
எனனித்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையை நான் ஒரு போதும் மறந்ததில்லை
சினங் கொண்டு தீங்கிழைக்கும் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகின்றேன்
தனக் கொருவர் ஒப்பில்லாத் தாயே இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

போர் அனர்த்தங்களால் சீர் அழிந்து வாழும் ஈழத்தமிழர் மார்தட்டி மாண்புற்று வாழ்வதற்கு பார் எங்குமுள்ள அரசுகள் பயனார்ந்த





நடவடிக்கைகளை மேற்கொள்ள முழுதுக்கும் முதல்வியான நாகம்மை மூர்த்தம் அருள் பாலிக்க இறைஞ்சுவோம்.

*'தண்ண மலர் தூவித் தாள்கள் தொழுதேத்த எண்ணுமடியார்கட்கில்லை இடுக்கண்ணே'.*


மூதறிஞர் கந்தமுருகேசனார் தமிழ்ப் பண்பாட்டு இணையம் மகிழ்வோடு வழங்கும்

## கந்தமுருகேசனார் விழா

புலம்பெயர்ந்த மண்ணில் பிறந்து, தமிழைத் தாய்மொழியாகப் பேசும் எமது இளம் தலைமுறையினரின் படைப்புக்களை படைக்கின்ற விழா

தமிழ்ப்பண், கனடாப்பண், அக வணக்கம், சிற்றுரை, தமிழ்ப்பா, தமிழ்ப்பாடல், பொதுமறை வழங்கல், நகைச்சுவை, திரைஇசைஆடல், தனிநடிப்பு, விடுதலைப் பாடலுக்கு ஆடல், இன்னும் பல்சுவை நிகழ்ச்சிகளோடு

காலம் : ஆடவைத்திங்கள் 21 ஆம் நாள் 2040 காரிக்கிழமை
July 4th, 2009 ,Saturday
நேரம் : மாலை 5:00 மணி
இடம்: Fairview Library Theatre, 35 Fairview Mall Dr., Toronto, (Donmills & Sheppard)
தொடர்புக்கு: யோகன் தொலைபேசி எண்: **647-297-7120**






ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
**416.289.2033** after 7:00pm



## YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்





மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# மனக்குறையையும் உட்பகையையும் வளர விடாதே

மனத்தாங்கல் தரும் என் மனக்குறையையும், எரிச்சலூட்டும் உட்பகையையும் கைவிடாது என்னுள் இதுவரை வளர்த்ததற்காக என்னை மன்னிக்க நான் இப்போ உடன்படுகின்றேன்.



நீ ஒரு குற்றமும் புரியவில்லை. மற்றவர்களும் குற்றமற்றவர்கள். பார்ப்பவரின் கண்ணில்தான் குற்றம் இருக்கின்றது. நீ குற்றம் என உணர்வதைத்தான் பிறரின் மேல் சுமத்துகின்றாய் என்பதைப் புரிந்து கொள். உனக்கு மனத்தாங்கல் ஏற்படுத்தும் மனக்குறையையெல்லாம் உடனடியாகக் கைவிடு. நீ செய்த குற்றத்தைத் தான் நீ உணர்கின்றாய். இப்படிப்பட்ட அநுபவம் உனக்கு ஏற்படும் என்பதை நீ எதிர்பார்க்காமல் இருந்திருக்கலாம். அல்லது இவ்வளவு சீக்கிரம் அது தலைதூக்கும் என எண்ணாமல் இருந்திருக்கலாம். கடைசியில் அது உன்னை எதிர்கொண்டு உன்முன் வந்தபோது அதை அடையாளங்கண்டு புரிந்துகொள்ளத் தவறியிருக்கலாம்.

உனது பிரச்சினைக்கு மற்றவர்கள்தான் காரணம் எனக் குற்றம் சாட்டுவதை இப்பொழுதுதே நிறுத்து! உனது குற்ற உணர்வினை நீ ஒப்புக்கொள்ள வேண்டி வந்து விடுமோ என்ற பயத்தினால் தான் நீ பிறரைக் குற்றம் சாட்டுகின்றாய் என்பதும் சாத்தியம் தான். ஏன் நீ உன்மேல் குற்றம் சுமத்த வேண்டும்? மிகவும் சீக்கிரமாக அல்லது மிக்க தாமதமாக அல்லது தவறான திக்கில் நீ சென்றபடியாலா? ஒன்றுமே செய்யாது நீ சும்மா இருந்தாற்கூட, உன்னையே நிந்தித்து உன்மேல் நீ குற்றம் சுமத்தத் தேவையில்லை என்பதைப் புரிந்து கொள்.


பிறரை எடை போட்டுச் சீர்தூக்கிப் பார்ப்பதை நிறுத்து. உன்னால் ஏற்க முடியாத உன்னிடத்திலுள்ள குற்றங்குறைகளைத்தான் பிறரின் தவறுகளாக நீ காண்கின்றாய். உன்னை நம்பமுடியாதென்பதை நீ எத்தனை தடவை நிரூபித்திருக்கின்றாய்? சில சமயங்களில் அத்து மீறிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தினாலும் எப்பொழுதும் உண்மையாக சரிவர நடப்பவன் நீ அல்லவா?

நீ குற்றவாளி என நம்பியதற்காக, உன்னை மன்னித்துவிடு. பிறரின் குற்றங்கள் என நீ நம்புபவைக்காக அவர்களை மன்னித்து விடு. உன்னிடத்து குற்ற உணர்வை ஏற்படுத்தும் மற்றவர்களின் வார்த்தைகளுக்காக அவர்களை மன்னித்துவிடு. அன்பில்லாமல் நீ நடந்திருந்தால், அதை ஒத்துக்கொள். பட்சமில்லாமல் செயற்பட்டிருந்தால் அதையும் ஒத்துக்கொள். உனக்குள் புகுந்து உன் குற்றங்குறைகளை நீ அலச ஆரம்பிக்கும்போது மற்றவர்கள் யாவரும் நல்லவர்களாகவே உனக்குத் தென்படுவார்கள்.

நீ ஒப்புக்கொள்ள முடியாத உனது குற்றங்குறைகளை இன்றுவரை மற்றவர்களிடம் கண்டு நீ தூக்கிப் பிடித்திருக்கலாம். உனது பிரதிபிம்பத்தைத்தான் பிறரிடம் நீ காண்கின்றாய் என்பதை உணர்ந்து கொள். பிறரையும் என்னையும் விமர்சித்துத் தீர்ப்பு வழங்கும் தீய பழக்கத்தை இன்று முதல் கைவிட தீர்மானித்துக் கொள்கின்றேன்.

என் வாழ்வின் சகல கோணங்களின் செயல்பாட்டிற்கும் நானே முழுப் பொறுப்பாளி என்பதை இன்று ஒப்புக்கொள்கின்றேன்.

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்
150
மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் 905-270-1214
லலிதா புரூடி



TENNIS LESSONS
By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for scarborough, Markham & Richmond Hill Areas. 36 years of experience. Group Classes & Private Coaching Possible
David Selvadurai : 416.495.1277



# கொண்டோவிற்குரிய...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

காலகட்டத்தில் பொருட்களிற்கும், வியாபாரத்திற்கும் உரிய வரியும் (Goods & Sales Tax - GST) சேர்த்து அறவிடப்படும். உதாரணமாக மாதாந்த செலவு $300 டொலர் ஆயின் $315 அறவிடப்படுகிறது. ($15 - GST) ஆகும்.

இவ்வாறு உருவாக்கப்படும் வரவு செலவு கணக்குத் திட்டம் புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தொகுதிக்கு முதல் தடவையாக உருவாக்கப்படுவதால் ஏற்கனவே இதுபோன்ற கட்டிடத்தொகுதியின் வரவுசெலவுத்திட்டத்தை நகலாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றது. இந்த மாதாந்த கொடுப்பனவு நடப்பு ஆண்டில் ஏற்படும் எதிர்பாராத செலவுகளிற்கேற்ப அதிகரிக்கலாம் என்பதனையும் கவனத்தில் கொள்க.

**இவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படும் நிறுவனம் எவ்வாறு இந்தத்தேவைக்காக அமர்த்தப்படுகின்றது என்பதனைப் பற்றிப் பார்ப்போம்.**

கொண்டோ மனை, கொண்டோ வியாபாரக்கட்டிடம் போன்றவற்றின் எண்ணிக்கைக்கேற்ப ஆகக்குறைந்தது மூன்று எண்ணிக்கை உள்ளவர்களைக் கொண்ட ஒரு சபை (Board) உருவாக்கப்படும். இவர்களை Board of Directors எனக் கூறப்படும். இவர்களிற்கு எதுவித சம்பளமும் கிடையாது. 100% Volunteer Job. இந்த Board of Directors பல முகாமைத்துவ நிறுவனங்களை அழைத்து, இவ்வாறான கட்டிடத்தொகுதியை பராமரிப்பதற்குரிய செலவுத்தொகை பற்றிய மதிப்பீட்டைப் பெற்று, இந்த நிறுவனங்களில் எந்த நிறுவனம் சிறந்ததாகவும், முகாமைத்துவச் சந்தையில் நிலையானவதாகவும், நல்லபெயருடன் இயங்குவதையும் மனதில் கொண்டு நியாமான வருடாந்த கொடுப்பனவைக் கொண்டு தெரிவு செய்யப்பட்டு, குறிப்பிட்ட கட்டிடத் தொகுதியை முகாமைத்துவம் செய்வதற்கு வருடாந்த ரீதியில் அமர்த்தப்படும். இந்த Board of Directors ஐ தெரிவு செய்யும் போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். பொதுவாக Board of Directors ஆக வருபவர்கள் அனேகமாக அந்த கட்டிடத்தொகுதியில் வாழுபவர்களாக அல்லது உரிமையாளராக இருப்பார்கள்.

தாம் வசிக்கும் கட்டிடம் அல்லது சொந்தமாக வியாபாரம் செய்யும் கட்டிடத்தொகுதி நல்ல நிலையில், பாதுகாப்பாக இருப்பதுடன், எதிர்காலத்தில் கட்டிடத்தொகுதியின் பெறுமதியை அதிகரிக்க கூடியதாகவும் இருக்க கூடியதாக கட்டிடத்தொகுதியை முகாமைத்துவம் செய்வதே நல்லது.

மாதாந்த கொடுப்பனவு (Maintenance fee) மிகவும் குறைவாக இருக்க வேண்டும் என்பதற்காக கட்டிடத்தொகுதியின் தரத்தை குறைத்தல் புத்திசாலித்தனமாகாது. இதற்காக மிகவும் மலிவான, அனுபவமற்ற முகாமைத்துவ நிறுவனங்களை தேர்ந்தெடுத்து கட்டிடத்தொகுதியை முகாமைத்துவம் செய்தல் சிறந்ததாகாது.

என்னுடைய அனுபவத்தில் கண்ட உண்மை, பல முகாமைத்துவ நிறுவனங்களும் பல Board of Directors உம் சேர்ந்து கட்டிடத்தொகுதிகளை சிறப்பான முறையில் நடத்தி வருகிறார்கள். ஆனாலும் சில கட்டிடத்தொகுதியில் சில Board of Directors பணம் உழைப்பதற்காகவே நுழைவார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு Board of Directors ஆக இருப்பார்கள். தம்முடன் சேர்ந்து, தமது தேவையை கவனிக்கக் கூடிய முகாமைத்துவ நிறுவனத்தை அழைத்து வருவார்கள். ஆரம்பத்தில் சில செலவுகளை குறைப்பார்கள். ஆனால் அவர்களின் நோக்கம் நிறைவேறும் வரை காத்திருப்பார்கள். தமது மனைகளை அல்லது வியாபார அலகை விற்பதற்கான கவனமும் எடுத்துக் கொண்டு இருப்பார்கள். தகுந்த சந்தர்ப்பம் வரும்போது தமது மனையை அல்லது வியாபார நிலையத்தை விற்றுவிட்டு, சுருட்டக் கூடியதை சுருட்டிக் கொண்டு போய்விடுவார்கள்.



அதன் பின்னர் குறிப்பிட்ட கட்டிடத்தொகுதி பண நெருக்கடியில் தடம் புரளும். இதனை நிவர்த்தி செய்ய மாதாந்த கட்டுப்பணத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது Special Assessment என்ற மேலதிக தொகையை உரிமையாளர்களிடம் இருந்து பெறப்படுதல் வேண்டும். எனவே பொதுவாக வருடாவருடம் நடத்தப்படும் கட்டிடத்தொகுதிக்குரிய பொதுக்கூட்டத்திற்கு சமூகமளித்து தரமானவர்களை, அவர்களின் பின்னணியை ஆராய்ந்து எந்த நோக்கத்திற்காக இவர்கள் இந்த சபையில் வரவிரும்புகிறார்கள் என்பனவற்றை ஆராய்ந்து தகுந்தவர்களை சபைக்கு தெரிவு செய்வதன் மூலம் ஒரு ஆரோக்கியமான 'Board of Directors' ஐ உருவாக்கலாம். இதுவே எதிர்காலத்தில் கட்டிடத்தொகுதியின் பெருமையையும் மதிப்பையும் அதிகரிக்கச்செய்யும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களை எனது ஆஸ்தி வியாபாரத்தில் அனுபவ ரீதியாக பலமுறை கண்டுள்ளேன்.

எனவே ஒரு மனை அல்லது வியாபார அலகை வாங்கும் போது, இந்த தொகுதியில் ஏதாவது Special Assessment வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதா என்பதனை உங்களது சட்டத்தரணியைக் கொண்டு அறிந்து கொள்ளவும். இதுவே முதல்படி. நீங்கள் வாங்கும் மனை அல்லது வியாபார நிலையத்தின் எதிர்காலம் மிகமுக்கியமானது.

## Status Certificate

இந்தக் கட்டிடத் தொகுதி (Condominium Building) சம்பந்தமான சகல நன்மை தீமைகளும் Status Certificate என்ற கொண்டோ சம்பந்தமான ஆவணம் மூலம் அறிந்து கொள்ளலாம். இந்த ஆவணம் $100 செலுத்தி இந்த கட்டிடத்தொகுதியை முகாமைத்துவம் செய்யும் நிறுவனத்திடம் இருந்து பெற்று அறிந்து கொள்ளலாம்.

இதுவே கட்டிடத்தொகுதி சம்பந்தமான சகல நிலைப்பாட்டையும் கொண்டுவரும் கண்ணாடி. முக்கியமாக இதன் பண நிலைமை, கட்டிடத்தொகுதியில் எதிர்காலத்தில் எதிர்பார்க்கக்கூடிய செலவுகள் போன்றவற்றை கவனத்தில் கொள்ளவும். உங்கள் மனை அல்லது வியாபார இடத்தினை நீங்கள் கவனம் கொள்ளாவிடின் வேறு யார் கவனம் கொள்ளுவர்.

# பெயர் இடுக...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

பாடல்களிலும் திருநீற்றின் மகிமை பெருமைகளையும் அதனை நெற்றியில் உடம்பில் பூசினால் பெற்றுக்கொள்ளும் இன்பம் புண்ணியம் பக்தி சித்தி முதலியனவும், உடம்பின் நோய்களைத் தீர்க்கலாம் பாவங்களைப் போக்கலாம் என்றும் பல நன்மைகளைச் சுட்டியதோடு, “ஆலவாயான் திரு நீற்றைப் போற்றி புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன் தீப்பிணியாயின தீரச் சாற்றியபாடல்கள் பத்தும் வல்லவை நல்லவை தாமே” என்று இறை நம்பிக்கையோடும் தன்நம்பிக்கையோடும் அடித்துச் சொல்லுகின்றார்.

இது போலவே கோளாறு பதிகத்திலும் வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன் என்று தொடங்கியவர்.. கடைசிப்பாட்டில் தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாதவண்ணம் உரைசெய் ஆன சொன்மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர். ஆணை நமதே என்றும் சத்தியம் செய்கின்றார். இதுவும் இறைநம்பிக்கையோடு கூடிய தன்நம்பிக்கையாகும். இது மட்டும்தான் நான் முகன் ஆதியாய பிரமாபுரத்து மறைஞான ஞானமுனிவன் என்கிறார். இது தற்புகழ்ச்சியல்ல. தன்முனைப்பு அல்ல. தன்நம்பிக்கையும் தகுதி நம்பிக்கையுமாகும்.

கந்தசஷ்டி கவசம் தந்த தேவராய சுவாமிகளும் தனது பெயரைக் குறிப்பிட்டு, தனது பாடலால் பயன்விளையும் என்கிறார்.

‘பாலன் தேராயன் பகர்ந்தன் காலையில் மாலையில் கருத்துடன் நாளும் ஆசாரத்துடன் அங்கம் துலக்கி நேசமுடன் ஒரு நினைவதுவாகி கந்தசஷ்டிகவசம் இதனைச் சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்’ என்று பாடிச் செல்கின்றார். தன்பெயர் இடுவதும் நிறுவுவதும் உண்மைக்கும் சத்தியத்திற்கும் உதவியதை இவை போன்று பலருடைய ஆக்கங்களில் காணமுடிகிறது.

இயற்பெயர் இட்டுப்பாடியிருப்பவைகளை பிற்சேர்க்கையாக அவர்களின் பெயரை வேறுசிலர் சேர்த்திருப்பார்கள் என்ற ஊகம் பிழையானதே. ஓர் உண்மையை வெளிப்படுத்துவதற்கு தன்நம்பிக்கை கொண்டவர்கள் தமது பெயரை தாமே வெளிப்படையாக கூறுவது ஒரு இயல்பூக்கமே. நடைமுறைவாழ்க்கையில் நம்மில் பலர் ‘நான் சொல்லுகிறேன் செய். நான் சொன்னதாகச் சொல்லு. நான் செய்தேன் என்று கூறு. நான் சாட்சி. நான் கண்கண்ட சாட்சி எனத் தமது பெயரைச் சத்தம் போட்டு சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம். இவையெல்லாம் சத்திய அலைகளாக உண்மையின் வெளிப்பாடுகளாக வருபவை.

தமிழ் மறை என்று போற்றப்படும் திருக்குறளைத் தந்த வள்ளுவருக்கே ஆய்வாளர்கள் சிலர் நாமம் அழிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கும் காலம் இது. திருக்குறள் பலர் எழுதிய தொகுப்புநூல் என்று ஒருமுனைவர் ஆய்வு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். (துளசி இராமசாமி). பல துறை அறிவு ஒருவருக்கு இருக்குமா? ஒரு விடயத்தைப்பற்றி பத்துபத்துகுறள்களை ஒருவரே எழுதியிருப்பாரா? கூறியது கூறல் குற்றம் வந்து விடுமே என்பன போன்ற ஐயங்கள் முனைவருக்குத் தோன்றியிருக்கிறது. திருவள்ளுவர் இல்லற ஒழுக்கமும், துறவறநிலை விளக்கமும், அரசியல் ஞானமும் பெற்றவர் என்பதும் திருவள்ளுவர் பிரமச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் வரை இருந்து குடும்ப அனுபவமும், குழந்தைகள் அனுபவமும் சமுதாய வாழ்வனுபம் முதலியவை பெற்றவர் என்பதை முனைவர் மறந்து விட்டார் போலும்.

திரை உலகில் கதை மட்டும் ஒருவர் எழுத வசனத்தை இன்னொருவர் எழுதி திரைக்கதையை வேறு ஒருவர் அமைக்க பாடல்களைப் பிறிது ஒருவர் இயற்ற இயக்கத்தை வேறு ஒருவர் செய்த நிலைமாறி கதை திரைக்கதை வசனம் பாடல் இவற்றினோடு படப்பிடிப்பு என்று எல்லாவற்றையும் ஒருவர் சுமக்கும் நகர்த்தும் நிலை வந்ததே. இவை நமது காதிலும் கண்ணிலும் படுகிறதே. இதுபோலவே திருவள்ளுவர் ஒருவராகவே தனியராகவே திருக்குறளின் 1330 பாடல்களையும் இயற்றியிருக்கலாமே என்ற சிந்தனை ஏன் சிலருக்கு வருவதில்லை. காலத்தின் கோலமா? கலைமாமணிக் கோலமா? யாம் அறியோம்.

சொந்த அனுபவம் ஒன்று நினைவில் தட்டுப்படுகிறது. கனடாவில் 1997ஆம் ஆண்டு இரு சகோதரிகளின் நடனக்கலை Video ஒன்று தயாரித்துள்ளார்கள். காட்சி காட்சியாய் ஒவ்வொரு கருத்தையும் கட்டம் கட்டமாகப் படம் பிடித்தனர். ஒவ்வொரு கட்டத்தையும் விளங்கவைக்கும் விதத்தில் பொருத்தமான தமிழ் உரை ஆக்கத்தினை எழுதித்தரும்படி என்னைக் கேட்டார்கள். எழுதிக் கொடுத்தேன். உரை நடையும் நடனச் சித்தரிப்பும் சிறப்பாய் அழகாய் அமைந்தது. பரதநாட்டியக் கலையின் புதிய பரிமாணமாய் அந்த Video கணிப்புப் பெற்றது. இரண்டு மூன்று இடங்களில அதன் வெளியீட்டு விழாவும் நடந்தன. அதன் உரை நடைநேர்த்தி பலராலும் பேசப்பட்டது. அதற்கான விமர்சனக்கட்டுரை ஒன்று கனடா வார இதழ் ஒன்றில் எழுதப்பட்டது. அக்காலத்தில் கவிஞர் வைரமுத்து கனடாவுக்கு வந்த நேரம் அந்த Video வுக்கு உரிய உரை நடையை வைரமுத்து எழுதினார் என்று விமர்சகர் குறிப்பிட்டிருந்தார். இதனைக் கேள்வியுற்ற நான் Video தயாரித்தவர்களிடம் கவலை தெரிவித்தேன். அவர்கள் என் பெயரை Video வில் சேர்க்காததற்கு அவர்களுடைய அக்கறையின்மையே காரணம் வேண்டும் என்று இருட்டடிப்புச் செய்யவில்லை. தவறுதல், மறதி என்றானது என்பதும் எனக்குப் புரியும். மறுபதிப்பில் உங்கள் பெயரைப் போடுகிறோம் என்றார்கள். மறுபதிப்பில் அதன் உறையில் போட்டார்கள். ஆக்கம் படைப்பு சிருஷ்டி என்பவைக்கு இயற்றியவரின் இயற்பெயர் இடுதல் என்பது ஒரு வரலாற்றுக்கடமையாகும். ஊரும் பெயரும் அடையாள ஆவணமே.

இயற்பெயர் இட்டு உண்மை பரப்புதல் தேவையானது.

# நவதிருப்பதி...

16ஆம் பக்கத்தொடர்ச்சி



சுவற்றில் உள்ள பிரம்மனை தாமரையில் தாங்கி இருப்பது போல உள்ள கோலம், வேறு எங்கும் காணக் கிடைக்காதது. கோபமடைந்த பூமா தேவியை அமைதியடையச் செய்ய மகா விஷ்ணு இத்தலத்துக்கு அழைத்து வந்ததாக ஐதீகம்.

நவகிரகங்களில் சனியின் அம்சம் கொண்டது பெருங்குளம். இங்கு மூலவர் வேங்கட வாணன், கமலாவதி தாயார், குழந்தை வல்லித்தாயார் ஆகியோருடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். புத்திர பாக்கியம் வேண்டி நின்ற வேதசாரன் - குமுதவல்லி தம்பதியருக்கு லட்சுமிதேவியே மகளாய் வந்து பிறந்த தலம் இது என்பது ஐதீகம். இவ்வூருக்கு திருக்குளந்தை என்ற பெயரும் உண்டு.

நவகிரகங்களில் சுக்ரனின் அம்சம் கொண்டது தென்திருப்பேரை. இங்குள்ள பெருமாளின் பெயர் மிக அழகானது. மகர நெடுங்குழைகாதன். குழைக்காதுவல்லி என்பது தாயாரின் பெயர். இங்கு கோயிலில் சிற்பங்கள் இல்லையென்றாலும், பார்க்கவும் தரிசிக்கவும் வேண்டிய அழகிய கோயில் இது. சுக்கிரன் மற்றும் வருணன் ஆகியோர் இங்கு தவம் செய்த காரணத்தினால் இது வருண சேத்திரம் என்று அழைக்கப்படுகிறது.

# தலை நிற்கும் கலைச்செல்வம்

சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள தேவநேயப்பாவாணர் நூலக அரங்கில் ‘கவிதைச் சிறகுகள்’ அமைப்பினரால் ‘தலை நிற்கும் கலைச்செல்வம்’ என்னும் தலைப்பில் 18 . 06 . 2009 இல் கவியரங்கம் ஒன்று அரங்கேறியது. தற்போது இலக்கியப் பயணத்தில் நிற்கும் கனடாவாழ் கந்தசாமி முத்துராஜாவும் அதில் பங்கேற்று கவிதை வாசித்தார். அதன் நிழல் படமும் கவிதையும் ‘விளம்பர இதழ்’ வாசகர்களுக்கும் தரப்படுகிறது.



இயல் இசை நாடகம்
எங்கள் கலைச்செல்வம்
இலங்குபுகழ்
பாணரும் புலவரும்
நமக்களித்த
தலைச் செல்வம்

‘என்மனார் புலவர்’
என்று
அங்கங்கே
எடுகோள்கள்
எடுத்துக்காட்டுவர்
தொல்காப்பியர்

எனவே
தொல்காப்பியத்துக்கு
முந்தியது
எங்கள் கலைச்செல்வம்

ஓவியம் சிற்பம்
கைப்பணிப் புனைவுகள்
சித்தம் ஆயுர்வேதம்
மூலிகை மருத்துவம்
நமது
மூதாதையர்
நமக்களித்த கலைச்செல்வம்

தமிழ் படித்தால்
சம்பளம் குறைவு
தமிழ் பேசினால்
முகம் சுழிப்பு

தமிழ்ப் புத்தகங்கள்
தமிழ் இசைக்கருவிகள்
தமிழ் ஓவியங்கள்
தமிழ்ச் சிற்பங்கள்
தமிழ் மருத்துவங்கள்
தமிழ்ப் படைப்புக்கள்
பெறுமதியில்
சில்லறைக் காசு

ஆயிரம்
தமிழ் நூல்கள் விற்பதற்கு
பெரும்பாலும்
ஆறு வருடங்கள்
கடந்து செல்லும்

சங்கத் தமிழை
செந்தமிழ்க்
கலைப் படைப்புக்களை
நவீன அறிவியலில்
வளர்ந்து வரும் அறிஞர்கள்
முன்னெடுப்பர்

அவற்றை
உலகுக்குள் எடுத்துச் செல்வர்

உலகையும்
தமிழ்
தமிழ்க் கலைகளுக்குள்
மொழி மாற்றம் செய்து
எடுத்து வருவர்

இசைப்புயல்
ஏ. ஆர். ரகுமான்
ஒஸ்கார் மேடையில்
நின்று
தமிழ் பேசியது
சிறப்பான ஓர் எடுத்துக்காட்டு

அவ்வழியே.

‘தலை நிற்கும்
கலைச்செல்வம்’.



முத்துராஜா

**45ம் நாள் ஆத்ம சாந்தி பிரார்த்தனை**

இலங்கையில் இடம்பெற்ற போர் காரணமாக காலஞ்சென்ற பொது மக்களுக்காக

**விசேட சாயி பஜன்**

இடம்: மேருபுரம் பத்தரகாளி அம்மன் கோயில்
1510 Birchmount Road,Scarborough.

காலம்: 01 - 07 - 2009 புதன்கிழமை மாலை 6.30 மணி

அனைத்துத் தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

மேலதிக தொடர்புகளுக்கு: 647-818-7443.


ROADSPORT HONDA
www.ROADSPORT.com
HONDA
Roadsport Honda
New & Used
Great Deals
Buy or Lease
Great Savings
Call Dan Lanka
RETAIL SALES MANAGER
Pioneer in Honda Sales in Toronto
Serving The Community Since 1996
Direct: 416-454-1107
A Truly Professional Service Provided To The Community.
940 Ellesmere Road. At Kennedy
For New or Used Hondas in Toronto Call Dan
or 416-291-9501 Ext. 2251

# உலகப்புகழ்பெற்ற பொப் இசை சக்கரவர்த்தி மைக்கல் ஜாக்ஸன் மரணம்

பிறப்பு - ஒகஸ்ட் 29, 1958
மறைவு - யூன் 25, 2009



உலகப் புகழ்பெற்ற, பொப் இசை பாடலின் மன்னன் என பெயர் எடுத்து உலகம் முழுவதும் தமக்கு என பலகோடி ரசிகர்களை உருவாக்கிய அமெரிக்க வாழ் கறுப்பினத்தவரான மைக்கல் ஜோசேவ் ஜாக்ஸன் கடந்த வியாழன், யூன் 25ம்திகதி அமெரிக்காவில் உள்ள தமது இல்லத்திலிருந்து திடீர் மாரடைப்பினால் வைத்தியசாலைக்கு எடுத்து சென்ற போது மரணமானார். இறக்கும்போது அவருக்கு வயது 50. பாடகர், இசை எழுத்தாளர், இசை தயாரிப்பாளர், இசையமைப்பாளர், நடனகாரர், நடன அமைப்பாளர், நடிகர், வணிகர், பெரும் செல்வந்தர் என புகழ் பெற்ற மைக்கல் ஜாக்ஸன் இவரது பெற்றோருக்கு உள்ள ஒன்பது பிள்ளைகளில் ஏழாவதாக பிறந்தார். தமது 11வது வயதில் இவரின் நான்கு சகோதரர்களுடன் சேர்ந்து 'த ஜாக்ஸன் 5' என்னும் இசை குழுவினை உருவாக்கினார். இவரது புகழ், இசைத்துறை, சினிமாத் துறையினை ரசிக்கும் உலம் வாழ் சகலரும் அறியப்பட்ட ஒரு பிரபல்யமாகவே இருந்து வந்தார். 1972இல் தனது தனி அல்பத்தை வெளியிட்டார். இவரது இசைத்தட்டுகள் பல பில்லியன் டொலருக்கு விற்பனையாகியிருந்தது. நடனத்துடன் பாடல்களை இசையமைத்துப் பாடும் அவரது பாணி தனித்துவமானது. 1978இல் தனது முதல் திரைப்படமான 'த விஸ்" (The Wiz) இல் நடித்தார்.

1982 இல் "திரில்லர்" அல்பம் வெளியிட்டார். அதற்கு 8 "கிராமி" (Grammy Award) இவ் அல்பம் 4 கோடியே 10 இலட்சம் இசைத்தட்டுக்கள் விற்பனையாகி கின்னஸ் புத்தகத்திலும் இடம்பிடித்தது.

எதிர்வரும் ஜூலை மாதத்தில் இலண்டனில் மாபெரும் இசை நிகழ்சியை நடத்தத் திட்டமிட்டிருந்தார். தீவிர ஒத்திகையும் நடைபெற்றுவந்தது. "இறுதித்திரை" என்று பெயரிடப்பட்ட அந்நிகழ்ச்சி இறுதியில் நடைபெறாமல் போய்விட்டது. இவரது தனித்துவமான நடனபாணியும் குரலும் உலகெங்கு எல்லாத்தரப்பு மக்களையும் கவர்ந்திருந்தது.

அவ்வப்போது பாலியல் தொடர்பான புகார்களிலும் சிக்கினார். கறுப்பினத்தவரான இவர் தனது உடல் முழுவதையும் தொடர் "Cosmetic Surgery" மூலம் வெள்ளையாக மாற்றிக் கொண்டார். முகத்தில் மட்டும் பல முறை கொஸ்மற்றிக் சிகிச்சை செய்யப்பட்டதால் இவரது முகம் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் உருமாறத்தொடங்கியிருந்தது.

இவரது மரணம் உலகம் முழுவதும் உள்ள பெரும்பான்மையான பொதுசன தொடர்பு சாதனங்களிலும் பிரபல்யமாக அறிவிக்கப்பட்டது.

இசைத்துறையில் இவரது கோட்பாடும் இவரது பாணியில் உருவாக்கப்படும் இசைகள் மாதிரி அதேபாணிகளின் அடிப்படையிலேயே ஏராளமான இந்திய திரையிசை பாடல்கள், ஆட்டங்களும் உருவாக்கப்பட்டு தற்போது பிரபல்யம் அடைந்து வருகின்றன.

1984, மே 14ஆம்திகதி அமெரிக்க வெள்ளை மாளிகையில் அன்றைய ஜனாதிபதி றொனால்ட் றீகன் அவர்களினால் ஜனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு இருந்தார்.



மைக்கல் ஜக்சன் மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதும் ஓர் இசைக்கலைஞன் என்ற முறையில் சர்வதேச ரீதியில் அவரது திறமை அபரிமிதமானது என்பதையும் அதிசயிக்கத்தக்கது என்பதையும் எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க
எந்தவித அடமானக் கடன்களும் பெற
Direct - 416.575.5055
Anton Jeeva, P.Eng.
Real Estate Broker
Principal Mortgage
RE/MAX

House for sale $339,900

• Sawdon Dr
• Burns/Thickson/401
• Whitby
• 4 + 2 Bedrooms
• 4 Washrooms
• Finished bsmt
• Fridge, Stove, Dryer, washer, All Light Fixtures, All Window Coverings.

House for Sale $559,900

• Steppingstone Tr
• Steels & Staines
• 4 Bedrooms • 3 Washrooms
• Finished bsmt • Stove, Fridge, B/I Dishwasher, Washer & Dryer, All Window Coverings, All Electric Light Fixtures.Double Garage With opener

HOUSE FOR SALE $329,900

• Windbrook Grve
• Britannia/Terry Fox
• 2 - Storey Brick house
• 3 Bedrooms
• 3 Washrooms
• Fridge • Stove
• Electric Light Fixtures,
• Central Air Condition
• All Window Coverings

HOUSE For Sale $314,900

• Deerpark Cres
• Vodden/Williams Pkwy /Hwy10
• Bedrooms: 3
• Washroom: 4
• Fridge, Stove, Washer, Dryer, All Elf, All Window Coverings

CONDO.FOR SALE $199,900
McCowan & HWY 401

• Mccowan/Hwy 401
• 2 Bedrooms
• 2 Washrooms
• Elfs, Fridge, Stove, Newer Dishwasher, Built-In Microwave, Washer, Dryer, Window Coverings (Exclude Mbr Drapes), Broadloom W/ Laid.

Condo. for sale $249,900

• 83 Mondeo Dr. #112
• Birchmount & Ellesmere
• 2+1 Bedrooms
• 2 Washroom
• Fridge, Stove, Washer, dryer

HOUSE For Sale $339,900

• 29 Sawdon Dr.
Burns/Thickson, • Whitby
• Bedrooms: 4 + 2
• Washrooms: 4
• 2 parking
• Finished BSMT
• Fridge, Stove, Washer, Dryer, All Window Coverings

Condo. FOR SALE $899,000

• Nymark Ave
• Leslie/Sheppard
• 5 + 4 Bedrooms
• 6 Washrooms
• Ample Car Park, Lovely Ceiling Heights, Beautiful Oak Staircase, Bright Spacious Large Windows, Skylight, A Definite Faire In The Air.

HOUSE For Sale $579,000

• Canal Rd E.
• Simcoe Rd /Canal
• Bradford West
• 23 acres of land
• 25 Minutes from Toronto • 2 Stoves
• 2 Fridges, Washer, Dryer..

CDN Financial & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO
REMAX VISION REALTY INC.
Speciallized in Power of Sale Homes

MAX 2000
விடுமுறை காலங்களில் சுற்றுலா செல்லத் தயாராகுங்கள்!
ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது கிழமை U. S. A பயணம்

July 31 to August 06
Prince Edward Island சுற்றுலா
New York City சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், Shopping.
Vancouver & West Cost 14 days
August Civic Holiday Long Weekend
Plan Your Holiday Around These Dates
இவ்வாண்டு விடுமுறைக்கான பயண ஒழுங்குகள் ஏராளம் நீங்கள் தயாரா?
விபரங்களுக்கு: 416-609-2542